2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

சமூக சேவைகள் திணைக்களம்

செலவினத் தலைப்பு இலக்கம்.:- 216

சமூக சேவைகள் திணைக்களம்
இரண்டாவது மாடி
செத்சிறிபாய - கட்டம் II
பத்தரமுல்ல.

தொலைபேசி	- 0112187050
பெக்ஸ்	-0112186276
மின்னஞ்சல்	- dirss@sltnet.lk
	-dirssdss@gmail.com
இணையத்தளம்	- www.socialservices.gov.lk

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் தோற்றுவாய்/நிறைவேற்றுப் பொழிப்பு

1.1	அறிமுகம்	3 - 4
1.2	நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்	5
1.3	பிரதான செயற்பாடுகள்	6
1.4	நிறுவனக் கட்டமைப்பு	7
1.5	திணைக்களத்திற்கு உரித்தான பிரிவுகள் மற்றும் நிறுவனங்கள்	8-17
1.6	திணைக்களத்தின் கீழுள்ள நிதியம்	18
1.7	வெளிநாட்டு உதவி பெறும் கருத்திட்டங்களின் விபரம்	19

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

2.1	அங்கவீனமுற்ற நபர்களுக்கான நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	20-29
2.2	போதைக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வு மற்றும் சமூகமயப்படுத்தல் திட்டம்	30-31
2.3	வெற்றிகள்	31
2.4	சவால்கள்	32
2.5	இலக்குகள்	32-33

அத்தியாயம் 03 - வருடத்தின் ஒட்டுமொத்த நிதிசார் செயற்திறன்

3.1	நிதிச் செயலாற்றுகை கூற்று	34-35
3.2	நிதி நிலைமைக் கூற்று	36
3.3	காசுப் பாய்ச்சல் கூற்று	37-38
3.4	நிதிக் கூற்றுக்கான குறிப்புகள்	38
3.5	வருமானச் சேகரிப்பு செயலாற்றுகை	38
3.6	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்துவதற்கான செயலாற்றுகை	39
3.7	நி.பி. 208 இன் பிரகாரம், பிற அமைச்சுக்கள்/திணைக்களங்களின் முகவர் ஒருவராக இத் இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்	39
3.8	நிதியல்லாத சொத்துக்களினை அறிக்கையிடுவதற்கான செயலாற்றுகை	39
3.9	கணக்காய்வாளர் அறிக்கை	40-55

அத்தியாயம் 04 - நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள்

4.1	நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய)	56

அத்தியாயம் 05 – நிலையான அபிவிருத்தி இலக்குகளினை நிறைவேற்றுவதன் செயலாற்றுகை

5.1	அடையாளம் காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDG)	57-58
5.2	நிலையான அபிவிருத்தி இலக்குகள் பூர்த்தி செய்வதன் வெற்றிகள் மற்றும் சவாவல்கள்	58

அத்தியாயம் 06 - மனித வளத் தோற்றுவாய்

6.1	ஆளணி முகாமைத்துவம்	59-60
6.2	நிறுவனத்தின் செயலாற்றுகைக்கான மனிதவளப் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தும் விதம்	61
6.3	மனிதவள அபிவிருத்தி	61-65

அத்தியாயம் 07 – இணக்க அறிக்கை

7.1	இணக்க அறிக்கை	66-72

அத்தியாயம் 01
நிறுவனத்தின் தோற்றுவாய்/நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

ஸ்ரீமத் ஐவர் ஜெனிங்க்ஸ் அவர்களின் தலைமையில் 1944 ஆம் ஆண்டில் நியமிகப்பட்ட சமூக சேவைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் கீழ் 1948 பெப்ரவரி மாதம் 01 ஆந் திகதி சமூக சேவைகள் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது சமூக சேவைகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் திணைக்களத்தின் கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுகின்றன.

ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதக நிலைக்கு உட்பட்ட நாட்டின் சமூகங்களுக்கு மிகவும் சிறந்த சூழலொன்றினைக் கட்டியெழுப்பும் நோக்கில் சமூக சேவைகள் திணைக்களம் தனது உன்னத செயற்பாடுகளினை நிறைவேற்றி வருகின்றது. திணைக்களத்தின் பணிக்கூற்றினைத் தழுவி 2021 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடுகளுக்கு இணங்க இனங்காணப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களினைத் திட்டமிட்டு அடி மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை அமுலாக்கியுள்ளது. அதன் பிரகாரம் சமூக சேவைகள் திணைக்களத்தினூடாக 2021 ஆம் ஆண்டில் இடம்பெற்ற செயற்பாடுகளுடன் தொடர்பான ஒட்டு மொத்தத் தகவல்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

விசேடமாக அங்கவீனமுள்ள சமுதாயத்தினை இலக்காகக் கொண்டு அவர்களின் சமூகப் பொருளாதாரத்தினை சிறந்தவாறு முன்னெடுப்பதற்குப் பல நிகழ்ச்சித் திட்டங்கள் இடம்பெற்றுள்ளதுடன், அதனுள், திணைக்களத்தின் அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதற்கான வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் யாவருக்கும் இரண்டாவது சேவையாக இல்லாத வகையில் நிறைவேற்றி வருகின்றது. விசேடமாக அங்கவீனமுற்ற இளைய சமுதாயத்தினை இலக்காகக் கொண்டு அமுலாக்கப்பட்ட நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக வெற்றிகரமான முன்னேற்றமொன்றினை சுவீகரிப்பதற்கு திணைக்களத்திற்கு இயலுமை கிட்டியுள்ளது.

மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அங்கவீனமுற்ற சமுதாயத்திற்குத் தேவையான சேவைகளினை வழங்குவதற்கு சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் (CBR) முறைசார் திட்டமொன்றின் பிரகாரம் திட்டமிட்டு அமுலாக்கப்பட்டுள்ளது. இதன் புதிய அங்கமாக மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் விசேட கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அதன் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் முன்னிக் கருத்திட்டமாக அங்கவீனமுற்ற நபர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான புதிய பண்ணடக்குறியுடன் கூடிய சந்தை வாய்ப்புக்களை அறிமுகப்படுத்தல் காணப்படுகிறது.

முன்பிள்ளைப் பருவத்தில் குழந்தைகளுக்கு ஏற்படும் உடல் மற்றும் உளப் பிரச்சினைகளைக் குறைப்பதற்கு முற்கூட்டியே தலையிட்டு தேவையான சேவை வசதிகளை வழங்குவதற்கு இத்திணைக்களத்தினூடாக அமுலாக்கப்படும் நாவின்ன சிறுவர் வழிகாட்டி நிலையத்தினூடாக அங்கவீனமுற்ற குழந்தைகளின் நலன்புரிக்காக உன்னதமான கடமைப் பொறுப்பு நிறைவேற்றப்படுகின்றது.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களைப் புனர்வாழ்வளிக்கும் நிகழ்ச்சித் திட்டம், திணைக்களம் அமுலாக்கியுள்ள பிரதான நிகழ்ச்சித் திட்டமாகும். அதன் கீழ், போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை விடுதியில் வைத்து புனர்வாழ்வளித்தல், அவர்களினைச் சமூகத்துடன் ஒன்றிணைத்தல் மற்றும் பிரதேச மட்டத்தில் மக்களினை விழிப்புணர்வூட்டுவதன் கீழ் தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களினை முன்னெடுப்பதனூடாக நாட்டின் எதிர்கால சந்ததியின் நலன்புரியினை முன்னிட்டு, குழந்தைகள் இளைஞர் யுவதிகளை போதைப்பொருளிருந்து விடுவிக்கும் உன்னதமான பொறுப்பு நிறைவேற்றப்படுகின்றது.

இலக்கிடப்பட்ட சமுதாயத்தின் பொருளாதார சமூக மற்றும் கலாசார மேம்பாட்டிற்கான பல நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்படுகின்றன. அதனுள், சித் றூ தேசியக் கலை நிகழ்ச்சி, சுவசக்தி அபிமானி தேசிய நிகழ்ச்சித் திட்டம், அங்கவீனமுற்ற நபர்களின் தேசிய தடகள விளையாட்டு நிகழ்வு, சர்வதேச வெள்ளைப் பிரம்பு பாதுகாப்பு தினம் மற்றும் அங்கவீனமுற்ற பிள்ளைகளின் புத்தாண்டு வைபவம் என்பன முதல் இடத்தினைச் சுவீகரித்துள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டங்களினூடாக நாடுபூராவும் சகல பிரதேசங்களிலும் பரந்துள்ள அங்கவீனமுற்ற சமுதாயத்தின் இயலுமை, திறன் விருத்தி, வாழ்க்கை தொழிற் பயிற்சி பயிலுனர்கள், அவர்களின் பெற்றோர்கள், பதவியணியினர் மற்றும் பிற அங்கத்தவர்களுக்கிடையே பரஸ்பரத் தொடர்பு, புரிந்துணர்வு மற்றும் நம்பிக்கையினை வளர்த்தல் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அதே போல திணைக்களத்தின் பணிக்கூற்றினைத் தழுவியதாக சகல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினையும் வெற்றிகரமாக்குவதற்கு, மாவட்ட, பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்ட சகல வெளிக்கள உத்தியோகத்தர்களில் வைத்தியசாலைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின், திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்களுக்கு இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் மற்றும் பிரதான அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் வினைத்திறன், சேவை ஊக்குவிப்பு மற்றும் விளைத்திறனினை மேம்படுத்துவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலையரங்குகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பாடநெறிகளுக்கு உத்தியோகத்தர்களினை அனுப்புவதும் இடம்பெற்று வருகின்றது.

உலகளாவிய தொற்றுநோயான Covid 19 தொற்றுநோயினை எதிர்கொண்டு வருடத்தில் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய காலவரையறைக்கு முழு நாட்டிலும் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டது. தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டாலும் குறைவான பதவியணியினை அலுவலகத்திற்கு அழைப்பதற்கு சுகாதாரப் பிரிவினூடாக வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைவாக செயற்பட்டமையின் காரணமாகவும் மற்றும் தனிப்பட்ட ஒன்றுகூடலினை நடாத்த வேண்டாம் என வழங்கப்பட்ட ஆலோசகைளினைப் பின்பற்றுதல் வேண்டும் என்ற காரணத்தினாலும் மற்றைய ஆண்டுகளினைப் போலவே அனைத்து நடவடிக்கைகளினையும் முன்னெடுப்பதற்கு தடை குறுக்கிட்டுள்ளது.

இருப்பினும் அத்தடைகளுக்கு மத்தியிலும் கூட, திணைக்களத்தினால் 2021 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சகல நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பிலான அறிமுகம் இவ் அறிக்கையினூடாக முன்வைக்கப்பட்டுள்ளதுடன், செலவுத் தலைப்பு 216 இன் கீழ் 2021 ஆம் ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயற்திறனும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

தொலைநோக்கு

"2030 ஆம் ஆண்டளவில் ஓரங்கட்டப்பட்ட மற்றும் பின்தள்ளப்பட்ட சமுதாயத்தின் உரிமைகள் மற்றும் சமத்துவம் உறுதிப்படுத்தப்பட்ட பாதுகாப்பான இலங்கையொன்றை உருவாக்குவதில் முன்னோடியாக விளங்குதல்"

பணிக்கூற்று

இலக்கிடப்பட்ட சமுதாயத்தின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் வலுவூட்டுவதனூடாக சமூக உள்வாங்குதல் தொடர்பில் உள்ளக நிறுவகத்தினை ஒருங்கிணைத்தல் மற்றும் தொழில்வாண்மையான தலையீட்டினைக் கொண்டு புதுமையான பிரவேசத்தினூடாக துரிதம், வினைத்திறன் மற்றும் விளைதிறனுடனான ஆய்வுகளை நடாத்துதல், கொள்கைகளைத் திட்டமிடுதல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துவதனூடாக எதிர்பார்த்த விளைவுகளை அடையப் பெறுதல்"

குறிக்கோள்கள்


- 16-35 வயதிற்கிடைப்பட்ட அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளின் வாழ்க்கைத் தொழில்சார் செயற்பாடுகள் மற்றும் வெளிச் செயற்பாடுகளை வலுவூட்டுதல்.
- பாதுகாவலரற்ற மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு வதிவிடப் பாதுகாப்பினை வழங்குதல்.
- 0 - 16 வயதிற்கிடைப்பட்ட பல்வேறான அங்கவீனத்தினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் அங்கவீனத்தினைக் குறைப்பதற்கு முன்கூட்டியே தலையிடுதல்.
- அங்கவீனமுற்ற சமுதாயம் அன்றாட வாழ்க்கையில் முகங்கொடுக்கும் பல்வேறான பிரச்சினைகளைக் குறைப்பதற்குத் தலையிடுதல் மற்றும் வலுவூட்டுதல்.
- சைகை மொழியினை அங்கீகரித்தல் மற்றும் ஊக்குவித்தல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சேவைகளை வழங்கும் தன்னார்வ அமைப்புக்களை வலுவூட்டுதல்.
- போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினை விடுதியில் வைத்துப் புனர்வாழ்வளித்தல், அவர்களுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல்.
- பல்வேறான சமூகப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள நபர்களுக்கு சரியான வழிகாட்டலினை வழங்குதல்.
- செவிப்புலனற்றவர்களுக்கு செவிப்புலனற்றவர்களுக்கான அடையாள அட்டைகளினை வழங்குதல்.
- திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் அறிவு, திறன் மற்றும் உளப்பாங்குகளினை உயர் தரத்திற்குக் கொண்டுவருதல்.

1.3 பிரதான செயற்பாடுகள்


- அங்கவீனமுற்ற இளைஞர், யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல், சுயதொழிலுக்கான தொழில் உபகரணங்களை வழங்குதல் மற்றும் திறந்த தொழிலுக்கு அனுப்புதல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கான தொழிற் சந்தைகளை இனங்காணுதல் மற்றும் விரிவுபடுத்துதல்.
- அங்கவீனமுற்ற நபர்களின் காலத்தின் தேவைப்பாடுகள் மற்றும் நாட்டங்களை அடையாளங் காண்பதற்கு ஆய்வினை மேற்கொள்ளல்.
- விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகள் தொடர்பாக முன்கூட்டிய தலையீட்டினூடாக அவர்களை ஒன்றிணைக்கும் கல்விக்கு அனுப்புதல்.
- செவிப்புலனற்றவர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்குதல் மற்றும் சைகை மொழிபெயர்ப்புச் சேவைகளை வழங்குவதனூடாக செவிப்புலனற்றவர்களின் அன்றாட நடவடிக்கைகளை இலகுபடுத்துதல்.
- பாதுகாவலர்களற்ற மூளை வளர்ச்சி குன்றிய ஆண் சிறுவர்களுக்கு வாழ்நாள் முழுதும் பாதுகாப்பினை வழங்குதல்.

- அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரி தொடர்பில் முன்னெடுத்துச் செல்லப்படும் தன்னார்வ அமைப்புக்களுக்கு நிதியுதவி வழங்குதல்.
- 60 வயதிற்குக் குறைவான விழிப்புலனற்ற நபர்களுக்கு பார்வையினைப் பெற்றுக்கொடுப்பதற்கு கண் வில்லைகளை வழங்குதல் மற்றும் வைத்திய உதவிகளை வழங்குதல். விழிப்புலனற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்கு
  விளையாட்டு, கல்விசார் மற்றும் கலாசாரம்சார் செயற்பாடுகளுக்கு உதவிகளை வழங்குதல், அவர்களின் நிறுவனங்கள் தொடர்பில் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் ஏனைய நலன்புரிச் செயற்பாடுகள்.
- சமுதாய மட்டத்திலான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கவீனமுற்ற நபர்களுக்கு தேவையான சேவைகளை வழங்குதல்.
- பிரதேச மட்டத்தில் அங்கவீனமுற்ற நபர்களின் சுய உதவி அமைப்புக்களை ஸ்தாபித்தல் மற்றும் வலுவூட்டுதல்.
- போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை விடுதியில் வைத்துப் புனர்வாழ்வளித்தல் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் அறிவு, திறன் மற்றும் உளப்பாங்குகளினை மேம்படுத்துவதற்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள், கருத்தரங்குகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வேலையரங்குகளுக்கு முன்வைத்தல்.

1.4 நிறுவனக் கட்டமைப்பு



1.5 திணைக்களத்தின் கீழ் உள்ள முக்கிய பிரிவுகள்



1.5.1 திணைக்களத்திற்கு உரித்தான பிரிவுகள்

1.5.1.1 நிர்வாகப் பிரிவு

சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிக்கூற்றினூடாக அடையச் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களினை, வினைத்திறனாகவும், விளைத்திறனாகவும் அடையச் செய்வதற்குத் தேவையான உதவிச் சேவைகளினை வழங்குதல் நிர்வாகப் பிரிவின் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

அதில் மனித மற்றும் பௌதிக வளங்களினை முகாமை செய்யும் செயற்பாடுகள், நிறுவனம்சார், நிர்வாகம்சார் கடமைகளினை முன்னெடுத்தல், கொள்கைசார் தீர்மானங்களினை அமுலாக்குதல், திணைக்களத்தின் சகல பிரிவுகளுக்கும் உதவிச் சேவைகளினை வழங்குதல் மற்றும் பின்வரும் செயற்பாடுகள் நிர்வாகப் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றன.

- சமூக சேவைகள் திணைக்களத்தின் பொதுவான நிர்வாகச் செயற்பாடுகள் மற்றும் திணைக்களத்தின் சகல தபால் தொடர்பிலும் நடவடிக்கை எடுத்தல்.
- திணைக்களத்தின் பதவியணி தொடர்பில் உத்தியோகத்தர்களினை ஆட்சேர்ப்புச் செய்தல், பதவியுயர்வுகள், வினைத்திறன் தடை காண் பரீட்சை நடாத்துதல், சம்பள ஏற்றக் கொடுப்பனவு, இடமாற்றங்கள் மற்றும் ஓய்வுபெறுதல் போன்ற பிரத்தியேகக் கோவையுடன் தொடர்பிலான சகல செயற்பாடுகள்.
- சேவைத் தேவையின் அடிப்படையில் புதிய பதவிகளினை அங்கீகரித்தல், ஆட்சேர்ப்புத் திட்டங்களினைத் தயாரித்தல், பதவியணியின் தகவல்களினை நாளதுவரைப்படுத்துதல், அமைச்சரவை விஞ்ஞாபனங்களினைத் தயாரித்தல் போன்ற கடமைச் செயற்பாடுகள்.
- பதவியணியின் விடுமுறை, புகையிரத ஆணைச்சீட்டுக்கள், மேலதிக நேரக் கொடுப்பனவுகள் மற்றும் இடர் கடனினை வழங்குவதற்கான செயற்பாடுகள்.
- அக்ரகார காப்புறுதித் திட்டத்துடன் தொடர்பிலான கடமைகள், வீட்டு வாடகைகளினை அறவீடு செய்வதுடன் தொடர்பிலான கடமைகள், வெளிநாட்டுப் புலமைப்பரிசில், வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் தகவல் சட்டத்தினை அமுலாக்குவதுடன் தொடர்பிலான கடமைகள்.
- அலுவலகக் கட்டளைகளினைச் சமர்ப்பித்தல், திணைக்களச் சுற்றுநிரூபங்கள், திணைக்களத்திற்கான ஆலோசனைகளினை வழங்குதல், ஏனைய அரச நிறுவனங்களிலிருந்து வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிரூபங்களினைப் பெற்று, சுற்றுநிரூபக் கோவைகளினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் அதில் குறிப்பிடப்பட்ட விடயங்களினை அமுலாக்குதல்.
- திணைக்களத்தின் மின்சாரம், தொலைபேசி, இணையத்தளம், பாதுகாப்புச் சேவைச் செலவுகள், துப்புரவு சேவைகள், பத்திரிகைகளின் செலவுகளுக்கான பற்றுச்சீட்டுக் கொடுப்பனவுகள் மற்றும் திணைக்களத்தின் எந்திரங்கள், உபகரணங்களினைப் பழுதுபார்ப்பதுடன் தொடர்பான செயற்பாடுகள்.

1.5.1.2 சைகை மொழிப் பிரிவு

செவிப்புலனற்ற மற்றும் பகுதியளவில் செவிப்புலனற்ற நபர்களுக்கு, கல்விசார், சமூக, கலாசார சேவைகளினை வழங்குவதற்கும், மருத்துவ சுகாதார மற்றும் சட்ட வசதிகளினை வழங்குவதற்குமான தொடர்பாடல் ஊடகமாக விளங்குவது சைகை மொழியாகும். இச்சேவை மொழியினை, மொழியொன்றாக அங்கீகரிப்பதற்கு 2010.09.05 ஆந் திகதி அமைச்சரவை கொள்கைசார் தீர்மானமொன்றினை எடுத்தது.

சைகை மொழி மொழிபெயர்ப்புச் சேவையினை வழங்குவதற்கு தற்போது திணைக்களத்திற்கு சைகை மொழி உத்தியோகத்தர்கள் 06 பேர் இணைக்கப்பட்டு கடமையாற்றுவதுடன், அதில் மூவர் வாழ்க்கைத் தொழிற்

பயிற்சி நிறுவனங்களிலும் மற்றும் ஏனைய மூவர் பிரதான அலுவலகத்தின் சைகை மொழிப் பிரிவிலும் கடமையாற்றுகின்றனர்.

செவிப்புலனற்ற நபர்களின் தொடர்பாடல் தொடர்பில், அரச நிறுவனங்களுக்குத் தேவையான உதவியினை வழங்குதல். (உதாரணமாக, பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள், வைத்தியசாலைகள், அரசின் பிற நிறுவனங்கள்) மற்றும் தேசிய தொலைக்காட்சி அலைவரிசையில் இரவு 8.00 மணி பிரதான செய்தி ஒளிபரப்பிலும் மற்றும் சிரச தொலைக்காட்சி அலைவரிசையில் இரவு 7.00 மணி பிரதான செய்தி ஒளிபரப்பிலும் சைகை மொழிபெயர்ப்பாளரின் சேவை வழங்கப்படுகின்றது.

1.5.1.3 சமுதாய மட்டப் புனர்வாழ்வுப் (சீ.பீ.ஆர்.) பிரிவு

அங்கவீனமுற்ற நபர்களின் சமுதாயத்தினை புனர்வாழ்வளித்தல் அல்லது சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு (சீ.பீ.ஆர்.) நிகழ்ச்சித் திட்டம், அங்கவீனமுற்ற நபர்களுக்கு சேவைகளினை வழங்குதல், சம வாய்ப்புக்களினை வகுத்தல் மற்றும் அவர்களின் மனித உரிமைகளினைப் பாதுகாத்து மேலோங்கச் செய்யும் மூலோபாயமொன்றாகும்.

அங்கவீனமுற்ற நபர்களினைப் புனர்வாழ்வளிப்பதற்கு அமுலாக்கப்பட்டு வரும் தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்றாக சமூக சேவைகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் 1994 ஆம் 10 ஆண்டில் சீ.பீ.ஆர். நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இது வரை சமூக சேவைள் திணைக்களத்தின் சீ.பீ.ஆர். பிரிவினூடாக இந்நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

அங்கவீனத்தினைக் கொண்ட நபர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும், அவர்கள் வாழும் சமூக அமைப்புகளுக்கும் இடையிலான தொடர்பினை ஏற்படுத்துவதனூடாக அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாத்தல், வலுவூட்டுதல், சுயாதீனமாகச் செயற்படுவதற்கு முடியுமான வகையில் அவர்களினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபட்டுள்ள வெளிகளம்சார்ந்த உத்தியோகத்தர்களினை தொடர்புபடுத்துதல் அது தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்தல் மற்றும் தொழிற்படுத்துவதனூடாக பின்வரும் செயற்பாடுகள் இப்பிரிவினூடாக இடம்பெறுகின்றது.

- அங்கவீனமுற்ற நபர்களுக்கு புனர்வாழ்வுத் திட்டத்தினைத் தயாரிப்பதனூடாக புனர்வாழ்வினை முன்னெடுத்தல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு நேரடி ஒதுக்கீடுகளினை வழங்குதல் மற்றும் பின்தொடர் செயற்பாடுகளினை முன்னெடுத்தல். (கொமட், நீர், மின்சாரம வசதிகள் மற்றும் பிரவேசிப்பு வசதிகளினை வழங்குதல்.)
- பிரதேச மட்டத்தில் அங்கவீனமுற்ற நபர்களின் சுவசக்தி அமைப்புக்களினை அமைத்தல், வலுவூட்டுதல் மற்றும் "சுவ அபிமானி" என்ற பெயரிலான வருடாந்த வைபவத்தினூடாக சுவசக்தி அமைப்புக்கள் மற்றும் நபர்களினைப் பாராட்டுதல்.
- அரச மற்றும் அரச சார்பற்ற பிற அமைப்புக்களுடன் இணைந்து சேவைத் தேவைப்பாடுகளினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு வசதிகளினை ஏற்படுத்துதல்.
- அங்கவீனமுற்ற பிள்ளைகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் திறன் விருத்தி நிலையங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளினை வழங்குதல்.
- மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களினை நடாத்துதல்.
- சீ.பீ.ஆர் நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புபட்டு பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் வெளிக்களக் கடமைச் செயற்பாடுகளினை முன்னெடுக்கும் சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் அறிவினை நாளதுவரைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

1.5.1.4 சேவைகள் பிரிவு

இலங்கை பூராவும் சிதறியுள்ள அங்கவீனமுற்ற நிலைக்கு உட்பட்ட நபர்களினை அரச அனுசரணையின் கீழ் வலுவூட்டி கௌரவமான பிரஜைகளாக வாழும் உரிமையினைப் பாதுகாக்கும் நோக்குடன் சேவைகள் பிரிவு அமுலாக்கப்படுவதுடன். அதன் நோக்கங்களினை அடையும் பொருட்டு பின்வரும் கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுகின்றன.

- 16-35 வயதிற்கிடைப்பட்ட அங்கவீனமுற்ற சமுதாயத்தினை வாழ்க்கைத் தொழில் பயிற்சியினூடாக வலுவூட்டி தொழிலில் ஈடுபடுத்துதல்.
- அங்கவீனமுற்ற பிள்ளைகளினை, முன் பள்ளிக் கல்வி மற்றும் பாடசாலைக் கல்வி வரை மேம்படுத்துவதற்கு உரிய சிறுவர் வழிகாட்டி நிலையங்களினூடாக சேவைகளினை வழங்குதல்.
- போதைப்பொருள் பாவனையினைக் கட்டுப்படுத்துதல் மற்றும் தடுப்பதற்கு போதைப்பொருள் மறுவாழ்வு மையத்தினூடாகே போதைக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைப்பதற்கான சேவைகளினை வழங்குதல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்காக அமுலாக்கப்படும் அரச சார்பற்ற முன்பள்ளி ஆசிரியர்களின் சேவையினைப் பாராட்டுதல் மற்றும் ஊக்குவிப்பதற்கான கொடுப்பனவுகளினை வழங்குதல்.

- பெற்றோரை இழந்த மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் பாதுகாப்பு நிலையத்தினூடாக மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் பாதுகாப்புத் தொடர்பில் தேவையான சேவைகளினை வழங்குதல்.
- அங்கவீனமுற்ற சமுதாயத்திற்கென அமுலாக்கப்படும் தன்னார்வத் தொண்டு அமைப்புக்களுக்கு பராமரிப்பு உதவிகளினை வழங்கி அந்நிறுவனங்கள் முன்னெடுக்கும் சமூகப் பணிக்கு அரச அனுசரணையினை வழங்குதல்.
- செவிப்புலனற்ற நபர்களின் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு அடையாள அட்டைகளினை வழங்குதல்.

1.5.1.5 அபிவிருத்திப் பிரிவு

அபிவிருத்திப் பிரிவினூடாக திணைக்களத்தின் ஒட்டுமொத்தச் செயற்பாட்டில் நேரடியாக தாக்கம் செலுத்தும் பல கடமைப் பொறுப்புக்கள் இடம்பெற்று வருகின்றது. விசேடமாக உத்தியோகத்தர்களின் திறன்களினை மேம்படுத்துவதற்கு இணையாக இடம்பெறும் பயிற்சிகள், அறிவினை நாளதுவரைப்படுத்தல் மற்றும் விளைத்திறனாக மேம்படுத்துதல் போன்றன முக்கியமான இடத்தினைப் பெற்றுள்ளன.

அதேபோல தேசிய நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்தல், தொடர்புபடுத்தல் மற்றும் தொழிற்படுத்தல், பல்வேறு கருத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல், தகவல்களினை நாளதுவரைப்படுத்தல், நவீன சமூக போக்குகளினை அடையாளங்காணுதல் மற்றும் அவற்றினை பயன்படுத்துதல் தொடர்பிலும் முக்கியமான கடமைப் பொறுப்பொன்று நிறைவேற்றப்படுகின்றது. அதற்கு மேலாக திணைக்களத்தின் நோக்கங்களினைத் தழுவி திணைக்களத்தின் செயற்பாடுகளினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு பின்வரும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றது.

- திணைக்களத்தினூடாக வருடந்தோறும் நடாத்தப்படும் தேசிய நிகழ்ச்சித் திட்டங்களினை (தேசிய தடகள விளையாட்டுப் போட்டி, சித்றா தேசிய கலை நிகழ்ச்சி, புத்தாண்டு வைபவம்) ஒருங்கிணைத்தல் மற்றும் தொழிற்படுத்துதல்.
- திணைக்களத்தின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம், செயற்திறன் அறிக்கை மற்றும் முன்னேற்ற அறிக்கைகளினைத் தயாரித்தல்.

- திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்தல் மற்றும் நடாத்துதல்.
- வைத்தியசாலைகளில் நோயாளர்களின் நலன்புரிச் செயற்பாடுகளுக்கு உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பிலுமான சகல ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள்.
- தன்னார்வத் தொண்டு அமைப்புக்கள் தொடர்பிலான கடமைகள் சமூக சேவை அமைப்புக்களின் (உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட புண்ணிய நிறுவனங்கள் அல்லது தன்னார்வத் தொண்டு அமைப்புக்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட இலாப நோக்கமற்ற அமைப்புக்கள்) கிடைக்கப்பெறும் வெளிநாட்டு நன்கொடைகளுக்காக சுங்கவரி நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான பரிந்துரைகளை வழங்குதல் தொடர்பான கடமைகள்..

- திணைக்களத்திற்கு உரித்தான காணிகளினை ஒப்படைத்தல், அது தொடர்பிலுள்ள பிரச்சினைகளினைத் தீர்த்தல் மற்றும் அது தொடர்பிலான துணை ஆவணங்களினை முன்னெடுத்துச் செல்லுதல்.

- அங்கவீனமுற்ற நபர்களுக்கு பல்வேறு நிவாரணங்களினை வழங்குதல், சர்வதேச தரநிலைகள், குறிகாட்டிகள், கோட்பாடுகள் மற்றும் நவீன சித்தாந்தங்களினை அடையாளம் காணுதல்.
- தன்னார்வத் தொண்டு செயற்பாடுகள் தொடர்பில் தேசிய செயலகத்துடன் தொடர்பிலான கடமைச் செயற்பாடுகள்.
- விளைத்திறனான நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

1.5.1.6 நிதி மற்றும் கணக்குகள் பிரிவு

சமூக சேவைகள் திணைக்களத்திற்கான தொழிற்பாடுகள், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான வருடாந்த ஒதுக்கீடுகளினைப் பெற்றுக்கொள்ளுதல், முகாமை செய்தல், கொடுப்பனவுகளினைச் செய்வதுடன், அரச கணக்குகளினை முன்னெடுத்துச் செல்லுவதில் வெளிப்படைத் தன்மையுடன், நிதிப் பிரமாணங்களினூடாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், நிதியினை மோசடியில்லாது ஒழுக்கத்துடன் முன்னெடுத்துச் செல்லுதல் கணக்குகள் பிரிவினூடாக நிறைவேற்றப்படும் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

இதில் பிரதான கணக்காளரின் வழிகாட்டல், முகாமை, கண்காணிப்பு மற்றும் செயற்படுத்தலினூடாக கணக்குச் செயற்பாடுகள் இடம்பெறுவதுடன், நிதிப் பிரமாணங்கள், விசேட ஏற்பாடுகள் மற்றும் அரசின் சுற்றிநிரூபங்களினூடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பின்வரும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

- சமூக சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தான ஒட்டுமொத்த வருடாந்த பாதீட்டு ஆவணத்தினைத் தயாரித்து குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு முன்வைத்தல்.
- சகல கொடுக்கல் வாங்கல்களினைச் சரியாக நாளதுவரைப்படுத்தி கணக்கு வைத்தல் மற்றும் கணக்குகளினை முன்வைத்தல்.
- நிதிக் கொள்கைகளினை வடிவமைத்தல் மற்றும் நிதி முகாமைத்துவத்தினை வலுவூட்டுவதற்கு உயர் முகாமைத்துவத்திற்கு உதவுதல்.
- சகல பெறுவனவு மற்றும் செலவுகளினைக் கண்காணித்தல் மற்றும் செலவுகளினை முகாமை செய்தல்.
- செலவுகளினை மீளாய்வு செய்வதற்கு உயர் முகாமைத்துவத்திற்கு முன்மொழிவுகளினை முன்வைத்தல்.
- பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்திற்கு இறுதிக் கணக்குகளினை முன்வைத்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.

- சகல கொள்வனவுகளின்போதும் வெளிப்படைத்தன்மையுடனான கொள்முதல் நடைமுறையினூடாக நிதிசார் சட்டதிட்டங்களினை சரியானவாறு அமுலாக்குதல் மற்றும் உதவுதல்.
- சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள அரசின் சொத்துக்களினை நாளதுவரைப்படுத்தல் மற்றும் முகாமை செய்தல்.

1.5.1.7 உள்ளக கணக்காய்வு பிரிவு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதி ஒழுங்கு விதிக் கோவையின் 133 மற்றும் 134 பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகள் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு வழிகாட்டலின் அறிவுறுத்தல்கள் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் VII ஆம் பகுதியின் 40 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சமூக சேவைகள் பணிப்பாளருக்கு நேரடியாக அறிக்கையிடுவதற்கு கட்டுப்பட்டுள்ள பிரதான உள்ளக கணக்காய்வாளர் ஒருவருடன் இப் பிரிவு செயற்படுகிறது.

அவ்வாறே நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ளும் போதான நிதித் திட்டமிடல், உள்ளக கட்டுப்பாடு, புத்தகங்கள் மற்றும் கணக்குகளை உரிவாறு பேணுதல். நிதி முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை, முகாமைத்துவ தகவல்களை வழங்கும் முறை பயனுள்ளவாறு இடம்றுவதனை உறுதிசெய்தல் இப் பிரிவின் நோக்கம் ஆகும்.

1.5.1.8 ஆராய்ச்சி மற்றும் ஊடகப் பிரிவு

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் "ஆராய்ச்சிப் பாயிற்சி மற்றும் அபிவிருத்தி" என்ற பெயரில் செயற்பட்ட ஆராய்ச்சிப் பகுதி 2021 முதல் புறம்பான ஒரு பிரிவாக ஆராய்ச்சி மற்றும் ஊடகப் பிரிவு என்ற பெயரில் தாபிக்கப்பட்டது. சேவை பெறுநர்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகளை இனம் கண்டு அவர்களுக்கு மிகவும் பயனுள்ள சேவையினை வழங்குதல் இப் பிரிவு தாபிக்கப்பட்டமைக்கான முக்கிய நோக்கம் என்பதுடன் அந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- சமூக பொருளாதார சூழலில் நிகழும் சமூக பரிமாற்றங்களுடன் உருவாகும் சமூக பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ளல்..
- சமூக சேவைகள் திணைக்களம் மூலம் வழங்கப்படும் சேவைகளின் தரம் மற்றும் உற்பத்தித்திறனை அளவீடு செய்வதற்கான ஆய்வுகளை மேற்கொள்ளல்.

- சமூக சேவைகள் திணைக்களம் தொடர்பான சட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி நவீன தேவைப்பாடுகளுக்கு ஏற்ப திருத்தங்களுக்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- சமூக சேவைகள் திணைக்களம் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் தேசிய வைபவங்கள் தொடர்பான ஊடக அறிவிப்புகளை தயார் செய்தல் மற்றும் ஊடக உள்ளடக்கத்துக்குத் தேவையான ஒருங்கிணைப்பு பணிகள்.

- சமூக சேவைகள் திணைக்களத்தின் கடமைப் பொறுப்புக்களை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டு சேவை பெறுநர்களை அறிவூட்டல் மற்றும் அவர்களை கவர்வதற்காக செவிப்புல, கட்புல மற்றும் எழுத்து ஊடகங்களை மேம்பாட்டு கருவிகளை வடிவமைத்தல்.

1.5.2 திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள்

1.5.2.1 தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் 09 வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் கம்பஹ, கண்டி, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை புத்தளம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் அமுலாக்கப்படுகின்றது. இத் தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் நாடுபூராவும் பரந்துகாணப்படும் அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளின் தொழில்சார் இயலுமைகளினை வலுவூட்டுதல் மற்றும் அவர்களை அபிவிருத்திக்கு பங்காற்றச் செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

தொழிற்பயிற்சி நிறுவனம் தொடர்பான அடிப்படைத் தகவல்கள்

தொழிற்பயிற்சி நிறுவனத்தின் பெயர்	நிறுவனம் அமைந்துள்ள மாகாணம்	நிறுவனம் அமைந்துள்ள மாவட்டம்	ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு	முகவரி	தொலைபேசி இல.
சீதுவ	மேல்	கம்பஹ	1956 ஒக்டோபர் 01	லியனகேமுல்ல, சீதுவ	011-2253503
வத்தேகம	மத்திய	கண்டி	1963 பெப்ரவரி 15	வாவின்ன, வத்தேகம	081-2476209
கெட்டவல			1968	கெட்டவல, லெவ்வல, கண்டி	081-2219153
தெலம்புயாய	தென்	ஹம்பாந்தோட்டை	1981 மார்ச் 28	தெலம்புயாய, அங்குனகொலபெலெஸ்ஸ	047-3489296
ராகம	மேல்	கம்பஹ	1984 ஜனவரி 18	புனர்வாழ்வு வைத்தியசாலை, ராகம	011-2967342
அமுனுகும்புர			1990 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் 1991 ல் தொழிற் பயிற்சி நிறுவனமாக அபிவிருத்தி செய்யப்பட்டது	அமுனுகும்புர, வத்துருகம	033-2279321
கலவான	சபரகமுவ	இரத்தினபுரி	2006 மார்ச் 24	பஹல குக்குலேகம, மீபாகம, கலவான	045-2255017
மாதம்பே	வடமேல்	புத்தளம்	2014 ஜூன் 15	தேவால வீதி, பொத்துவில, மாதம்பே	032-2248568
தோலங்கமுவ இணைந்த தொழிற் பயிற்சி நிறுவனம்	சபரகமுவ	கேகாலை	2021 நவம்பர் 17	இணைந்த தொழிற் பயிற்சி நிறுவனம், தோலங்கமுவ	
மட்டக்களப்பு	கிழக்கு	மட்டக்களப்பு	2021 டிசம்பர் 02	கும்புறுமூலை, வாழச்சேனை	065-3132223

செயற்பாடுகள்

I. அங்கவீனமுற்ற இளைஞர், யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் மற்றும் ஆளுமை விருத்தி.
II. அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளின் விளையாட்டு மற்றும் கலைத் திறன்களினை மேம்படுத்துதல்.
III. முறைசார் வகையில் பயிற்சியினை நிறைவு செய்துள்ள பயிலுனர்களுக்கு சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல்.
IV. சுய தொழில்களுக்கான உபகரணத் தொகுதிகளை வழங்குதல், திறந்த சந்தைப் பிரிவில் தொழில் வாய்ப்புக்களினை அறிமுகப்படுத்துதல்.

16 தொடக்கம் 35 வயதுக்கு இடைப்பட்ட தகைமை உள்ள அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகள் விஞ்ஞான ரீதியிலான முறைமையின் கீழ் மேற்கொள்ளப்படும் நேர்முகப் பரீட்சையின் பின்னர் அவர்களது திறமைகளுக்கு ஏற்ற பயிற்சி பணிகளுக்காக தெரிவுசெய்யப்படுவர் பாடநெறியின் தன்மைக்கேற்ப பயிற்சிக் காலம் மாற்றமடைவதுடன் அதன் பிரகாரம் ஓராண்டு அல்லது ஈராண்டுகள் முறைசார்ந்த பயிற்சிகள் தெரிவுசெய்யப்பட்ட பயிலுனர்களுக்கு வழங்கப்படும். பல்வேறு வகையான 26 பாடநெறிகளின் கீழ் இப்பயிற்சி வழங்கப்படுவதுடன் பயிற்சிக் கால எல்லைக்குள் நாளாந்த கொடுப்பனவு மற்றும் வதிவிட வசதிகள் உணவு மற்றும் பானங்கள், வைத்திய வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.

தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படும் பாடநெறிகள்

பாடநெறி	கொள்ளளவு	130	50	100	100	100	24	30	40	50	20
	ஆட்சேர்க்கப் படும் பயிலுநர்கள்	பெ/ஆ	ஆண்	பெ/ஆ	பெ/ஆ	பெ/ஆ	பெ/ஆ	ஆண்	ஆ/இ	ஆ/இ	ஆ/இ
	பாடநெறிக் காலம்	ராதுவ	கெட்டவல	வத்தேகம	தெலம்புபாரா	அமுனுகும்பர	ராகம *	கலவான	மாதம்பே	பட்டக்களப்பு	தோலங்கமுவ
1. வானொலி, தொலைக்காட்சி சார்ந்த உபகரண எந்திரக் கலை	02 ஆ	■		■	■		■			■	
2. தச்சு வேலைக் கலை	02 ஆ	■	■		■	■					
3. தையல் கலை	02 ஆ	■		■	■		■		■	■	
4. கணணி	02 ஆ	■	■	■	■		■		■		
5. முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் எந்திரக கலை	02 ஆ			■							
6. மோட்டார் வாகன எந்திரக கலை	02 ஆ			■	■						
7. வீட்டுத்தோட்ட விவசாயக் கலை	02 ஆ				■	■		■			
8. குளிர்சாதன மற்றும் குளிரூட்டி எந்திரக் கலை	01 ஆ	■									
9. தையல் இயந்திரம் இயக்கம் (கைத்தொழிற்சாலை-ஜூக்கி)	01 ஆ	■							■		
10. கைப்பணி கைத்தொழில் கலை (மூங்கில்/தெங்கு)	02 ஆ							■			
11. கைப்பணி கைத்தொழில் கலை (தும்பு, ஈக்கிள்)	01 ஆ					■					
12. கைத்தரி கைத்தொழில் கலை (பிரம்பு, தும்பு)	01 ஆ	■									
13. கைப்பணி கைத்தொழில் கலை (கவர்ச்சிப்பொருள்)	01 ஆ					■			■		■
14. டேலரிங் கலை	01 ஆ			■		■					
15. மசாஜ் சிகிச்சை	01 ஆ	■									
16. மேசன் கலை	02 ஆ			■							
17. மின்சாரக் கலை	02 ஆ		■		■						
18. மோட்டார் வாகன நிறம் தீட்டும் கலை	02 ஆ		■								
19. வெல்டிங் கலை	02 ஆ		■								
20. சீமெந்து உற்பத்திக் கலை	02 ஆ					■					
21. பாதணி மற்றும் தோல் கைத்தொழில் கலை	01 ஆ			■							
22. பத்திக் கலை	01 ஆ			■							■
23. பேக்கரி கலை/உணவு தொழில்நுட்பம்	01 ஆ					■					
24. கைத்தறி கலை	01 ஆ	■									
25. அழகுக் கலை	01 ஆ			■							
26. மரச் செதுக்கல் கலை	02 ஆ	■									

* ராகம தொழிற்பயிற்சி நிறுஆவனத்தின் பாடநெறிக் காலம் 06 மாதம் முதல் 01 வருடம் வரை மாற்றமடையக் கூடும்.

1.5.2.2 ஜயவிரு செவன பாதுகாப்பு இல்லம்

பெற்றோர் அரவணைப்பற்ற உளநலம் பாதிக்கப்பட்ட அங்கவீனமுற்ற ஆண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பினை வழங்குவதற்கென 2001 யூலை மாதம் 31 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜயவிரு செவண நிறுவனம், மேல் மாகாணத்தில். கொழும்பு மாவட்டத்தின் சீதாவக்க பிரதேச செயலகப் பிரிவிலுள்ள புவக்பிட்டிய நோர்த் அம்பலன்வத்த என்ற இடத்தில் அமைந்துள்ளது.

மூளைவளர்ச்சி குன்றிய சமுதாயத்திற்கு பாசம் மற்றும் அன்பினை வழங்குவதனூடாக அவர்களின் இயலுமைகள் மற்றும் திறமைகளினை வளர்ப்பதற்கு வாய்ப்பினை வழங்குதல் மற்றும் அவர்களினை உற்பத்திச் செயற்பாட்டில் பங்குபற்றச் செய்து தேசிய அபிவிருத்தியின் பங்குதாரர்களாக்குவதை பணிக்கூற்றாகக் கொண்டு இந்நிறுவனத்தினூடாக வாழ்நாள் முழுவதும் விடுதியில் தங்கியுள்ள இப் பிள்ளைகளை தனிமைப்படுத்தாது அன்பாகவும் கருணையுடனும் பாதுகாப்பதோடு நாளாந்த செயற்பாடுகளுக்காக அனுப்பப்படுவார்கள். பாதுகாப்பு பெறும் கால எல்லைக்குள் வதிவிட வசதிகள் உள்ளிட்ட உணவு பானம் மற்றும் மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படுகிறது.

1.5.2.3 ஜயவிரு சமாதி புனர்வாழ்வு நிறுவனம்

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல், சமூகத்துடன் ஒன்றிணைத்தல், தொழில்வாண்மையான இயலுமைகளினை மேம்படுத்துவதற்கு, சமூக சேவைகள் திணைக்களத்தில் அமுலாக்கப்பட்ட நவோதய கருத்திட்டத்தின், துணைக் கருத்திட்டமொன்றாக 2007.07.31 ஆந் திகதி ஆரம்பிகப்பட்டுள்ள இந்நிறுவனம், மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தின் சீத்தாவக்க பிரதேச செயலகப் பிரவிலுள்ள புவக்பிட்டிய நோர்த் அம்பலன்வத்த என்ற இடத்தில் அமைந்துள்ளது.

பிரத்தியேக மறுவாழ்வு மையமொன்றாக பல்லாண்டுகளாக அமுலாக்கப்படும் ஜயவிரு சமாதி புகலிடத்தினை முன்னெடுத்துச் செல்லும்வேளையில் காட்டப்பட்ட தரமான சேவையினைப் பாராட்டுமுகமாக, மருந்துகளுக்கு அடிமையானவர்களுக்குச் சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்களின் செயற்பாடுகளினை ஒழுங்குபடுத்துவதற்கான 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் (சிகிச்சை மற்றும் மறுவாழ்வு) தொடர்பிலான சட்டத்தின் 2 வது பிரிவின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட மறுவாழ்வு மையமொன்றாக ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டுத் தேசிய சபையின் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

உண்மையான வாழ்க்கை தத்துவம், வாழ்க்கையின் உண்மையான மகிழ்ச்சியினைச் சொல்லிக் கொடுத்து வாழ்க்கைத் திறன்களை மேம்படுத்துவதன் மூலம் போதைப் பொருள் எனும் வலையில் வீழ்ந்த இளைஞர் சந்ததியினை தேசிய வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யும் நோக்கத்துடன் பல்வேறு போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களினை விடுதியில் வைத்துப் மறுவாழ்வளித்தல் இந்நிறுவனத்தினூடாக இடம்பெறுகிறது.

நீதிமன்றக் கட்டளைகளினூடாக, தானாக முன்வந்து தன்னார்வமாக, பிரதேச செயலகங்கள் மற்றும் மருத்துவசாலைகளினூடாக அனுப்பப்படும் பயனாளிகளினை சுமார் ஒரே தடவையில் 60 வரையில் புனர்வாழ்வுக்கு முன்வைக்க முடியும் என்பதுடன், புனர்வாழ்வளிக்கும் காலம் 03 மாதங்கள், 06 மாதங்கள் மற்றும் 01 வருடம் வரையான காலம் வரை இடம்பெறும். நீதிமன்றக் கட்டளைகளினை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்படும் பயனாளிகளின் புனர்வாழ்வளிக்கப்பட வேண்டிய காலம் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

செயற்பாடுகள்

I. போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல், அவர்களின் வாழ்க்கைத் தொழிற் திறன்களினை மேம்படுத்துதல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல்.
II. போதைப்பொருளுக்கு அடிமையானதன் காரணத்தினால் அவர்களின் குடும்பச் சூழலில் எழுந்துள்ள சிக்கல்களினைக் குறைப்பதற்கு தலையீடு செய்தல்.
III. போதைப்பொருள் பாவனையின் காரணமாக சரிந்த தொழில்கள் மற்றும் கல்வி நடவடிக்கைகளினை பழைய நிலைக்குக் கொண்டு வந்து அது தொடர்பில் உரிய பங்குதாரர்களுடன் தொடர்புகளினைக் கட்டியெழுப்புதல்.
IV. கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய குழுக்களுக்கு போதைப் பொருள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.

1.5.2.4 நாவின்ன சிறுவர் வழிகாட்டி நிலையம்

பிறவியில் இருந்தே ஒரு பிள்ளையின் வளர்ச்சியில் ஏதேனும் ஓர் அசாதாரண நிலைமை அல்லது தாமதம் உள்ளதென சந்தேகிக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் அதற்காக முற்கூட்டியே தலையிட்டு பிள்ளையை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான வழிகாட்டலை வழங்குவதனை நோக்கமாக கொண்டு 2003 ஆம் ஆண்டு மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தின் மகரகம பிரதேச செயலகப் பிரிவின் நாவின்ன, பதிரகொட எனும் இடத்தில் இந்த நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ளது.

சரியான வழிகாட்டலை பெறும் எதிர்பார்ப்புடன் நிறுவனத்துக்கு வரும் பெற்றோர்களுக்கு பிரதானமாக பிள்ளையின் வாழ்க்கைத் தகவல்களைப் பெற்று பிள்ளையை பதிவுவெய்து பிள்ளையின் தேவையினை இனம் கண்டு வளர்ச்சி நிலைமையின் சரியான மதிப்பீடு உறுதிசெய்யப்படுகிறது.

பெற்றோர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்கள் சவால்களினை பெருமையுடன் எதிர்கொள்ளுவதற்கு வலுவூட்டுதல், விசேட தேவைகளினைக் கொண்ட பிள்ளைகளின் ஆகக்கூடிய வளர்ச்சிக்கு முற்கூட்டியே தலையீடு செய்தல், ஊக்குவித்தல் சரியான நேரத்தில் அணுகக்கூடிய சேவை வலையமைப்பொன்றினை கட்டியெழுப்பும் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்யும் ஒரு இடைத்தரகராகச் செயற்பட்டு சேவைநாடியினரினை மகிழ்விக்கும் பணிக்கூற்றினை நோக்காகக் கொண்டு சுமார் 80 அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு பின்வரும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

செயற்பாடுகள்

I. குழந்தையின் அங்கவீனத்தினை முற்கூட்டியே அடையாளங்கண்டு அது தொடர்பில் தலையீடு செய்யும் மிகவும் விளைத்திறனான திட்டங்களினை அறிமுகப்படுத்துதல்.
II. அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு சேவைகளினை வழங்குதல் தொடர்பிலான பல்வேறு துறைகளின் சேவை வலையமைப்பினை வலுப்படுத்தல்.
III. விசேட தேவைகளைக் கொண்ட சிறார்களின் முன் பிள்ளைப் பருவக் கல்வி மற்றும் ஒன்றுதிரட்டும் கல்வியினை வலுப்படுத்தல்.
IV. பெற்றோர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் உளத்தரத்தினை மிகவும் சிறந்த தரத்திற்குக் கொண்டு வந்து அது தொடர்பில் ஆலோசனை சேவைகளினை முன்னெடுத்தல்.

1.6 திணைக்களத்தின் கீழுள்ள நிதியம்

1.6.1 விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம்

1981 ஆம் ஆண்டு சர்வதேச அங்கவீனர் வருடமாகப் பிரகடனஞ் செய்த வேளையில் இலங்கையினுள் அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பான புதிய எண்ணக்கரு வளர்ச்சி முறைமைகள் ஆரம்பமானது. அதற்கு இணையாக அங்கவீனமுற்ற சமுதாயத்தின் உரிமைகளினைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களினை வலுவூட்டுவதற்கு அரச அனுசரணையுடனான தேசிய மட்டத்தில் கொள்கைசார் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அதன் கீழ் விழிப்புலனற்ற நிலைக்குள்ளான நபர்களுக்குத் தேவையான சேவைகளினை வழங்குதல், புனர்வாழ்வளித்தல் மற்றும் நிவாரணங்களினை வழங்குவதைப் பணியாகக் கொண்டு இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினூடாக 1992 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க "விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம்" என்ற பெயரில் சட்டமொன்று நிறைவேற்றப்பட்டு அரச வர்த்தமானி அறிவித்தலொன்றினூடாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் பிரகாரம், இலங்கையில் வாழும் விழிப்புலனற்ற நபர்களுக்கென பல்வேறு சேவைகளினை அமுலாக்கி, சமூக சேவைகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் தலைமையிலும் மற்றும் சமூக சேவைகள் பணிப்பாளரின் அங்கத்துவத்துடனும் குழுவொன்றினூடாக நிர்வகிக்கப்படும் இந்நிதியம், சமூக சேவைகள் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

செயற்பாடுகள்

I. விழிப்புலனற்ற நபர்கள் மற்றும் விழிப்புலனற்ற அமைப்புக்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்குதல்..

II. தொழிற் பயிற்சிப் பணிகள்
- விழிப்புலனற்ற ஆலோசகர்கள் மூலம் விழிப்புலனற்ற பயிலுனர்களுக்கு பயிற்சியளித்தல்

III. கல்விசார் மற்றும் கலாசாரம் சார் செயற்பாடுகளுக்கு உதவிகளை வழங்குதல்.
- விழிப்புலனற்ற மாணவர்கள் மற்றும் விழிப்புலனற்ற பெற்றோர்களின் விழிப்புலன் குன்றாத பாடசாலை மாணவர்களுக்கு மாணவர் உதவு தொகை வழங்குதல்.
- விழிப்புலனற்ற, பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில் உதவிகளை வழங்குதல்
- விழிப்புலனற்ற வாசகர்களுக்கு பிரெயில் ஊடகம் மூலம் வழங்கப்படும் "காலம்" சஞ்சிகைக்கு உதவிகளை வழங்குதல்.

IV. புனர்வாழ்வு உதவி வழங்குதல்
- பிற்காலத்தில் விழிப்புலனற்ற ைலைமைக்கு ஆளாகிய நபர்களை உளரீதியாக வலுப்படுத்தல் மற்றும் சமூகமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்
- பேச்சு நூல் நிகழ்ச்சித்திட்டம் - விழிப்புலனற்ற நபர்களின் வாசிப்பு உரிமையை உறுதி செய்வதற்காக வழமையான எழுத்தில் அச்சிடப்பட்ட நூல்களை பேச்சு நூல்களாக மாற்றுதல்.
- கொவிட் தொற்றுநோய் காரணமாக நடாத்திச் செல்லப்பட்ட சுயதொழில்களை கைவிட்ட அல்லது சுயதொழிலைநடாத்திச் செல்ல இயலாது போன நபர்களுக்கு சுயதொழில் உதவி வழங்குதல்
- விழிப்புலனற்ற நபர்களின் வீடுகளுக்கு மின்சாரம் மற்றும் குடிநீர் வழங்குவதற்கு உதவி செய்தல்
- சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு விழிப்புலனற்ற நபர்கள் அல்லது விழிப்புலனற்ற நபர்களின் அமைப்புக்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் பிரகாரம் உதவி வழங்குதல்.

V. கண்வில்லை மற்றும் கண் சிகிச்சைக்கு உதவி வழங்குதல்

VI. சர்வதேச வெள்ள்ளைப் பிரம்பு நினைவு தின தேசிய நிகழ்வினை நடாத்துதல்.

1.7 வெளிநாட்டு உதவிக் கருத்திட்டம்

அ) கருத்திட்டத்தின் பெயர் :- Project for Promoting Employment Support of Persons with Disabilities in Sri Lanka (ESPD)

ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம் :- ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு மன்றம் (JICA)

இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவினம்:- 360 மி.ரூ. (ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு மன்றம் (JICA)- 350 மி.ரூ., இலங்கை அரசு (சமூக சேவைகள் திணைக்களம்)- 10 மி.ரூ)

ஈ) கருத்திட்டக் காலம்:- 4 ஆண்டுகள் (2021 நவம்பர் - 2025 நவம்பர்)

அத்தியாயம் 02
முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

சமூக சேவைகள் திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றம்

2.1. அங்கவீனமுற்ற நபர்களுக்கான நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

சமூக சேவைகள் திணைக்களத்தினூடாக அமுலாக்கப்படும் பிரதான நிகழ்ச்சித் திட்டமாவது, அங்கவீனமுற்ற நபர்களுக்கான நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாகும். திணைக்களப் பணிக்கூற்றினைத தழுவியதாக இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக எதிர்பார்த்த குறிக்கோள்களினை அடைவதற்கு பிரதேச மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை அமுலாக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்திட்டங்கள் மற்றும் பல துணைச் செயற்திட்டங்கள் காணப்படுவதுடன், அவை பின்வருமாறாகும்.

- அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளினைப் புனர்வாழ்வளித்தல், வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல்.
- ஆரம்பப் பிள்ளைப் பருவத்தில் ஏற்படும் அங்கவீன நிலையினை இனங்கண்டு தேவையான தலையீடுகளினைச் செய்தல் மற்றும் மேம்படுத்துதல்.
- பாதுகாவலர்களற்ற மூளை வளர்ச்சி குன்றிய ஆண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பினை வழங்குதல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கான சமுதாய மட்ட ஒருங்கிணைந்த அபிவிருத்தி தேசிய நிகழ்ச்சித் திட்டம்.
- விழிப்புலனற்றவர்களுக்கான புனார்வாழ்வு நம்பிக்கை நிதியம்
- அங்கவீனமுற்ற சிறுவர் சிறுமிகளின் விளையாட்டுக்கள் மற்றும் கலைத் திறன் நிகழ்ச்சித் திட்டம்.


2.1.1 அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளினைப் புனர்வாழ்வளித்தல், வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைக்கும் செயற்திட்டம்

சமூக சேவைகள் திணைக்களம் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் முன்னணி கருத்திட்டம் அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கான தொழிற்பயிற்சி வழங்குதல் ஆகும். நாடு முழுவதும் வியாபித்துக் காணப்படும் 09 தொழிற்பயிற்சி நிலையங்கள் ஊடாக வருடாந்தம் 500 இற்கும் மேற்பட்ட அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்கப்படுகிறது.

கொவிட் 19 தொற்றுநோய் பரவலை தடுப்பதற்காக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க ஒரு காலம் தொழிற்பயிற்சி நிலையங்களை மூடுவதற்கு நேர்ந்தது.

ஆகவே 2020 ஆண்டுக்கான ஓராண்டு பாடநெறிகள் 2021 ஏப்ரல் வரை நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் இரண்டாம் ஆண்டு கல்வ நடவடிக்கைகள் நிகழ்நிலை அடிப்படையில் தொடர்ச்சியாக நடைபெற்றது. 2021 கல்வி ஆண்டுக்காக புதிய பயிலுநர்களை ஆட்சேர்த்தலை 2021 ஏப்ரல் மாதம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்ட போதும் சுகாதார சேவைப் பணிப்பாளரால் வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டல் காரணமாக ஆட்சேர்ப்புக்களை 2021 டிசம்பர் வரை பிற்போடுவதற்கு நேர்ந்தது.

தொழிற் பயிற்சி நிறுவனங்களின் பயிலுனர்களின் எண்ணிக்கை



முன்னைய ஆண்டுகளின் ஒப்பிடும் போது 2020 மற்றும் 2021 ஆகிய இரண்டு ஆண்டுகளில் பயிலுனர்களில் வீழ்ச்சி காணப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அது 41% வீதம் குறைவானது ஆகும். நிறுவன ரீதியில் நோக்கும் போது 2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு தொழிற்பயிற்சி நிறுவனம் தவிர்ந்த சகல நிறுவனங்களிலும் பயிற்சி பெற்ற பயினர்களில் வீழ்ச்சி காணப்படுவதுடன் கொவிட் தொற்றுநோய் பரவலின் தாக்கம் இதற்கு காரணமாய் அமைந்துள்ளது.

2.1.2 சிறுவர் வழிகாட்டி நிகழ்ச்சித் திட்டம்

சிறுவர் வழிகாட்டி கருத்திட்டத்தின் கீழ் திணைக்களம் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் நாவின்ன சிறுவர் வழிகாட்டி நிலைம் மூலம் வருடாந்தம் ஏறக்குறை 100 பேர் சேவை பெற்றுக்கொள்கின்றார்கள். 2021 இல் நிறுவனம் மூலம் சேவை வழங்கப்பட்ட மொத்த சேவை பெறுனர் எண்ணிக்கை சுமார் 93 ஆக காணப்பட்டதுடன் அவற்றுள் புதிய சேவை பெறுனர்களாக 20 பேர் பதிவுசெய்யப்பட்டார்கள். இவ்வாறு பதிவுசெய்யப்பட்ட சுமார் 07 சேவை பெறுனர்களை பொதுவான பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டார்கள்.

2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட புதிய சேவை பெறுநர் எண்ணிக்கை – 20

(17 ஆண் பிள்ளைகள் / 03 பெண் பிள்ளைகள்)

வயது வரம்பு (வருடம்)	அங்கவீனத்தின் தன்மை									மொத்தப் பிள்ளைகளின் எண்ணிக்கை
	ஓட்டிசம்	பெருமூளை வாதம்	டவுன் சின்ட்ரம்	வளர்ச்சியில் தாமதம்	பேச்சுக் கோளாறு	உயர் செயல்திறன்	செவிப்புலக் குறைபாடு	உளக்கோளாறு	பிற	
0 – 03	2	-	1	-	-	-	-	-	-	**3**
03 – 05	3	-	2	3	1	-	-	-	-	**9**
05 - 15	1	1	2	-	4	-	-	-	-	**8**
15 - 18	-		-	-	-	-	-	-	-	**-**
18 இற்கு மேல்	-	-	-	-	-	-	-	-	-	-
மொத்தம்	**6**	**1**	**5**	**3**	**5**	**-**	**-**	**-**	**-**	**20**

2021 வருடத்தின் மொத்த சேவை பெறுநர்கள் எண்ணிக்கை - 93 (ஆண் 64 /பெண் 29)

வயது வரம்பு (வருடம்)	அங்கவீனத்தின் தன்மை									மொத்தப் பிள்ளைகளின் எண்ணிக்கை
	ஓட்டிசம்	பெருமூளை வாதம்	டவுன் சின்ட்ரம்	வளர்ச்சியில் தாமதம்	பேச்சுக் கோளாறு	உயர் செயல்திறன்	செவிப்புலக் குறைபாடு	உளக்கோளா	பிற	
0 - 03	2	-	4	4	1	-	-	-	-	**11**
03 - 05	7	1	4	5	1	-	-	-	-	**18**
05 - 15	11	10	8	14	3	-	2	1	-	**49**
15 - 18	-	1	9	1	-	-	-	-	-	**11**
18 இற்கு மேல்	1	-	2	-	-	-	-	1	-	**4**
மொத்தம்	**21**	**12**	**27**	**24**	**5**	**-**	**2**	**2**	**-**	93

ஒவ்வொரு பிரிவுகளினூடாக வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பிலான விவரங்கள்.

இல.	வழங்கப்பட்ட சேவை	பிள்ளைகளின் எண்ணிக்கை
உடற்பயிற்சிச் சிகிச்சை	18	18
பேச்சுப் பயிற்சிச் சிகிச்சை	34	34
தொழிற் பயிற்சி சிகிச்சை	65	1860

நிகழ்நிலை (Online) ஊடாக வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பிலான விவரங்கள்.

வழங்கப்பட்ட சேவை	பிள்ளைகளின் எண்ணிக்கை	தடைவைகளின் எண்ணிக்கை
கல்விப் பிரிவு	65	3036
பேச்சுப் பயிற்சிச் சிகிச்சை	40	55
அன்றாட செயற்பாடுகள்	57	214

2.1.3 தன்னார்வ அமைப்புக்களுக்கு கொடுப்பனவுகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

அங்கவீனமுற்ற நபர்களுக்கு சேவை வழங"குவதற்காக நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும் தன்னார்வு அமைப்புக்களுள் தொழிற் பயிற்சி நிறுவனங்கள், திறன் அபிவிருத்தி நிலையங்கள். விசேட பிரிவுகள்) தெரிவுசெய்யப்பட்ட சில அமைப்புக்களுக்காக சமூக சேவைகள் திணைக்களம் மூலம் மேற்கொள்ளப்படும். இவ்வாறு வழங்கப்படும் கொடுப்பனவுகள் நிறுவனத்தின் தன்மை, தேவைப்பாடு, மற்றும் கோரிக்கையின் கீழ் பயிலுநர் கொடுப்பனவு, பராமிரிப்பு கொடுப்பனவு, பங்குபற்றலுக்கான கொடுப்பனவு, ஆசிரியர் கொடுப்பனவு, உபசரிப்புக் கொடுப்பனவு, போக்குவரத்துக் கொடுப்பனவு இவ்வாறு வழங்கப்படும் கொடுப்பனவுகள் பல்வேறு தன்மைகளைக் கொண்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் மேற்குறித்த கொடுப்பனவு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவைகள் வழங்கப்பட்ட தன்னார்வ அமைப்புக்களின் எண்ணிக்கை 23 ஆக காணப்பட்டதுடன் அந்த ஒவ்வொரு நிறுவனத்துக்காகவும் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான விபரம் பின்வருமாறு.

தன்னார்வ அமைப்புக்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளின் எண்ணிக்கை

தொ. இல	தன்னார்வு அமைப்பு	பயிலுனர் கொடுப்பனவு	பராமரிப்பு கொடுப்பனவு	ஊக்கேற்புக் கொடுப்பனவு	ஆசிரியர் கொடுப்பனவு	உபசரிப்பு கொடுப்பனவு	போக்குவரத்து கொடுப்பனவு
01	திறன் அபிவிருத்தி நிலையம் - மாலமுல்ல	-	-		02		-
02	சிறுவர் வழிகாட்டல் நிலையம் - கெட்டுவான	-	-	15	02	15	-
03	லிட்ல் ப்ளவர் விசேட சிறுவர் அபிவிருத்தி நிலையம் - படல்கும்புர	-	-	22	03	22	-
04	லிட்ல் ப்ளவர் விசேட சிறுவர் அபிவிருத்தி நிலையம் - இப்பாகமுவ	-	-	22	01	22	-
05	அங்கவீனமுற்ற சிறுவர் அபிவிருத்தி நிலையம், தோலங்கமுவ	-	-	15	03	15	-
06	சிறுவர் திறன் அபிவிருத்தி நிலையம், அக்மீமன	-	-	-	01	-	-
07	அங்கவீனமுற்ற நபர்கள் அபிவிருத்தி மன்றம், பண்டாரவளை	26	26	-	-	-	-
08	ரியன்சி அலகியவன்ன தொழிற் பயிற்சி நிறுவனம் - பட்டுகம்மன	16	16	-	-	-	-
09	மனவளர்ச்சி குன்றிய பெண்கள் புனர்வாழ்வு நிலையம் - மொரட்டுவ		29	-	-	-	-
10	தேசிய உளச் சுகாதார சபை - சஹனய கொழும்பு	-	-	-	-	15	15
11	ரிட்டிகஹயாய மகா வித்தியாலயம், கட்டுவன	-	-	-	01	-	-
12	கட்டுவன ஆரம்ப பாடசாலை, கட்டுவன	-	-	-	01	-	-
13	அருணெல்ல விசேட பாடசாலை - வீரகெட்டிய	15	-	-	03	-	-
14	திறன் அபிவிருத்தி நிலையம் - ராஜாங்கனை	-	-	-	02	-	29
15	செனெஹச சிறுவர் திறன் அபிவிருத்தி நிலையம், சூரியவெவ	-	-	-	01	-	-
16	சிறுவர் திறன் அபிவிருத்தி நிலையம் பொல்பித்திகம	-	-	15	02	15	-
17	'எமது பிள்ளைகள்" திறன் அபிவிருத்தி நிலையம், குருவிட்ட	-	-	-	02	-	-
18	விசேட கல்விப் பிரிவு, தெல்கொட	-	-	-	02	-	-
19	சஹன செவன, சேருவில	-	-	-	02	-	-
20	உளச் சுகாதார பிரிவு, ஹப்புத்தளை	-	-	-	02	-	-
21	பெத்தும் உயன நிலையம், மொரட்டுவ	-	-	-	01	-	-
மொத்தம்		**57**	**71**	**89**	**31**	**104**	**44**


மேற்குறித்த கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக 2021 ல் நாத்தண்டிய சுவர்ணதாம நிறுவனத்துக்காகவும் 60,000/- ரூபாய் மற்றும் ராஜகிரிய தேசிய செவிப்புலனற்ற சேவை சபைக்காக 40,000/- ரூபாய் வழங்கப்பட்டுள்ளதுடன் மாலமுல்ல ஆற்றல் அபிவிருத்தி நிலையம் மற்றும் தோலங்கமுவ அங்கவீனமுற்ற சிறுவர் அபிவிருத்தி நிலையத்துக்கான இயந்திர சாதனங்கள் திருத்தம், தோட்ட அலங்காரம் மற்றும் எழுதுகருவிகளுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

2.1.4 பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலரற்ற மூளை வளர்ச்சி குன்றிய ஆண் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பினை வழங்கும் செயற்திட்டம்

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் செயற்படும் மற்றுமொரு முன்னணி நிகழ்ச்சித்திட்டமாக பெற்றோர் மற்றும் பாதுகாலர்களை இழந்த பல்வேறு வயதுப் பிரிவைச் சேர்ந்த புத்திக் குறைபாடுடைய ஆண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு வழங்குதல் காணப்படுகிறது. இதற்காக நடைமுறைப்படுத்தப்படும் புவக்பிட்டி "ஜயவிரு செவன" நிறுவனத்தில் 2021 ல் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய இரண்டு மாடிக் கட்டிடம் காரணமாக சேவை பெறுநர்களுக்கான வசதிகள் மற்றும் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு இறுதி அளவில் 76 சேவை பெறுநர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டதுடன் இவர்களுள் 61 பேர் உள ஊணமுற்ற நபர்களாக காணப்பட்டார்கள். மனநலம் பாதிக்கப்பட்ட நோயாளர்கள், பேச்சு மற்றும் செவிப்புல குறைபாடுடைய நபர்கள் விழிப்புலனற்ற நபர்கள் மற்றும் அசைவு ஊணமுற்ற நபர்கள் முறையே 05, 04, 03 மற்றும் 02 ஆக காணப்பட்டது. பாதுகாப்பு பெற்றவபர்களுள் ஒரு நபர் பல்லூடக அங்கவீனமுற்ற நபராக காணப்பட்டார்.

வயதுப் பிரிவு அடிப்படையில் பாதுகாப்பு பெற்ற நபர்கள்



நிறுவனம் மூலம் பாதுகாப்பு பெறும் நபர்களுள் அதிகமானோர் 31-31 - 50 வயதுக்கு இடைப்பட்ட வயதுப் பிரிவை பிரதிநிதித்துவம் செய்பவர்கள் ஆவார்கள். அதனை அளவு ரீதியாக நோக்கும் போது 49 ஆகும். 18 - 30 வயதுப் பிரிவில் உள்ள இளைஞர்கள் சுமார் 15 பேர்கள் என்பதுடன் சேவை பெறுநர்களுள் ஆகக் குறைந்த அளவு 51 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்பதுடன் அளவு ரீதியாக அது சுமார் 12 ஆகும்.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்

செலவுத் தலைப்பு 216 – 02- 03 – 1- 1501 (2021/12/31 இல்)

தொ. இல.	செயற்பாடுகள் மற்றும் பௌதீக முன்னேற்றம்	செலவு ரூபா.
01.	பயிற்சிக்கான மூலப் பொருட்கள் மற்றும் பிற I. மூலப்பொருட்கள் II. பிற நலன்புரிச் செலவுகள் III. ஆலோசனைப் பயிற்சிக் கொடுப்பனவுகள் IV. கல்விச் சுற்றுலாக்கள்	10,256,013.23
02.	முறைசார் வகையில் வாழ்க்கைத் தொழில் பயிற்சியினை நிறைவு செய்துள்ள பயிலுனர்களுக்கு கருவித் தொகுதிகளினை வழங்குதல். I. ரூபா. 15,000/- பெறுமதியான 148 உபகரணத் தொகுதிகளினை வழங்குதல் II. 42 பயிலுனர்களுக்கு 42 தையல் எந்திரங்களினை வழங்குதல்.	5,539,293.00
03.	சிறுவர் வழிகாட்டி நிலையம் I. சேவை நாடியினரின் வரவுக் கொடுப்பனவினை வழங்குதல். II. உணவுச் செலவுகள் III. சிகிச்சையாளர்களுக்கான கொடுப்பனவுகள்	1,043,746.00
04.	திணைக்களத்தின் கீழ் நிதி அனுசரணையினைப் பெறும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பராமரிப்பு மற்றும் தகுந்த உதவிகளினை வழங்குதல். I. செவிப்புலனற்றவர்களுக்கான சபை II. சுவர்ணதாம மன்றம்	100,000.00
05.	மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகளினை வழங்குதல் I. வீரகெட்டிய அருணல்ல விசேட பாடசாலை - ஆசிரியர்கள் 03 II. கட்டுவன ரிட்டிககயாய முன்பள்ளி - ஆசிரியர்கள் - 02 III. படல்கும்புர லிட்டில் பிளவர்ஸ் சிறுவர் திறன் விருத்தி நிலையம் - ஆசிரியர்கள் - 03 IV. தோலங்கமுவ சிறுவர் வழிகாட்டி நிலையம் - ஆசிரியர்கள் - 03 இப்பாகமுவ விசேடக் கல்வி நிலையம் -25 ஆசிரியர் - 01 V. மாலமுல்ல திறன் விருத்தி நிலையம் - ஆசிரியர் - 02 VI. சிறுவர் திறன் நிலையம் - அக்மீமன ஆசிரியர் 01 VII. சிறுவர் வழிகாட்டி நிலையம் கட்டுவான - ஆசிரியர் - 02 VIII. சஹன செவன சேருவில - ஆசிரியர்கள் 02 IX. உளச் சுகாதார பிரிவு ஹப்புத்தளை - ஆசிரியர்கள் 02 X. விசேட கல்விப் பிரிவு, தெல்தொட்ட - ஆசிரியர்கள் 02 XI. எமது பிள்ளைகள் திறன் அபிவிருத்தி நிலையம், குருவிட்ட - ஆசிரியர்கள் 02 XII. பெத்தும் உயன நிலையம், மொரட்டுவ - ஆசிரியர்கள் 01 XIII. சென்ஹச சிறுவர் திறன் அபிவிருத்தி நிலையம், சூரியவெவ - ஆசிரியர்கள் 01 XIV. சிறுவர் திறன் அபிவிருத்தி நிலையம், பொல்பித்திகம - ஆசிரியர்கள் 02 XV. இணைந்த தொழிற் பயிற்சி நிலையம், தோலங்கமுவ - ஆசிரியர்கள் 03 XVI. திறன் அபிவிருத்தி நிலையம், ராஜாங்கனை - ஆசிரியர்கள் 02	2,337,700.00
06.	வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களின் சீருடைகள் - ரீசேட், பொட்டம்	2,394,427.50

07.	தன்னார்வ நிறுவனங்களின் பயிலுநர்களுக்கான பாக்குவரத்து, தேனீர் மற்றும் சிற்றுண்டி, பங்கேற்றல் கொடுப்பனவு I. தோலங்கமுவ சிறுவர் வழிகாட்டி நிலையம் II. இராஜாங்கன திறன் விருத்தி நிலையம் III. இப்பாகமுவ லிட்ல் ப்ளவர் விசேட சிறுவர் அபிவிருத்தி நிலையம் IV. படல்கும்புர சிறுவர் அவிருத்தி நிலையம் V. மாலமுல்ல திறன் அபிவிருத்தி நிலையம் VI. சிறுவர் வழிகாட்டி நிலையம் - கெட்டுவான VII. சிறுவர் திறன் அபிவிருத்தி நிலையம், பொல்பித்திகம VIII. தேசிய உளச் சுகாதார சபை - சஹனய	1,964,150.00
08.	அங்கவீனமற்ற நபர்களுக்கு நிதியுதவி வழங்குதல் 1. விசேட மலசலகூட உதவி - 87 2. விசேட கருத்திட்டங்கள் - 01 3. தொழிற் பயிற்சியை நிறைவுசெய்த சுயதொழில் புரியும் நபர்களுக்கு உதவி வழங்குதல் - 09	4,013,475.00
செலவுகளின் மொத்தம்		**27,648,804.73**
ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு		**28,000,000.00**

அங்கவீனமுற்ற நபர்களுக்கான நலன்புரி மற்றும் அபிவிருதுதி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் மற்றுமொரு கருத்திட்டம் விழிப்புலனற்ற நபர்களுக்கு சேவை வழங்குதல் ஆகும். இதன் கீழ் திணைக்கள சமிக்ஞை மொழியர்ப்பு அலுவலர்கள் மூலம் நாடு முழுவதும் வாழும் செவிப்புலக் குறைபாடுடைய நபர்களுக்கான சமிக்ஞை மொழிபெயர்ப்பு சேவை வழங்கப்படுவதுடன் செவிப்புலன் குறைபாடுடைய நபர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது. 2021 ஆம் ஆண்டு செவிப்புலன் குறைபாடுடைய நபர்களுக்கு 47 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்ட பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்

செலவுத் தலைப்பு 216-02-03-13 – 1501 (2021/12/31 இல்)

தொ.இல.	செயற்பாடுகள்	ஒதுக்கீடுகள் ரூபா.	செலவு ரூபா.
01.	திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களின் அங்கவீனமுற்ற பயிலுனர்கள் 344 பேருக்கு பயிலுனர் கொடுப்பனவுகள் (ஒரு பிள்ளைக்கு ரூபா. 150/-)	14,925,000.00	9,539,600.00
02.	jணைக்களத்தின் நிதி அனுசரணை பெறும் தன்னார் நிறுவனங்களின் 45 சேவை பெறுநர்களுக்கான கொடுப்பனவு செலுத்துதல்		

அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரி நிகழ்ச்சித் திட்டம் – நிதி முன்னேற்றம்

செலவுத் தலைப்பு 216-02-03 – 1203 (2021/12/31 இல்)

தொ.இல.	செயற்பாடுகள்	ஒதுக்கீடு ரூ.	செலவினம் ரூ.
01	வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களின் உணவுக்கான கொடுப்பனவு மற்றும் விடுதிக் காப்பாளர், பராமரிப்பு உத்தியோகத்தர்களுக்கு சீருடைக் கொடுப்பனவினை வழங்குதல்.	28,000,000.00	26,956,306.22

2.1.5 அங்கவீனமுற்ற பிள்ளைகளின் விளையாட்டு, கலாசார மற்றும் கலைத்திறன் விருத்தி கருத்திட்டம்

சமூக சேவைகள் திணைக்களம், அங்கவீனமுற்ற சிறுவர் சிறார்களின் தொழில்வாண்மை இயலுமைகளினை வலுவூட்டுவதை முன்னெடுத்து வருவதுடன், அவர்களினை, அழகான ஆரோக்கியம் நிறைந்த சுறுசுறுப்பான நபர்களாக சமூகத்துடன் ஒன்றிணைப்பதற்கு பிரதானமாக நடவடிக்கை எடுத்து வருகின்றது. அது தொடர்பில் நாட்டின் சகல அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளினைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடியவாறு அவர்களின் விளையாட்டுகள் மற்றும் கலைத் திறன்களினை மாவட்ட மட்டத்தில் இனங்கண்டு ஒவ்வொரு வருடமும் தேசிய விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சியினை நடாத்துதல் இடம்பெற்று வருகின்றது. மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டும் நபர்கள் மற்றும் குழுக்கள் தேசிய மட்டப் போட்டிகளுக்கு முன்வைப்பதும், அதன் பின்னர் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள், விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குவதும் இடம்பெறுகின்றது.

இலங்கையின் கலாசார பழக்கவழக்கங்கள் தொடர்பில் உயிரோட்டமான அனுபவத்தினை அனுபவிக்கும் வாய்ப்பினை அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு வழங்குதல், மற்றவர்களிடையே அவர்களின் விளையாட்டு மற்றும் நடனம் மீது காணப்படும் திறனை மேம்படுத்துதல், அங்கவீனமுற்ற சமுதாயம் தொடர்பில் சமூகத்தில் நிலவும் பாரம்பரிய தவறான மனப்பாங்குகளினை மாற்றுதல் மற்றும் அவர்களினை சமூக ரீதியாக ஏற்றுக் கொள்ள வைப்பதும் இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் கீழ் அமுலாக்கப்படும் பிரதான தேசிய நிகழ்ச்சித் திட்டங்கள் 03 ஆகும்.

i. அங்கவீனமுற்ற பிள்ளைகளின் தேசியக் கலை நிகழ்ச்சி - "சித் றூ"
ii. அங்கவீனமுற்ற நபர்களின் தேசிய தடகள விளையாட்டு விழா
iii. அங்கவீனமுற்ற பிள்ளைகளின் புத்தாண்டு விழா

COVID 19 தொற்றுநோய் காரணமாக மக்கள் பெருந்திரளாக ஒன்றுகூடி நடாத்தப்படும் விழாக்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்தாதிருக்குமாறு சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அங்கவீனமுற்ற பிள்ளைகள், பெற்றோர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் மிகப் பிரமாண்டமான எண்ணிக்கையில் கலந்துகொள்ளும் அங்கவீனமுற்ற நபர்களின் தேசிய மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி மற்றும் "சித் ரூ" கலை நிகழ்வை 2021 இல் நடாத்த முடியாது போனாலும் அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கான புத்தாண்டு கலாச்சார விளையாட்டுப் போட்டிகள் சிறுவர் வழிகாட்டி நிலையங்கள் மற்றும் தொழிற் பயிற்சி நிலைய மட்டத்தில் நடாத்தப்பட்டது.

2.1.6 சமுதாய மட்டத்திலான புனர்வாழ்வுத் தேசிய நிகழ்ச்சித் திட்டம் (சீ.பீ.ஆர்.)

அங்கவீனமுற்ற நபர்களின் தேசியக் கொள்கைக்கமைய, அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இயலுமானவாறு அவர்களின் அறிவு மற்றும் திறமைகளை வலுவூட்டுதல் பிரதானமாக இடம்பெறுகின்றது. அதே போல அச்சமுதாயத்தின் குடும்ப அங்கத்தவர்களின் பொருளாதாரம் மற்றும் அங்கத்துவத்தினை சிறந்தவாறு முன்னெடுப்பதை உறுதிப்படுத்தும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களும் இதன் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

சமுதாய மட்டத்திலான புனர்வாழ்வுத் தேசிய நிகழ்ச்சித் திட்டம் – நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

செலவுத் தலைப்பு 216 -02 -03 -5 – 2509 (2021/12/31 இல்)

செயற்திட்டம்	நிகழ்ச்சித் திட்டம்	பௌதிக முன்னேற்றம்	மதிப்பீடு ரூ.மி.	செலவு ரூ.மி.
சமுதாயஞ் சார் புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் (சீ.பீ.ஆர்)	அடி மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை சுவசக்தி அமைப்புக்களினைப் பாராட்டுதல் – "சுவாபிமானி" துசிய விருது வழங்கல்	2019 kற்றும் 2020 ஆண்டுக்காக விருது வழங்கப்பட்டது	3.479	3.05
	அங்கவீனமுற்ற சமுதாயத்திற்கான நேரடி உதவி வழங்குதல் • கொமட் மலசலகூடம் • மின்சார வசதிகள் • பிரவேசிப்பு வசதிகள் • காற்று மெத்தைகளினை வழங்குதல். • நீர் மெத்தைகளினை வழங்குதல் • நீர் வசதிகள் • பிற உதவிகள்	நேரடி உதவி - 142	1.871	1.89
	மாவட்ட மற்றும் பிரதுச செயலகங்களில் முன்னேற்ற மீளாய்வு மற்றும் விளக்கமளித்தல் நிகழ்ச்சித திட்டங்களை நடாத்துதல்	நிகழ்ச்சித்திட்டம் - 1181	1.36	1.299
	iவத்தியசாலை நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்	நிகழ்ச்சித்திட்டம் 864 பயனாளிகள் 1799	0.2	0.063
	cத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்	பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 04	0.1	0.155
	தேசிய ரீதியிலான முன்னேற்ற மீளாய்வு /fலந்துரையாடல் பிரதான அலுவலகம்	முன்னேற்ற மீளாய்வு கூட்டம் 04	0.1	0.033
	நிர்வாக செலவு	சீ.பீ.ஆர். பிரிவின் தொலைபேசிப் பற்றுச்சீட்டுக்கள், எழுதுகருவிகள் மற்றும் பிற பொதுச் செலவுகள்	0.1	0.1
	காலத்தின் தேவைக்கேற்ப ஆக்கபூர்வமான நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கருத்திட்டங்களை நடாத்துதல்	நிகழ்ச்சித்திட்டம் - 48	3.79	2.45
மொத்தம்			**11.0**	**9.04**

2.1.7 விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம்

பார்வையற்ற நபர்களுக்கு தேவையான சேவைகளினை வழங்குதல், மறுவாழ்வளித்தல் மற்றும் நிவாரணங்களினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, நாடுபூராவும் வியாபித்துள்ள பார்வையற்ற சமுதாயத்திற்கும் மற்றும் அவர்களின் குடும்பங்களின் நலன்புரிக்கென பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் இதன் கீழ் இடம்பெறுகிறது. இக் கருத்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட பல நிகழ்ச்சித்திட்டங்களை மாற்றமின்றி மேற்கொள்ள முடிந்த போதும் கொவிட் 19 தொற்றுநோய் மத்தியில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக சில நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு முடியவில்லை. அவ்வாறான சவால்களின் மத்தியிலும் கூட நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய செயற்பாடுகள் மூலம் உயர்வான பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தை அடைந்து கொள்ள முடிந்தது..

விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம் - நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

செலவுத் தலைப்பு 216-02-03-3-1508 (2021/12/31 இல்)

தொ. இல.	நிகழ்ச்சித் திட்டம்	பௌதீக முன்னேற்றம்	மதிப்பீடு ரூபா	செலவு ரூபா
01	விளையாட்டு உதவி	05	12,000.00	12,000.00
02	தொழிற் பயிற்சி	05	350,000.00	157,000.00
03	**கல்வி மற்றும் கலாசார உதவிகள்**		8,124,945.00	7,500,555.00
	I. tழிப்புலனற்ற மாணவர்கள் மற்றும் விழிப்புலனற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாணவர் உதவு தொகை வழங்குதல்	381		
	II. விழிப்புலனற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கு கையடக்க தொலைபேசி வழங்குதல் (டேசி பதிவுக்கு பதிலாக)	49		
	III. பருவகால சஞ்சிகைகளுக்கு உதவிகளினை வழங்குதல்	12		
04	**புனர்வாழ்வு உதவிகள்**		1,336,661.50	1,184,311.50
	I. பேச்சுப் புத்தகங்கள்	பக்கம் 24000		
	II. இலங்கை விழிப்புனர்வற்ற மக்கள் சம்மேளனத்துக்கு பிரேல் ரைட்டர் வழங்குதல்	02		
	III. விழிப்புனர்வற்ற நபர்களுக்கு சங்கீத் உபகரணங்களை வழங்குதல்	01		
	IV. விழிப்புனர்வற்ற நபர்களுக்கு சுயதொழில் உதவி வழங்குதல்	15		
	V. விழிப்புனர்வற்ற நபர்களின் வீடுகளுக்கு மின்சாரம் வழங்குதல்	01		
	VI. இலங்கை பார்வையற்ற மக்கள் சேவை சபைக்கு உபகரணம் வழங்குதல்	நீர் வடி - 01 பீரிஸ் -24		
05	கண்வில்லை மற்றும் கண் சிகிச்சை	கண்வில்லை - 03	116,293.50	46,950.00
06	கணக்காயவு கட்டணம்		156,000.00	156,000.00
07	நிதிச் செலவு		25,000.00	6,830.00
08	நானாவித செலவுகள்		29,100.00	26,980.00
09	நிர்வாக செலவு		500,000.00	494,725.50

2.2 போதைக்கு அடிமையான நபர்களுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகமயப்படுத்தும் கருத்திட்டம்

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல், சமூகத்துடன் ஒன்றிணைத்தல் மற்றும் தொழில்வாண்மையான இயலுமைகளினை மேம்படுத்துதல் இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக இடம்பெறுகின்றது. கெரோயின், கஞ்சா/கேரளா கஞ்சா. மதுசாரம் மற்றும் போதைமருந்து பாவிப்பதால் வாழ்க்கை இருட்டாகிப் போயுள்ள தொகுதியினரினை எமது நிறுவனத்திற்குள் சேர்த்துக் கொள்ளுதல் ஆரம்பத்தில் இடம்பெறுகின்றது.


நிறுவனத்திற்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் உள சிகிச்சை, உளவியல் உளவளத்துணை மூலோபாயங்கள் மற்றும் மருத்துவ உளவியல் அணுகுமுறைகளினூடாக புனர்வாழ்வுச் செயற்பாடுகளுக்கு அனுப்புதல் பிரதானமாக இடம்பெறுகின்றது. அக்காலத்தினுள் பயிலுனர்களின் ஆன்மீகம்சார் வளர்ச்சி தொடர்பில் யோகாசனம் மற்றும் கலாசார நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. பயிலுனர்களைப் புனர்வாழ்வளிக்கும் காலத்தினுள் விடுதி வசதிகள், உணவு பானங்கள் மற்றும் மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படும். பயிலுனர்களின் வாழ்வாதார வழிகளை மேம்படுத்துதற்குத் தேவையான தொழில்வாண்மையான இயலுமைகளை மேம்படுத்தும் பயிற்சியும் விடுதியிலுள்ள காலத்தினுள் வழங்கப்படும்.

நிறுவனத்திற்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டு புனர்வாழ்வளிக்கப்படுவதுடன், நாட்டில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் கிராம சேவைப் பிரிவுகளினூடாகப் பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டுதல் மற்றும் குடும்ப அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களும் இதன் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

2.2.1 சேவை பெறுனர்கள் நிறுவனத்தில் தங்க வைக்கப்படுதல்

2021 ஆம் ஆண்டில் ஜயவிரு சமாதி புகலிட நிறுவனத்தில் மறுவாழ்வு சேவையினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு பல்வேறு போதைப்பொருட்களுக்கு அடிமையான சுமார் 139 பேர் வரை நிறுவனத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அளவு ரீதியாக நோக்கும் போது அது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 21 நபர்கள் அதிகரித்துள்ளார்கள். சுயமாக 117 பேர் மற்றும் நீதிமன்ற உத்தரவின் கீழ் 22 ஆக உள்ளடக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு பெற்ற மற்றும் சமூகமயப்படுத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை - 2017-2021



போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விளக்கமளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் 216- 02-03-2-1501 – (2021/12/31) இல்

செயற்பாடுகள்	ஒதுக்கீடு (ரூ)	நிதி முன்னேற்றம் (ரூ)	பௌதீக முன்னேற்றம்
சமூக போதை தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் (மாவட்ட மற்றும் பிரதுச ரீதியாக)	1,500,000.00	905,603.00	7 மாவட்ட செயலகங்களில் தெரிவு செய்யப்பட்ட 22 பிரதேச செயலகங்களின் இலக்கு சமூகத்துக்கு விளக்கமளித்தல்

2.3 வெற்றிகள்

- **மட்டக்களப்பு புதிய தொழிற் பயிற்சி நிலையத்தை திறந்து வைத்தல் மற்றும் பயிற்சிப் பாடநெறிகளை ஆரம்பித்தல்**

அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்காக தமிழ் மொழி மூலம் தொழிற்பயிற்சி வழங்குவதனை நோக்கமாக கொண்டு கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய தொழிற் பயிற்சி நிலையம் 2021.12.02 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டதுடன் இலத்திரனியல் மற்றும் தையல் ஆகிய இரண்டு பாடநெறிகளின் கீழ் 40 பயிலுநர்கள் ஆட்சேர்க்கப்பட்டு பாடநெறி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

- **தோலங்கமுவ இணைந்த தொழிற் பயிற்சி நிலையத்தை திறந்து வைத்தல்**

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் செயற்படும் தொழிற் பயிற்சி நிறுவனத்தின் மூலம் வதிவிடத்துடன் வழங்க முடியுமான அளவு ஆகக் கூடியது நானூறு மாணவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலைமையில் மற்றும் வீட்டை விட்டு நீண்ட காலம் வெளியில் இருப்பதற்கு விரும்பாத அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு தொழிற்பயிற்சி வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் அதற்கு ஆரம்பமாக இணைந்த தொழிற் பயிற்சி நிலையம் வத்தேகம தொழிற் பயிற்சி நிலையத்துடன் இணைந்த கேகாலை மாவட்டத்தின் வரக்காபொல பிரதேச செயலகப் பிரிவில் தோலங்கமுவ இணைந்த தொழிற் பயிற்சி நிலையம் என 2021 நவம்பர் மாதம் 17 ஆம் திகதி திறந்து வைத்து தெரிவு செய்யப்பட்ட 17 மாணவர்களுக்கு பத்திக் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது.

- **மூளை வளர்ச்சி குன்றிய நபர்களுக்கான பாதுகாப்பு நிலையத்தை விரிவாக்குதல் / கொள்ளவினை அதிகரித்தல்**

பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களை இழந்த மூளை வளர்ச்சி குன்றிய ஆண்களுக்கு பாதுகாப்பு வழங்கும் கருத்திட்டத்தின் கீழ் சமூக சேவைகள் திணைக்களத்தின் மூலம் நடத்திச் செல்லப்படும் புவக்பிட்டிய ஜயவிரு செவன நிறுவனத்தில் காணப்படும் கொள்ளளவு நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் சேவை பெறுநர்களின் கேள்விக்கு போதுமானதாக இல்லை என்பதனால் அதன் கொள்ளளவை அதிகரித்து மற்றுமொரு மூளை வளர்ச்சி குன்றிய 50 ஆண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்கத்தில் நிர்மானிக்கப்பட்ட புவக்பிட்டிய புதிய இரண்டு மாடிக் கட்டிடம் 2021.04.01 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. அதன் பிரகாரம் அதன் மொத்த கொள்ளளவு 130 பேர்கள் வரை அதிகரிக்கப்பட்டுள்ளன.

- அம்முனுகும்புர தொழில் பயிற்சி நிலையத்துடன் இணைந்த திணைக்களத்தின் மனித வள அபிவிருத்திக்காக 27 நபர்களுக்கு தங்க முடியுமான வதிவிட பயிற்சி நிலையம் 2021.02.11 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

2.4 சவால்கள்

- திணைக்களத்தின் மூலம் நிர்வகிக்கப்படும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தொழில் பயிற்சி நிறுவனங்களில் இருந்து வெளியேறும் தொழிற்பயிற்சி பயிலுனர்களை தொழிலில் ஈடுபடுத்தல்.
- அங்கவீனமுற்ற நபர்களை புனர்வாழ்வு அளிக்கும் போது தனிநபர் அபிவிருத்தியினை திட்டமிடல் மற்றும் திட்டங்களுக்கு ஏற்ப செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- நீண்டகால பாதுகாப்பு தேவையான அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக போதுமான வழங்கல் மற்றும் வசதிகள் காணப்படாமை.
- வைத்தியசாலை நலன்புரி சேவைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் சுகாதார பாதுகாப்பினை உறுதி செய்தல்.

2.5 இலக்குகள்

- **ஹம்பாந்தோட்டை சிறுவர் வழிகாட்டி நிலையத்தினை ஆரம்பித்தல்.**

  முன்பிள்ளைப் பருவத்திலுள்ள அங்கவீனமுற்ற பிள்ளைகளினை முன்கூட்டியே அடையாளம் காணுதல் மற்றும் அங்கவீன நிலைமையினைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கென சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் தற்போது செயலாக்கப்படும் நாவின்ன சிறுவர் வழிகாட்டி நிலையத்தினை முன்மாதிரியாகக் கொண்டு ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் முன்பிள்ளைப் பருவத்திலுள்ள அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கென்று சேவையினை வழங்குவதற்காக அம்பலந்தொட்ட பிரதேச செயலகப் பிரிவில் "சித்திஜய" என்ற பெயரில் மாவட்ட சிறுவர் வழிகாட்டி நிலையம் புதுப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2022 இல் அதன் கல்வி நடலவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- **கொட்டாவ திறன் விருத்தி நிலையத்தை ஆரம்பித்தல்**

  13-19 வயதிற்கிடைப்பட்ட இளம் பெண்களினை, வாழ்க்கைத் தொழிற் பயிற்சி தொடர்பில் முன்வைப்பதற்குத் தேவையான முன் ஆயத்தத்தினைச் செய்யும் நோக்குடன், இந்நிலையத்தினை, 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- **றியன்சி அலகியவன்ன மகளிர் திறன் விருத்தி மற்றும் பாதுகாப்பு தேசிய நிலையத்தினை ஆரம்பித்தல்**

  இரத்தினபுரி மாவட்டத்தின் gyhq;nfhil பிரதேச செயலகப் பிரிவில் பட்டுகம்மன பிரதேசத்தில் ''றியன்சி அலகியவன்ன தொழிற் பயிற்சி நிலையம்'' என நடாத்திச் செல்லப்பட்ட நிறுவனத்தை சமூக சேவைகள் திணைக்களம் பொறுப்பேற்று மூளை வளர்ச்சி குன்றிய பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நிலையமாக நடத்திச் செல்வதற்கு தேவையான நவீனமயப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அந்த நிறுவனத்தை 2022 ஆம் ஆண்டு மூளை வளர்ச்சி குன்றிய 50 பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்கில் ''றியன்சி அலகியவன்ன பெண்கள் பாதுகாப்பு நிலையம்'' என்ற பெயரில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- **கிளிநொச்சி தொழிற் பயிற்சி நிலையத்தை ஆரம்பித்தல்.**

  அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு தமிழ் மொழி மூலம் தொழிற்பயிற்சி வழங்கும் நோக்கில் நிர்மாணிக்கப்பட்ட கிளிநொச்சி புதிய தொழிற் பயிற்சி நிறுவனத்தின் முதற்கட்ட நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டத்தின் கீழ் சமையலறை மற்றும் சாப்பாட்டு அறைக் கட்டிடம், நீர்த்தாங்கி மற்றும் பாதுகாப்பு அரண் நிர்மாணிக்கும் பணிகள் இடம்பெற்று வருகிறது. 2022 ஆம் ஆண்டு நிறுவனத்தை திறந்து வைத்தல் மற்றும் பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- **05 புதிய சிறுவர் வழிகாட்டல் நிலையங்களை ஆரம்பித்தல்.**
  பிள்ளைகளின் அங்கவீன நிலைமை தொடர்பில் முன்கூட்டியே தலையிட்டு அவர்களின் அங்கவீன தன்மையினை குறைப்பதை நோக்கமாக கொண்டு சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் நாவின்ன சிறுவர் வழிகாட்டி நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தை முன்னுதாரணமாகக் கொண்டு 2022 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட 05 மாவட்டங்களில் அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கான புதிய சிறுவர் வழிகாட்டி நிலையங்களை தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- சிபிஆர் நிகழ்ச்சித் திட்டம் மூலம் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் பங்களிப்பின் கீழ் தலா ஒரு பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 2 அங்கவீனமுற்ற குடும்பங்களை பொருளாதார சமூக ரீதியில் வலுவடையச் செய்வதற்கான கருத்திட்டத்தை அறிமுகப்படுத்தல்.
- தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிரிடப்படாத காணிகளில் பயிரிடுவதன் மூலம் நிலத்திலிருந்து உயர்ந்தபட்ச நன்மைகளை பெற்றுக் கொள்ளல்.
- அங்கவீனமுற்ற நபர்களை உள்ளடக்கிய சுயசக்தி குழுக்களின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான சந்தையை உருவாக்குதல்.
- தொழிற்பயிற்சி நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தப்படும் பாடநெறிகளைப் புதுப்பித்தல் புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தல் மற்றும் சேவை வழங்குனர் மற்றும் பயிலுனர்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மூலம் அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கான தொழிற் சந்தையை விரிவுபடுத்தல்.

.....

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:- சந்தன ரணவீர ஆரச்சி
பதவி:- சமூக சேவைகள் பணிப்பாளர்
திகதி:- 2022.04

அத்தியாயம் 03

வருடத்தின் ஒட்டுமொத்த நிதிசார் செயற்திறன்

2021 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிசார் செயற்திறன் கூற்று

3.1 நிதிசார் செயற்திறன் கூற்று

2021 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற காலவரையறைக்கான நிதிசார் செயற்திறன் கூற்று

ஏசீஏ-எவ்

ரூ.

பாதீடு (2020)		குறிப்பு	உண்மை நிலை		
			2021	2020	
	வருமானப் பெறுகைகள்		-	-	
	வருமான வரி	1	-	-	
	உள்ளூர்ப் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏ.சீ.ஏ-1
	சர்வதேச வர்த்தகம் மீதான வரி	3	-	-	
	வரியல்லாத வருமானங்களும் மற்றும் ஏனையவையும்	4	-	-	
	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
	வருமானமல்லாத பெறுகைகள்		-	-	
	திறைசேரிக் கட்டுநிதி		340,843,000	267,006,000	எ.சீ.எ 3
	வைப்புக்கள்		1,169,486	3,858,409	ஏ.சீ.ஏ -
	முற்பணக் கணக்குகள்		19,227,401	18,059,782	ஏ.சீ.ஏ -
	ஏனைய பெறுகைகள்		-	-	
	மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ)		**361,239,887**	**288,924,191**	
	மொத்த வருமானப் பெறுகைகளும் மற்றும் வருமானமல்லாத பெறுகைகளும் (ஆ)+(அ)= (இ)				
	கழி: செலவு				
	மீண்டுவரும் செலவினங்கள்		-	-	
431,950,000	ஊதியங்கள், சம்பளம் மற்றும் பிற ஊழியர் பயன்கள்	5	428,219,961	359,418,082	

148,439,100	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6	144,272,394	84,417,974	ஏ.சீ.ஏ - 2(ii)
58,875,000	நிவாரண உதவி, மானியங்கள் மற்றும் மாற்றல்கள்	7	51,605,679	40,550,306	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
65,900	பிற மீண்டுவரும் செலவினங்கள்	9	65,806	-	
639,330,000	**மொத்த மீண்டுவரும் செலவினங்கள் (ஈ)**		**624,163,840**	**520,386,362**	
	மூலதனச் செலவு				
11,970,000	மூலதனச் சொத்துக்களினைப் புனரமைப்பதும் மற்றும் மேம்படுத்துவதும்	10	8,134,511	4,906,129	ஏ.சீ.ஏ 2(ii)
73,500,000	மூலதனச் சொத்துக்களினைக் கையகப்படுத்துதல்	11	58,498,925	81,072,214	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	
-	நிதிச் சொத்துக்களினைக் கையகப்படுத்துதல்	13	-	-	
2,500,000	திறன் விருத்தி	14	1,238,180	1,116,173	
12,700,000	பிற மூலதனச் செலவுகள்	15	9,095,352	9,104,522	
100,670,000	**மொத்த மூலதனச் செலவு (உ)**		**76,966,968**	**96,199,038**	
	பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)				
	வைப்புக் கொடுப்பனவுகள்		1,219,486	3,883,369	ஏ.சீ.ஏ - 4
	முற்பணக் கொடுப்பனவுகள்		24,601,679	18,204,418	எ.சீ.எ 5
	மொத்தச் செலவினம் (எ) = (ஈ+உ+ஊ)		726,951,974	638,673,187	
-	**2020 திசம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறான கட்டுநிதி மீதி ஏ = (இ-எ)**		**(365,712,087)**	**(349,748,996)**	

3.2 நிதி நிலவரம் தொடர்பிலான கூற்று

ஏசீஏ - பீ

2021 திசம்பர் 31 ஆந் திகதிய
நிதிநிலவரம் தொடர்பிலான கூற்று

	குறிப்பு		உண்மைநிலை	
			2021 ரூ.	2020 ரூ .
நிதியல்லாத சொத்துக்கள்				
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ 6		486,304,191	477,614,043
நிதிச் சொத்துக்கள்				
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ 5		58,110,226	52,735,948
காசும் மற்றும் காசுச் சமன்பாடும்	ஏசீஏ 3			
மொத்தச் சொத்துக்கள்			**544,414,417**	**530,349,991**
தேறிய சொத்துக்கள்/உரிமைப் பங்கு				
தேறிய சொத்துக்கள்			58,085,226	52,660,948
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்			486,304,191	477,614,043
நடைமுறைப் பொறுப்புக்கள்				
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ 4		25,000	75,000
கட்டுநிதி மீதி	ஏசீஏ 3			
மொத்தப் பொறுப்புக்கள்			**544,414,417**	**530,349,991**

பக்க இலக்கம் 34 தொடக்கம் 36 வரை காட்டும் மேற்குறிப்பிட்ட ஏசீஏ 1 தொடக்கம் 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புக்களின் பக்க இலக்கம் 37 தொடக்கம் 39 வரை உள்ளடங்கியுள்ள கணக்குக் குறிப்புக்களின் விவரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புக்கள் மற்றும் ஏனைய கணக்குகத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுபடுத்துகிறோம்.

.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: சுனேத்திரா குணவர்வர்தன
பதவி: செயலாளர்
திகதி:2022.04.25

.....
கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர் :சந்தன ரணவீர ஆரச்சி
பதவி:சமூக சேவைகள் பணிப்பாளர்
திகதி:2022.04.25

.....
பிரதான நிதி உத்தியோகத்தர் /
பிரதான கணக்காளர்/
பணிப்பாளர் (நிதி/
ஆணையாளர் (நிதி)
பெயர்:ஜெ.ஆர்.தெனவக
திகதி:2022.04.25

3.3 காசுப் பாய்ச்சல் தொடர்பிலான கூற்று

ஏசீஏ - சீ

2021 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் தொடர்பிலான கூற்று

	உண்மைநிலை	
	2021 ரூ.	2020 ரூ.
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், மேலதிகங்கள், தண்டப் பணங்கள் மற்றும் உரிமங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானமல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய செலவினத் தலைப்புக்களினூடாக சேகரிக்கப்பட்ட வருமானங்கள்	10,785,902	9,640,540
கட்டுநிக் கிடைப்பனவு	340,843,000	267,006,000
முற்பண அறவீடு	19,756,746	20,314,440
வைப்பு பெறுவனவுகள்	1,169,486	3,858,409
செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் செலவு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் (ஆ)	**372,555,134**	**300,819,389**
கழித்தல் - நிதியனைச் செலவு செய்தல்		
ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் செயற்பாட்டுச் செலவினங்கள்	294,472,253	233,382,394
மானியங்கள் மற்றும் மாற்றல்கள்	39,145,670	32,336,751
ஏனைய செலவினத் தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள்	1,322,412	1,096,155
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட கட்டுநிதி	-	-
முற்பண கொடுப்பனவு	24,143,239	20,228,994
வைப்புக் கொடுப்பனவு	1,219,486	3,883,369
செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் செலவு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் (ஆ)	**360,303,060**	**290,927,663**
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் (இ) = (அ)-(ஆ)	**12,252,073**	**9,891,726**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கிலாபம்	-	-
உரிமைகளை நீக்கும் ஏற்பாடுகள் மற்றும் பௌதிகச் சொத்துக்களினை விற்பனை செய்தல்.	-	-
உபகரணத்தினை அறவீடு செய்தல்	-	-
முற்பணத்தினை அறவீடு செய்தல்		

முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் (ஈ)		
கழித்தல் - நிதியினைச் செலவு செய்தல்		
பௌதிகச் சொத்துக்களினை நிர்மாணித்தல், கொள்வனவு செய்தல் மற்றும் வேறு முதலீட்டிற்குக் கையகப்படுத்தல்.	12,252,073	9,891,726
முற்பணக் கொடுப்பனவுகள்		
முதலீட்டு நடவடிக்கைகளுக்குச் செலவு செய்யப்பட்ட மொத்தக் காசுப் பாய்ச்சல் (உ)	12,252,073	9,891,726
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ) = (ஈ)-(உ)	(12,252,073)	(9,891,726)
செயற்பாடு மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சல் (எ) = (இ)+(ஊ)	(0)	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்	-	-
வெளிநாட்டுக் கடன்	-	-
நன்கொடைகள் கிடைத்தல்	-	-
கிடைக்கப் பெற்ற வைப்புக்கள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசுப் பாய்ச்சல் (ஏ)	-	-
கழித்தல் - நிதியினைச் செலவு செய்தல்		
உள்ளூர்க் கடனினை மீளவும் செலுத்துதல்	-	-
வெளிநாட்டுக் கடனினை மீளவும் செலுத்துதல்	-	-
வைப்புக் கொடுப்பனவு	-	-
நிதி நடவடிக்கைகளுக்குச் செலவு செய்யப்பட்ட மொத்தக் காசுப் பாய்ச்சல் (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று (ஒ) =(ஏ)- (ஐ)	-	-
நிதியின் தேறிய மாற்றங்கள் (ஒ) = (எ) - (ஒ)	(0)	-
ஜனவரி 01 ஆந் திகதியன்றைய ஆரம்பக் காசு மீதி	-	-
திசம்பர் 31 ஆந் திகதியன்றைய இறுதிக் காசு மீதி	-	-

3.4 நிதிக் கூற்றுக் குறிப்பு - தொடர்பற்றது

3.5 வருமானத்தினைத் திரட்டுவதன் செயற்திறன் - தொடர்பற்றது

3.6 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளினைப் பயன்படுத்துவதன் செயற்திறன்

ரூ. ,000

ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள்	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள்		உண்மையான செலவு	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள், முடிக்கப்பட்ட இறுதி ஒதுக்கீடுகளின் % மாக
	ஆரம்ப ஒதுக்கீடுகள்	இறுதி ஒதுக்கீடுகள்		
மீண்டெழும்	640,000	639,330	624,164	97.63%
மூலதன	100,000	100,670	76,967	76.46%

3.7 நி.பி. 208 இன் பிரகாரம், பிற அமைச்சுக்கள்/திணைக்களங்களின் முகவர் ஒருவராக இத் இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் - தொடர்பற்றது

3.8 நிதியல்லாத சொத்துக்களினை அறிக்கையிடுவதன் செயற்திறன்

ரூ. ,000

சொத்துக் குறியீடு	குறியீட்டு விவரம்	31.12.2021 ஆந் திகதிய திறைசேரி ஆய்வு அறிக்கையின் பிரகாரம் மீதி	31.12.2021 ஆந் திகதிய நிதி நிலவர அறிக்கையின் பிரகாரம் மீதி	எதிர்வரும் காலத்தில் கணக்கிடுவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ள	முன்னேற்றம் % ஆக அறிக்கையிடுதல்
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்புக்கள்	-	28,570	-	-
9152	எந்திரங்கள்	-	144,579	-	-
9153	காணிகள்	-	-	-	-
9154	தொட்டுணர முடியாத சொத்துக்கள்	-	19,800	-	-
9155	உயிரியில் சொத்துக்கள்	-	-	-	-
9160	நடந்து கொண்டிருக்கும் பணி	-	313,135	-	-
9180	குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள்	-	-	-	-

*திணைக்களத்திடம் உள்ள காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான மதிப்பீட்டுப் பெறுமதியினைப் பெற்றுக்கொள்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்த மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கின்றவாறு கணக்குப் பதிவடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

3.9 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

கணக்கீட்டு உத்தியோகத்தர்
சமூக சேவைகள் திணைக்களம்

சமூக சேவைகள் திணைக்களத்தின் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமூக சேவைகள் திணைக்களத்தின் 2021 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை உள்ளடக்கிய 2021 டிசம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோஷலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது உத்தரவின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சமூக சேவைகள் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கைச் சனநாயக சோஷலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் அறிக்கை உரிய நேரத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தி வரையான தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்கள் மூலம் 2021 டிசம்பர் 31ல் உள்ளவாறான சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை, காசுப்பாய்ச்சல் ஆகியன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து முனைப்பழியாக்கப்படுகிறது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு ஆகிய பிரிவுகளில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அடிப்படையினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானதும் பொருத்தமானதும் ஆகும் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவாக மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக உண்மையானதும்

நியாமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு ஆகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்தம் மற்றும் நடைமுறை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமானவாறு தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக மிகவும் பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று பேணப்பட்டு வருவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதி செய்யப்பட வேண்டியதுடன் அம் முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வுகளை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையினை பயனுள்ள விதத்தில் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவு ரீதியான பொய்யான கூற்றுக்கள் அற்றவை என நியாயமான ஓர் உறுதிப்பாட்டினை வழங்குதல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கையினை வெளியிடல் எனது நோக்கம் ஆகும். நியாயமான உறுதிப்பாடு உயர்வான தரத்தினைக் கொண்ட ஓர் உறுதிப்பாடாக அமைகின்ற போதும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்ற உறுதிப்பாடாக அமைய மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டு விளைவின் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக் கூடும் என்பதுடன் இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அதனைப் பயன்படுத்துபவர்களினால் பொருளாதாரத் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகக் கண்ணோட்டத்தில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் அபாயங்களை அடையாளம் காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அபாயத்தினைக் குறைப்பதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாக உள்ளது. பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினை விடவும் மோசடி காரணமாக பாரிய தாக்கம் ஏற்படும் என்பதுடன் தவறான செயற்பாடு, போலி ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்றே வழிவிடுதல், அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை வழிவிடுதல் ஆகியன மோசடிகள் நிகழ்வதற்கான காரணங்கள் ஆகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக இல்லாத போதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பாக தெளிவு பெறப்பட்டது.

- வெளிக்கொணர்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக் கூற்றுக்களில் உள்ளக்கப்பட்டுள்ளதனை மதிப்பீடு செய்தல்.

- நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமானவாறு உள்ளக்கப்பட்டுள்ளதென மற்றும் வெளிக்கொணர்தல் உள்ளிட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பிப்பு மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவூட்டப்பட்டது.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இணங்குவதாக

(ஆ) கடந்த ஆண்டுக்கு ஏற்புடைய நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 1.6.1.1(உ) பந்தியில் குறிப்பிடப்பட்ட பரிந்துரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று

1.6.1.1 நிதியல்லாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வு ஆண்டின் சனவரி 01 இல் ஆரம்ப நிதியல்லாத சொத்துக்களின் மீதி, நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காணப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றுக்கு அமைவாக ரூ.430,274,243 ஆக காணப்பட்டதுடன் அரச கணக்கு திணைக்களத்தின் □ளுயு 82□ அறிக்கை பிரகாரம் ரூ.380,465,465 ஆக காணப்பட்டதால் ரூ.49,808,778 வித்தியாசம் காணப்பட்டது.
நிதியல்லாத சொத்து மீதிகளில் மேலே குறிப்பிடப்பட்ட வித்தியாசங்கள் தொடர்பில் 2021.்.02 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டலின் 3.9 பந்தியின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக திணைக்கள புத்தகங்களின் மீதிகளை திறைசேரி கணக்கு கூற்றுக்களில் தனியான பேரேடுகளுடன் ஒப்பிட்டு தீர்த்து நிதியல்லாத சொத்துக்களின் கணக்கு ரீதியான செவ்வைத் தன்மையினை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) கட்டடம் மற்றும் நிர்மாணிப்புக்கள், குறைவேலைகளுக்காக மீளாய்வு ஆண்டில் செலவிடப்பட்ட ரூ.49,691,458 தொகை மூலதனச் செலவினம் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் கணக்குகளில் பதிவு செய்யபட்டது.

(இ) திணைக்களத்தின் தொழிற் பயிற்சி நிறுவனங்கள், புனர்வாழ்வு நிலையங்கள் மற்றும் வழிகாட்டல் நிலையங்களின் கட்டட நிர்மாணிப்புக்களைப் பூர்த்தி செய்து கட்டடங்கள் பயன்படுத்தப்பட்ட போதும் நிர்மாணிப்புக்களுக்காக முன்னைய ஆண்டுகளில் செலவிடப்பட்ட கிரயம் குறைவேலைகளாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டது. குறித்த நிர்மாணிப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்ட கட்டட கிரயம் இனம் காணப்பட்டு கணக்கிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் கட்டடம் மற்றும் நிர்மாணிப்புக்களாக கணக்குப்

பதிவு மேற்கொள்ளப்படவில்லை. கட்டடம் மற்றும் நிர்மாணிப்பு நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பாக 2021 டிசம்பர் 31 இல் விவரமான உப அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அவற்றின் கிரயங்களை இனம் காணல் மற்றும் கிரயம் கணக்கிடப்பட்ட விதம் பற்றி பரீட்சிக்க முடியவில்லை.

(ஈ) மீளாய்வு ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூ.128,579 தொகை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் நிதியல்லாத சொத்துக்கள் பற்றிய நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள் பொறித்தொகுதியின் கீழ் கணக்குப் பதிவு மேற்கொள்ளப்படவில்லை.

(உ) கடந்த ஆண்டு மாவட்ட செயலகத்துக்காக கொள்வனவு செ.ய்யப்பட்ட ரூ.80,080 தொகை அலுவலக உபகரண நிதியல்லாத சொத்துக்களின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டது.

(ஊ) தொழிற் பயிற்சி நிறுவனங்கள், புனர்வாழ்வு நிலையங்கள் மற்றும் வழிகாட்டல் நிலையங்களை தாபிப்பதற்காக திணைக்களத்துக்கு நன்கொடையாக கிடைக்கப் பெற்ற சுமார் 33 ஏக்கர் பரப்பளவுடைய 05 காணிகள் நன்கொடையாக வழங்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்டகாலம் சென்றுள்ள போதும் அவற்றின் சட்ட ரீதியான உரிமையினை உறுதி செய்து குறித்த காணிகள் மற்றும் அவற்றில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்து நிதியல்லாத சொத்துக்களின் கீழ் காணி மற்றும் கட்டடம் என கணக்குப் பதிவு மேற்கொள்ளப்படவில்லை.

(எ) 11 தொழிற்பயிற்சி நிறுவனங்கள் தாபிக்கப்பட்டுள்ள காணிகளின் சட்ட ரீதியான உரிமையினை திணைக்களத்துக்கு கையேற்காமை மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமை காரணமாக கடந்த 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள், நிதியல்லாத சொத்துக்களாக கணக்குப் பதிவு மேற்கொள்ளாது கணக்குகளில் தவறவிடப்பட்டது.

1.6.2 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் ஆவணங்கள் பேணப்படவில்லை என்பதுடன் சில ஆவணங்கள் முறையாகவும் இற்றைப்படுத்தப்படாமலும் காணப்பட்டதாக மாதிரிப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

ஆவணங்களின் வகை	ஏற்புடைய ஒழுங்குவிதிகள்	அவதானிப்புக்கள்
நட்டங்கள் சேதங்கள் ஆவணம்	நி.ஒ.110(1)	இற்றைப்படுத்தி பேணப்படவில்லை
வாகன லொக் பதிவுப் புத்தகம் (பொது 267 படிவம்)	நி.ஒ.1645(அ)	இற்றைப்படுத்தி பேணப்படவில்லை
பிரயாணம் பற்றிய மாதாந்த சுருக்கம் (பொது 268(அ)படிவம்)	நி.ஒ.1646	இற்றைப்படுத்தி பேணப்படவில்லை
அடிச்சட்டக புத்தக ஆவணம்	நி.ஒ.341	இற்றைப்படுத்தி பேணப்படவில்லை
மின் உபகரணங்கள் பற்றிய ஆவணம்	நி.ஒ.454(2)	பேணப்படவில்லை
அரச அலுவலர்களின் பிணை ஆவணம்	நி.ஒ.891	இற்றைப்படுத்தி பேணப்படவில்லை

2. நிதி மீளாய்வு

2.1 முற்பண முகாமைத்துவம்

2021 ஆம் ஆண்டு சனவரி முதல் டிசம்பர் வரையான கால எல்லைக்குள் திணைக்களத்தினால் மாதாந்தம் விண்ணப்பிக்கப்பட்ட முற்பணப் பெறுமதிகளின் மொத்தம் 626.07 மி.ரூபாவாக காணப்பட்டதுடன் திறைசேரியினால் ஆண்டில் வழங்கப்பட்ட முற்பணப் பெறுமதிகளின் மொத்தம் 340.84 மி.ரூபாவாக அமைந்தது. விண்ணப்பிக்கப்பட்ட முற்பண அளவில் 285.23 மி.ரூபாய் அதாவது விண்ணப்பிக்கப்பட்ட முற்பணத்தின் சதவீதமாக 45.56 சதவீத முற்பணங்கள் திணைக்களத்துக்கு வழங்கப்படவில்லை. இதன் காரணமாக திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக ஒதுக்கப்பட்ட தேறிய ஒதுக்கீட்டினை செய்திறனுடன் பணன்படுத்துவதற்கு முடியாது போனதுடன் அது திணைக்களத்தின் செயலாற்றுகை மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

2.1. செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1203, 1401, 1403, 1506, 1202 ஆம் இலக்கங்கள் கொண்ட 05 மீண்டெழும் செலவு விடயங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட வருடாந்த மதிப்பீட்டு ஒதுக்கங்களின் மொத்தம் 9,800,000 ரூபாவாக காணப்பட்டது. அச் செலவு விடயங்களின் 2,135,000 ரூபா மொத்த தொகை ஒதுக்கீட்டினை நி.ஒ.66 இற்கு மாற்றுவதன் மூலம் வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்ட போதும் குறித்த செலவு விடயங்களின் மீதி முறையே 9 சதவீதம் முதல் 54 சதவீதம் வரையான இடைவெளியில் காணப்பட்டமையினால் அளவுக்கு அதிகமாக ஒதுக்கீடு பெறப்பட்டதாகவும் மீண்டெழும் செலவினங்களுக்காக மிகையாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவதானிக்கப்படுகிறது.

(ஆ) 09 மீண்டெழும் செலவு விடயங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட 358,200,000 ரூபாய் வருடாந்த மதிப்பீட்டு ஒதுக்கீட்டுத் தொகை போதுமானதாக அமையாதததன் காரணமாக ஏனைய செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட 42,500,000 ரூபாவுக்கான ஒதுக்கீடு மாற்றப்படவில்லை. அவ்வாறே 14 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட 250,350,000 ரூபாய் வருடாந்த மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் மீதி ஏற்பட்ட காரணத்தால் ஏனைய செலவு விடயங்களுக்காக மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) 2021 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடங்கும் பணிகளுக்காக 03 செலவு விடயங்களின் கீழ் மற்றும் உள்ளடக்கப்படாத பணிகளுக்கான 03 செலவு விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் முறையே ரூ.14,500,000 மற்றும் ரூ.800,000 ஆக காணப்பட்டது. குறித்த 04 செலவு விடயங்களில் ரூ.14,700,000 ஒதுக்கீட்டில் ரூ.4,866,444 அதாவது 28 சதவீதத்தில் இருந்து 73 சதவீதம் வரையான இடைவெளியிலான ஒதுக்கிடுகள் மற்றும் 02 செலவு விடயங்களில் ரூ.600,000 முழு ஒதுக்கீடும் அதாவது 100 சதவீத ஒதுக்கீடு 2021 டிசம்பர் 31 வரை பயன்படுத்தப்படாது மீதியாக இருந்தது.

2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2021 டிசம்பர் 26 ஆம் திகதிய 2021.∴03 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்கள வழிகாட்டலின் 3.3 ஆம் பந்தி மற்றும் இலங்கைச் சனநாயக சோஷலிச குடியரசு நிதி ஒழுங்குவிதிகள் 94 இன் ஏற்பாடுகள் பிரகாரம் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் வெளிக்கொணரப்பட வேண்டிய போதும் 05 செலவு விடயங்கள் தொடர்பாக 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் ஏற்கப்பட்ட 2,433,292 ரூபாய் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் பற்றிய கூற்றில் காட்டப்படவில்லை.

(ஆ) 06 செலவு விடயங்கள் தொடர்பில் மொத்த ஒதுக்கீட்டு மீதி ரூ.2,334,751 ஆக காணப்பட்டதுடன் அச் செலவு விடயங்கள் தொடர்பான 2021 செம்பர் 31ல் மொத்த பொறுப்புக்கள் ரூ.8,249,966 ஆக

காணப்படதனால் ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமான பொறுப்புக்களின் பெறுமதி 5,915,215 ரூபாவாக காணப்பட்டது.

(இ) 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255.2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02(இ) பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏதேனும் ஒரு நிதியாண்டுக்கான சகல பொறுப்புக்களும் அதே ஆண்டில் விடுவிக்கப்பட வேண்டும் என்பதுடன் எந்தவொரு பொறுப்பும் அடுத்த ஆண்டில் தீர்க்கும் நோக்கில் முன்கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்க கூடாதென அறிவுறுத்தல் வழங்கப்பட்ட போதும் அவ்வாறு செலுத்தி விடுவிக்கப்படாத ஆண்டு 01 முதல் ஆண்டு 02 வரையான காலம் கடந்த 03 செலவு விடயங்கள் தொடர்பான 32,770 ரூபாய் பொறுப்புக்கள் காணப்பட்டதாகவும் இது தொடர்பில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு நிதி ஒழுங்கு விதிகள் கோவையின் நி.ஒ.211 ஏற்பாடுகள் மீது உரிய கவனம் செலுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் .. கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் .. கணக்கீட்டு உத்தியோகத்தர் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டி இருப்பினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(அ) திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டியதுடன் அந்த முறையின் விளைதிறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முஜறமையினை பயனுள்ளவாறு மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அந்த மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் ஒரு பிரதியினை கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்க வேண்டி இருப்பினும் அவ்வாறான ஒரு மீளாய்வு மேற்கொண்டதற்கான கூற்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) உள்ளக கணக்காய்வு பணியினை உரியவாறு நடைமுறைப்படுத்துவதற்காக பயனுள்ள ஒரு முறை காணப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டிய போதும் அறிக்கையின் 5.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் பிரகாரம் அத் தேவைப்பாடு நிறைவேற்றப்படவில்லை.

2.5 சட்டம், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகிறது.

சட்டம், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் தொடர்பு	**இணங்காமை**
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை	
(i) நி.ஒ.1646	வாகனங்களுக்குப் பொறுப்பான அலுவலர் அறிக்கை சமர்ப்பிக்கும் மாதத்தின் பின்னர் அதற்கடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் திணைக்களத்தின் வாகன ஓட்டம் தொடர்பாக மாதாந்த பொழிப்பு மற்றும் ஓட்டக் குறிப்புகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
(ii) நி.ஒ.104(3)	திணைக்களத்தின் வேன் வண்டிக்கு விபத்து காரணமாக ஏற்பட்ட நட்டம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளல் மற்றும் ஆரம்ப அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
(iii) நி.ஒ.757(2)	மீளாய்வு ஆண்டு மற்றும் முன்னைய மூன்று ஆண்டுகளின் வருடாந்த பொருட் கணிப்பீட்டின் போது வெளிக்கொணரப்பட்ட பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள்

(இ) 2016 பெப்ரவரி 10 ஆம் திகதிய டீஎம்ஏ.்.எச்ரீ.். 2015.்.01 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தி	மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பில் துரித நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன்னைய ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகள் மூலம் சுட்டிக் காட்டப்பட்ட போதும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படவில்லை. திணைக்களத்தின் வாகனங்கள் தொடர்பாக மீளாய்வு ஆண்டில் மற்றும் முன்னைய 05 ஆண்டுகளில் வருடாந்த பௌதீக கணிப்பீட்டு பணிகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

2.6 முறைசாராத கொடுக்கல் வாங்கல்கள்

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02.்.2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏற்புடைய உத்தியோகத்தர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 உயர்ந்தபட்ச தொலைபேசிக் கட்டணங்களை மீளளிப்புச் செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்ட போதும் அதற்கு முரணாக பணிப்பாளரின் தற்றுணிபின் பிரகாரம் மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் கடமை புரியும் திணைக்களத்தின் சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த தொலைபேசிக் கொடுப்பனவாக ரூ.1000 தொகை 2020 செப்டம்பர் மாதம் முதல் செலுத்தப்பட்டது. இதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு 238 உத்தியோகத்தர்களுக்கு ரூ.238,000 தொகை, 2021 ஆம் ஆண்டு 391 உத்தியோகத்தர்களுக்கு ரூ.4,695,000 தொ மற்றும் 2002 மார்ச் மாதம் வரை 220 உத்தியோகத்தர்களுக்கு ரூ.660,000 என மொத்தம் ரூ.5,593,000 தொகை தொலைபேசிக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டது. இதற்காக சனவரி 08 மற்றும் ஜூன் 8 ஆம் திகதிகளிலும் அமைச்சு செயலாளரின் அனுமதி கோரப்பட்ட போதும் அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதுடன் மேற்குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சின் செயலாளர் ஆலோசனை வழங்கியிருந்தார்.

மேலும், தொழிற்பயிற்சி நிறுவனங்கள், சிறுவர் வழிகாட்டல் நிலையங்கள் மற்றும் போதைக்கு அடிமையான நபர்களுக்கு பயிற்சி வழங்கும் நிலையங்களில் கடமை புரியும் திணைக்களத்தின் சமூக சேவைகள் உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் ரூ.1000 தொலைபேசிக் கொடுப்பனவைச் செலுத்துவதற்கு அப்போதிருந்த அமைச்சின் செயலாளரிடம் அனுமதி கோரப்பட்ட போதும் அதற்கு அனுமதி வழங்குவதில்லை என அறிவிக்கப்பட்டது. ஆயினும் மாதாந்தம் ரூ.1000 தொலைபேசிக் கொடுப்பனவைச் செலுத்துவதற்கு முன்னாள் அமைச்சின் செயலாளர் அனுமதி வழங்காத நிலையில் வெளிக்கொணரப்படாது மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளை சரியான முறையில் முன்வைக்காது புதிதாக நியமனம் பெற்ற அமைச்சின் செயலாளரின் பதவிநிலைக் குறிப்பின் மூலம் அனுமதி பெற்று 2021 மார்ச் முதல் 2022 மார்ச் வரையான காலத்திற்குள் 31 உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த தொலைபேசிக் கொடுப்பனவைச் செலுத்துவதற்காக ரூ.372,000 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

ஆகவே 2020 செப்டம்பர் முதல் 2022 மார்ச் வரையான காலத்திற்குள் மொத்தம் ரூ.5,965,000 தொலைபேசிக் கொடுப்பனவு செலுத்துவதற்கான முறையான தத்துவ அதிகாரம் கிடைக்கப்பெறவில்லை என்பது அவதானிக்கப்படுகிறது.

அதற்கு மேலதிகமாக திணைக்களத்தில் கடமை புரியும் 433 நபர்களுக்காக 489 டயலொக் நடமாடும் தொலைபேசி இணைப்புக்களை 2020 ஆகஸ்ட் மாதம் வழங்கி, தொலைபேசிக் கட்டணங்களைச் செலுத்தும் பொறுப்பு தினைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மேலே செலுத்தப்பட்ட ரூ.1000 தொலைபேசிக் கொடுப்பனவில் ரூ.306 தொகையான நடமாடும் தொலைபேசி இணைப்புகளுக்கான மாதாந்த நிலையான கட்டணங்களை மாத்திரம் உத்தியோகத்தர்களிடம் அறவிட்டு டயலொக் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டது. உத்தியோகத்தர்கள் பெற்றுக் கொண்ட தொலைபேசி அழைப்புகளுக்காக அறவிடப்பட்ட ரூ.530,019 கட்டணம் மற்றும் கொடுப்பனவு தாமதம் காரணமாக 2021 டிசம்பர் முதல் மார்ச் வரையான காலத்திற்குள் அறவிடப்பட்ட தாமதக் கட்டணம் ரூ.106,898 என மொத்தம் ரூ.636,917 தொகை 2021 செம்பர் 31 இல் பொறுப்புக்களைச் செலுத்துதல் முறைசாராத ரீதியில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

2.7 முன்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முப்பணம் வழங்கும் பணிக்காக ஒதுக்கீட்டுச் சட்டம் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட ஆகக் குறைந்த வறையறை ரூ.20,000,000 ரூபாவாக காணப்பட்ட போதும் அந்த வறையறை மீளாய்வு ஆண்டில் 16,500,000 வரை குறைக்கப்பட்டிருந்தது. ஆயினும் மீளாய்வு ஆண்டின் உண்மையான பெறுவனவு ரூ.19,000,457 வரை அதிகரித்திருந்தது. காலத்துக்கு ஏற்ற அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் பெறுவனவு வறையறையினை திருத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்படாமை மற்றும் இலக்கு நோக்கிய வறையறை அளவு ரீதியாக அமையாமை காரணமாக கடன் அறவிடும் செயற்திறன் பெறுவனவு வறையறை விதிப்பனவு மூலம் நிறைவேற்றப்படவில்லை.

(ஆ) சேவை நிலைய இடமாற்றம், மரணமடைதல், ஓய்வுபெறல், சேவை வெறிதாக்கல் போன்ற காரணங்களினால் தற்போது திணைக்களத்தில் கடமை புரியாத 09 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூ.850,460 ரூபாய் நிலுவைக் கடன் தொகை 01 வருடம் முதல் 05 வருட காலங்கள் கடந்துள்ள போதும் அதனை அறவிடுவதற்கு அல்லது தீர்ப்பதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

2.8 வங்கி கணக்கினை வழி நடத்துதல்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2020 ஆம் ஆண்டு ஜூன் 16 ஆம் திகதி முதல் 2021 செப்டம்பர் 15 ஆம் திகதி வரையான காலத்துக்குள் வங்கி கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட மொத்தப் பெறுமதி ரூ.25,244 ரூபாவுக்கான 08 காசோலைகள் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரை வசூலிக்கப்படவில்லை என்பதுடன் அக் காசோலைகளில் பெறுமதி கணக்கில் செலவு வைக்கப்படாத வைப்புக்களாக வங்கி இணக்க கூற்றில் காட்டப்பட்டது. 03 மாதம் தொடக்கம் 18 மாத கால நீண்டதொரு கால இடைவெளி சென்றுள்ள வசூலிக்கப்படாத குறித்த காசோலைகளில் பெறுமதிகளை ஏற்புடைய தரப்பினர்களிடம் அறிவிடுவதற்கு அல்லது கிடைக்க வேண்டிய தொகையாக கணக்குகளில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(அ) 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதி முதல் 2021 டிசம்பர் 29 ஆம் திகதி வரையான 17 மாத காலத்திற்குள் வங்கி கணக்கில் செலவு வைக்கப்பட்ட மொத்தப் பெறுமதி ரூ.60,767 ரூபாவுக்கான 21 நேரடி வைப்புக்களை இனம் கண்டு கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையின் நி.ஒ.396(இ) ஏற்பாடுகள் பிரகாரம் காலாவதியான காசோலைகளை செல்லுபடியற்றதாக்கி செலுத்தப்படவுள்ள தொகையாக கணக்குகளில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டி இருந்த போதும் 270,766 ரூபாய் பெறுமதியுள்ள 06 மாத காலங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ள 08 காசோலைகள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

3.1.1 திட்டமிடல்

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02.்.2020 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவு மதிப்பீட்டினை நடைமுறைப்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் நடப்பு ஆண்டின் டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டி இருந்த போதும் 2021 வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தை அத் தினத்தில் தயாரித்தல் மற்றும் அதற்கான அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தில் திணைக்களத்தின் பின்வரும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பான திட்டமிடல் மீது கவனம் செலுத்தப்படவில்லை.

- அங்கவீனமுற்ற சமூகத்தினர் அன்றாடம் முகம் கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகளை குறைப்பதற்காக தலையீட்டினை மேற்கொள்ளல் மற்றும் அவர்களை வலுவூட்டுதல்
- சமிக்ஞை மொழியினை ஏற்றுக்கொள்ளல் மற்றும் மேம்படுத்தல்
- போதைக்கு அடிமையானவர்களுக்கு வதிவிடப் புனர்வாழ்வு வழங்குதல், அவர்களுக்கு தொழிற்யிற்சி வழங்குதல் மற்றும் சமூகமயப்படுத்தல்
- பலதரப்பட்ட சமூகப பிரச்சினைகளுக்கு ஆளான நபர்களுக்கு சரியான வழிகாட்டலை வழங்குதல்

3.1.2 பிரதான செயற்பாடுகளுக்கு முரணான செயற்பாடுகள்

ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சினால் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்ட அங்கவீனமுற்ற நபர்களுக்கான தொழில் வாய்ப்பு வசதிகளை மேம்படுத்தும் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக திணைக்களத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகளை முறைசாராத ரீதியில் பயன்படுத்தி ரூ.660,690 செலவு செய்யப்பட்டிருந்தது. இலக்கம் 1401 மற்றும் 1403 ஆம் இலக்க போக்குவரத்து மற்றும் மின்சார ஒதுக்கீடுகளை நி.ஒ.66 இன் ஏற்பாடுகளைப் பயன்படுத்தி ஒதுக்கீடுகளை மாற்றுவதன் மூலம் இதற்கான ஒதுக்கீடுகள் பெறப்பட்டது.

3.1.3 எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளை (முரவஉழஅந) அடைந்து கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கவீனமுற்ற நபர்களுக்கு புனர்வாழ்வு வழங்குவதனை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய செயற்பாட்டுக் குழு கடந்த 27 மாத காலத்திற்குள் செயலிழ்நது காணப்படல், சமூக சேவை நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல், அங்கவீனமுற்ற நபர்களின் உற்பத்திகளை தரப்படுத்தல் மற்றும் சந்தையினை அறிமுகம் செய்தல் போன்ற பணிகள் நிறைவேற்றப்படாமை காரணமாக அங்கவீனமுற்ற நபர்களின் அபிவிருத்தி, கல்வி, பொருளாதார மற்றும் சமூகத் துஜறகள் மீது தேசிய ரீதியில் நன்மை பயக்கும் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது போதல், நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் செயற்திறன் மற்றும் உற்பத்தி திறன் பலவீனமடைதல், அங்கவீனமுற்ற நபர்களின் உற்பத்திகளை இனம் காணல், தரப்படுத்தல், பயிற்சி வழங்குதல், தரமான உற்பத்திகளை தெரிவு செய்தல் உற்பத்திகளை தேசிய மட்டத்துக்கு கொண்டு செல்லல் போன்ற எதிரிபார்க்கப்பட்ட நோக்கங்கள் அடைந்து கொள்ளப்படவில்லை. மேலும் சமுதாய அடிப்படையிலான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக மீளாய்வு ஆண்டுக்காக ரூ.12,500,000 ஒதுக்கிடு வழங்கப்பட்டிருந்த போதும் அவற்றுள் 25 மாட்ட செயலக அதிகாரப் பிரதேசங்களுக்காக ரூ.7,703,248 ரூபாவுக்கான ஒதுக்கீடுகள் மாத்திரம் விடுவிக்கப்பட்டன. எஞ்சிய ரூ.4,796,752 ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்படவில்லை. அவ்வாறே விடுவிக்கப்பட்ட ஒதுக்கீடுகளில் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் மீளாய்வு செய்வதற்கு முடியவில்லை.

(ஆ) புவக்பிட்டிய ஜயவிரு வெசன பாதுகாப்பு நிலையம் மற்றும் ஜயவிரு சமாதி புனர்வாழ்வு நிலையம் அமைக்கப்பட்டுள்ள காணியில் மனவளர்ச்சி குன்றிய பெண்களின் பாதுகாப்புக்காக பாதுகாப்பு நிலையம்ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டு 35 மி.ரூபாய் மற்றும் 2019 ஆம் ஆண்டு 40 மி.ரூபாய் என மொத்தம் 75 மி.ரூபாய் ஒதுக்கீடு வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட ஒதுக்கீட்டில் 2019 டிசம்பர் 31 இல் நிர்மாணிப்புக்களுக்காக 44.18 மி.ரூபாய் மாத்திரம் பயன்படுத்தப்பட்டது. 30.82 மி.ரூபாய் ஒதுக்கிடுகள் பயன்படுத்தப்படாமை மற்றும் நிர்மாணிப்பு பணிகளின் தாமதம் காரணமாக 2020 ஆம் ஆண்டு மீண்டும் 9.98 மி.ரூபாய் ஒதுக்கிடுகளைப் பெற்று அதில் 8.78 மி.ரூபாய் பயன்படுத்தப்பட்டது. ஊற்று நிரை அகற்றுவதற்கான வடிகான் முறைமை, மலசலகூட முறைமை, குடிநீர் பெற்றுக் கொள்வதற்கான கிணறு மற்றும் தாங்கி, சமையலறை போன்ற வேலை விடயங்களை ஐஐ ஆம் கட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்ட போதும் 1.14 மி.ரூபாய் செலவு செய்து தாங்கி மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டது. மேலும் வீட்டுத் தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்காக 2.65 மி.ரூபாய் செலவு செய்யப்பட்ட போதும் நிலத்தோற்ற வேறுபாடுகளுக்கு அமைவாக மழை காலங்களில் நீர் ஊற்றுக்கள் காரணமாக மலசல கூடங்கள் பெருக்கெடுத்தல்,

நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்யாமை, நிர்மாணப் பணிகளின் தாமதங்கள், போதைக்கு அடிமையான இளைஞர்களை தடுத்துவைத்தல், ஜயவிரு சமாதி புனர்நிர்மாண நிறுவனத்தை நிர்மாணித்தல் காரணமாக மனவளர்ச்சி குன்றிய பெண்களின் பாதுகாப்புக்கு அச்சறுத்தல் ஏற்படல் காரணமாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் மன்வளர்ச்சி குன்றிய பெண்கள் பாதுகாப்பு நிலையத்தை ஆரம்பிக்காது கைவிடப்பட்டிருந்தது. கருத்திட்டம் மற்றும் தன் பணிகளை திட்டமிடுதலில் குறைபாடுகள் நிலவிய காரணமாக அமைந்ததாகவும் 54.48 மி.ரூபாய் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் மற்றும் 2.13 மி.ரூபாய் செலவு செய்யப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட வீட்டுத் தளபாடங்கள் சுமார் 02 வருட காலமாக பயன்படுத்தப்படாது இருந்ததுடன் கருத்திடடம் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் பெற்றுக் கொள்ளப்படவில்லை.

3.1.4 கருத்திட்டங்களை நிறைவேற்றுவதன் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஆரம்ப சிறுவர் பராயத்தில் உள்ள சிறுவர்களை முற்கூட்டியே இனம் கண்டு அங்கவீன நிலைமைகளை அகற்றி ஆற்றல்களை விருத்தி செய்வதற்கான சேவைகளை வழங்குவதற்காக ஹம்பாந்தோட்டை □சித்திஜய□ சிறுவர் வழிகாட்டல் நிலையத்தை மீளாய்வு வருடத்தில் ஆரம்பிப்பதற்கு இலக்கு வைக்கப்பட்ட போதும் அதனை ஆரம்பித்தல் 2022 ஆண்டுக்கு பிற்போடப்பட்டது.

(ஆ) 13 □ 19 வயதுக்கு இடையில் உள்ள இளைஞர் யுவதிகளின் எதிர்கால தொழிற் பயிற்சித் திட்டங்களுக்காக ஆரம்ப ஆயத்தத்துக்காக மீளாய்வு ஆண்டில் ஆரம்பிப்பதற்கு இலக்கு வைக்கப்பட்ட கொட்டாவ ஆற்றல் அபிவிருத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 2020 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்ட போதும் அதன் பயிற்சி நடவடிக்கைகளை மீளாய்வு ஆண்டில் ஆரம்பிக்காது 2022 ஆண்டு வரை பிற்போடப்பட்டது.

(இ) வடக்கு கிழக்கு மாகாணங்களில் அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்காக தமிழ் மொழி மூலம் தொழிற்பயிற்சி வழங்குவதற்காக 2017 ஆண்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட கிளிநொச்சி தொழிற் பயிற்சி நிறுவனத்தின் நிர்மாணப் பணிகள் 2022 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை பூர்த்தி செய்யப்படவில்லை. இதன் காரணமாக இலக்கு வைத்தவாறு மீளாய்வு ஆண்டின் போது தொழிற் பயிற்சி பணிகளை ஆரம்பிப்பதற்கு முடியாது போயிற்று.

3.1.5 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2.∴2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்ட மாதிரிக்கு அமைவாக வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்படவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் தொலைநோக்கிற்கு அமைவாக 2030 ஆம் ஆண்டளவில் இலக்கு நோக்கிய சமூகத்தின் உரிமைகள் மற்றம் சமத்துவத்தை உறுதி செய்வதற்காக எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை அடைவதன் முன்னேற்றம் மற்றும் செயலாற்றுகை தொடர்பாக செயலாற்றுகை அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை.

(ஆ) இலங்கையில் தற்போது பாகுபாட்டுக்கும் பிரதிகூலமான நிலைமைக்கும் ஆளாகி உள்ள சமூகத்தின் தன்மை, அளவு மற்றும் அவர்கள் பூகோள ரீதியாக வியாபித்தல் தொடர்பான புள்ளிவிபரங்கள், வருடாந்தம் அதற்கு புதிதாக ஒன்றிணையும் அளவுகள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட தரவுகள், திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் வருடாந்தம் வலுவூட்டச் செய்யப்படும் சமூகம் தொடர்பான விவரமான புள்ளிவிபரங்கள், தரவுகள் மற்றும் தகவல்களை பகுப்பாய்வு ரீதியாக செயலாற்றுகை அறிக்கை மூலம் சமர்ப்பிப்பதற்கு முடியவில்லை.

(இ) நோக்கங்களை அடைந்து கொள்ளல் தொடர்பான முன்னேற்றத்தை (ழுரவஉழஅந) வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் காட்டுவதற்குப் பதிலாக மேற்கொள்ளப்பட்ட வெளியீடுகள் (ழுரவிரவ) செயலாற்றுகை முன்னேற்றமாக காட்டப்பட்டது.

3.2 பெறுகைகள்

2020 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 02.்.2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் அறிவுறுத்தல்கள் பிரகாரம் திணைக்களத்தின் விடயங்கள் மற்றும் பணிகளின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டின் மீண்டெழும் மற்றும் மூலதன நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வருடாந்த பெறுகைத் திட்டம் நடப்பு ஆண்டின் டிசம்பர் 1 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டிய போதும் 02 மாதங்கள் கடந்த பின்னர் 2021 பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதியே தயாரிக்கப்பட்டது. மேலும் தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டம் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் அவ்வாறு அனுமதி வழங்கிய பெறுகைத் திட்டத்தின் பிரதியினை கணக்காய்வாளருக்கு சமர்ப்பிப்பதற்கு நடடிக்கை எடுக்க வேண்டி இருந்த போதும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

3.3 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையின் நி.ஒ.756 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் பொருட் கணிப்பீட்டுப் பணிகள் 2022 மார்ச் 31 இல் நிறைவேற்றப்பட்ட போதும் நி.ஒ.757 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் கணிப்பீட்டுச் சபையின் அறிக்கையின் பிரதி கணக்காய்வாளருக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மீளாய்வு ஆண்டின் பொருட் கணிப்பீட்டின் போது இனம் காணப்பட்ட குறைபாடுகள், மேலதிகம் மற்றும் அகற்றுதல்கள் தொடர்பில் கணிப்பீட்டுச் சபையின் பரிந்துரையின் பிரகாரம் பணிகளை நடைமுறைப்படுத்தல் ஆரம்பிக்கப்படவில்லை. மேலும் கடந்த 03 ஆண்டுகள் தொடர்பான கணிப்பீட்டுச் சபையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி புத்தகங்கள் மற்றும் கணக்கு மீதிகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட கிரயம் ரூ.290,998 பெறுமதியான புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் 07 வகையான பத்திரங்களின் 22,460 பிரதிகள் 05 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) தொழிற் பயிற்சி நிறுவனங்களின் நூல் நிலையங்களுக்காக 2019 ஆம் ஆண்டு ரூ.130,815 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட கவிதை நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், நாவல்கள் போன்ற 288 புத்தகங்கள் நூல் நிலையங்களில் பயன்பாட்டுக்கு வழங்கப்படாது 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

3.4 அரச உத்தியோகத்தர்களின் பிணை

அரச உத்தியோகதத்ர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையின் நி.ஒ.880 இன் ஏற்பாடுகள் பிரகாரம் அரச நிதி மற்றும் சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் பொறுப்பு வகிக்கும் அரச உத்தியோகத்தர்களிடம் பிணை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட போதும் திணைக்களத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள பிணை அறவிடப்பட வேண்டுமென இனம் காணப்பட்ட 40 உத்தியோகத்தர்களுள் 06 உத்தியோகத்தர்களிடம் மாத்திரம் பிணை அறவிடப்பட்டது. இது தொடர்பான பணிகளை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம் பலவீனமாக காணப்பட்டது. மேலும் நிதி ஒழுங்குவிதியின் 892 ஆம் ஏற்பாடுகள் பிரகாரம் பொது 183 மாதிரிக்கு அமைவாக ஒவ்வொரு 03 வருட இறுதியில் பிணை நிற்பதற்குத் தேவையான அனைத்து உத்தியோகத்தர்களதும் திருத்தப்பட்ட அறிக்கை மற்றும் மேலும் பிணை நிற்பதற்குத் தேவையற்ற உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்கள் உள்ளடங்கிய திருத்தப்பட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்தல் மற்றும் கணக்காய்வாளருக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

3.5 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வு ஆண்டில் பிரதான அலுவலகத்தின் வாகனம் ஒன்றுக்கு விபத்து காரணமாக ஏற்பட்ட ரூ.68,850 மதிப்பீடு செய்யபட்ட சேதநட்டம் நட்டங்கள் மற்றும் கைவிடுதல் தொடர்பான கூற்றில்

வெளிக்கொணரப்படவில்லை. குறித்த சேதநட்டம் தொடர்பில் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் கோவையின் நி.ஒ.104(1) இன் ஏற்பாடுகள் பிரகாரம் விசாரணை நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதுடன் சேதநட்டங்களை அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) சீதுவ தொழிற்பயிற்சி நிறுவனத்தில் மீளாய்வு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட களவு காரணமாக காணாமல் போன ரூ.50,000 பெறுமதியுடைய தொலைக்காட்சி இயந்திரம் தொடர்பாக நட்டங்கள் மற்றும் கைவிடுதல் தொடர்பான கூற்றில் வெளிக்கொணரப்படவில்லை.

(இ) ராகம தொழிற் பயிற்சி நிறுவனத்தில் கடந்த ஆண்டு இடம்பெற்ற களவு காரணமாக ரூ.70,800 பெறுமதியான 06 வகையான இயந்திர சாதனங்கள் காணாமல் போயிருந்தது. குறித்த நட்டமானது நட்டங்கள் மற்றும் கைவிடுதல் தொடர்பான கூற்றில் வெளிக்கொணரப்படவில்லை என்பதுடன் நி.ஒ.104 இன் ஏற்பாடுகள் பிரகாரம் முறையாக செயற்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(ஈ) பயன்படுத்தப்படாது திணைக்களத்தின் பிரதான களஞ்சியத்தில் 03 தொடக்கம் 08 ஆண்டு காலமாக களஞ்சியப்படுத்தப்பட்ட 24 வகையான நுகர்வுப் பொருட்கள் காலாவதியானதன் காரணமாக சேதமடைந்திருந்தன. சேதமடைந்த இருப்புக்கள் தொடர்பாக நட்டங்கள் மற்றும் கைவிடுதல் தொடர்பான கூற்றில் வெளிக்கொணரப்படவில்லை. குறித்த இருப்புக்கள் பற்றிய சேதங்கள் மதிப்பீடு செய்யபட்பட்டு நிதி ஒழுங்கு விதிகள் 108 இன் ஏற்பாடுகள் பிரகாரம் புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு அல்லது பொருத்தமான செயற்பாடுகளை மேறடகொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

3.6 முகாமைத்துவக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான சுமார் 02 ஆண்டுகள் ஓட்ட நடவடிக்கைகளில் இருந்து நீக்கப்பட்டு அம்முனுகும்புர தொழிற் பயிற்சி நிறுவனத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேன் வண்டியினை 2018.03.19 ஆம் திகதிய 01.̇.2018 ஆம் இலக்க திறைசேரி சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக 2018 ஆம் ஆண்டு அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதும் குறித்த வேன் வண்டியை பழுதுபார்த்து பயன்படுத்துதல் பொருத்தமாகும் என 2019 ஆம் ஆண்டு தீரமானிக்கப்பட்டு சுமார் 03 ஆண்டு காலம் பழுதுபார்க்காது நிறுத்தி வைக்கப்பட்டதுடன் பழுதுபார்த்தல் பணிகள் 2020 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டன. ரூ.320,020 செலவு செய்து பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமாகியும் வேன் வண்டியினை ஓடுவதற்குப் பொருத்தமான நிலைமைக்கு கொண்டு வர முடியவில்லை. சுமார் 05 ஆண்டுகள் நீண்ட காலமாக ஓட்டப் பணியில் ஈடுபடுத்தப்படாது நிறுத்தி வைக்கப்பட்ட காரணத்தால் மேலதிகமாக எஞ்சின் பழுதுபார்க்க நேரிட்டுள்ளதாக அவதானிக்கப்படுகிறது. இதன் காரணமாக பழுதுபார்த்தல் பணிகளுக்காக செலவு செய்யப்பட்ட செலவினம் மூலம் உற்பத்தி திறன் கிடைக்கப்பெறவில்லை.

(ஆ) □கொவிட் 19□ தொற்று நோய் நிலைமை காரணமாக திணைக்களத்தின் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறும் பயிலுனர்களுக்கு வழங்கப்படும் சமைத்த உணவுக்குப் பதிலாக உலர் உணவு நிவாரண உதவியாக உலர் உணவுப் பொருள் பொதியினை 129 பயிலுனர்களுக்கு தலா ரூ.5,000 வீதம் மற்றும் 71 பயிலுனர்களுக்கு தலா ரூ.2,000 வீதம் வழங்குவதற்காக ரூ.787,000 செலவு செய்யப்பட்டிருந்தது. குறித்த உணவு நிவாரணப் பொதிகளை ஏற்புடைய பயிலுனர்கள் உரியவாறு பொறுப்பேற்றதனை உறுதி செய்யாதிருத்தல், உலர் உணவு நிவாரணப் பொதிகளை உரிய வேளையில் வழங்காமை, அது தொடர்பாக பின்னாய்வுப் பணிகளை மேற்கொள்ளல், செயலாற்றுகை

அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளாமை மற்றும் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு போதுமான அளவு உள்ளக நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படாமை ஆகியன அவதானிக்கப்பட்டன.

(இ) சமூக சேவைகள் திணைக்களம் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் காணப்பட்ட போது அமைச்சினால் திணைக்களத்துக்கு 2019 செப்டம்பர் 08 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டு வழங்கப்பட்ட ஒரு கெப் வண்டி சுமார் 02 ஆண்டு காலம் ஓட்டப் பணியில் ஈடுபடுத்தப்படாதிருந்த போது சமூக பொலிஸ் சேவை இராஜாங்க அமைச்சின் கோரிக்கை மற்றும் பணிப்பாளரின் தற்றுணிபின் கீழ் குறித்த இராஜாங்க அமைச்சுக்கு 2021 செப்டம்பர் 15 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டது. திணைக்களத்தின் கடமைத் தேவைகளுக்காக போதுமான அளவு வாகனங்கள் காணப்படாமை மற்றும் வாகனப் பற்றாக்குறைக்கு மத்தியில் கெப் வண்டி தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொண்டு ஓட்டப் பணியில் ஈடுபடுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தாது வேறு அமைச்சுக்கு ஒப்படைத்தல் மேற்கொள்ளப்பட்ட போது திணைக்களத்தின் வத்தேகம தொழிற் பயிற்சி நிறுவனத்துக்கு வாகனம் ஒன்றின் தேவைப்பாடு பற்றி அறிவிக்கப்பட்ட போதும் அது பற்றி அவதானம் செலுத்தப்படவில்லை.

(ஈ) தெலம்புயாய தொழிற் பயிற்சி நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கில் ஒன்றின் பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்ளாமை காரணமாக 2021 ஜனவரி முதல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாது பயன்படுத்தப்படாதிருந்தது.

(உ) 1956 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை 65 ஆண்டு காலத்துக்குள் தாபிக்கப்பட்டிருந்த 14 தொழிற் பயிற்சி நிறுவனங்கள், புனர் வாழ்வு நிலையங்கள் மற்றும் வழிகாட்டல் நிலையங்களின் காணிகளின் சட்ட ரீதியான உரிமையினை ஒப்படைப்பதற்கு மிக நீண்ட காலம் சென்றுள்ள போதும் அதனைக் கையேற்க முடியாதுள்ளது. அக் காணிகளுள் 07 காணிகளை கையேற்பதற்கான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதாக காட்டப்பட்ட போதும் அக் காணிகளின் சட்ட ரீதியான உரிமை கையேற்கப்படவில்லை என்பதுடன் பயன்படுத்துவதற்கான ஆட்சி செய்யும் உரித்து மாத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. இக் காணிகளின் பெறுமதியினை மதிப்பீடு செய்தல், அளவீட்டுப் பணிகளை மேற்கொள்ளல் மற்றும் அளவைத் திட்டம் தயாரித்தல் போன்ற கையேற்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஏனும் நிறைவேற்றப்படவில்லை. இது தொடர்பாக 04.்.2018 ஆம் இலக்க மற்றும் 02.்.2019 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட வழிகாட்டல்கள் மீது திணைக்களத்தின் அவதானம் போதுமான அளவு செலுத்தப்படவில்லை. மேலும் முறையாக சட்ட ரீதியான உரிமையினைக் கையேற்காமல் கட்டடம் நிரமாணித்தல் மற்றும் திருத்தப் பணிகளை மேற்கொள்வதற்காக கடந்த 05 ஆண்டு காலத்திற்குள் 500 மி.ரூபாவுக்கு மேற்பட்ட தொகை செலவு செய்யப்பட்டது.

(ஊ) சமூக சேவை உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களுக்காக அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலைமையின் கீழ் 23 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு சமூகசேவை உத்தியோகத்தர் பதவிகளில் பதில் கடமை புரிவதற்கு அல்லது கடமைகளை நிறைவேற்றுவதற்காக நீண்ட காலத்துக்கு நியமனம் வழங்கி கொடுப்பனவாக ரூ.867,153 செலுத்தப்பட்டுள்ளது. சமூக சேவை உத்தியோகத்தர் பதவிகளின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு கூடுதலாக அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்து உத்தியோகத்தர்களின் மேலதிகம் நிலவிய போதும் மேலதிகமாக உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை சமூக சேவைகள் உத்தியோகத்தர் பணிகளில் இணைப்புச் செய்வதற்குப் பதிலாக பதில் கடமை அல்லது கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிப்பதன் மூலம் செலவுக் கட்டுப்பாட்டை பயனுள்ளதாகவும் மற்றும் செயற்திறனுடன் மேற்கொள்ளவில்லை என அவதானிக்கப்பட்டது.

(எ) திணைக்களத்தின் பிரதான அலுவலகம் தாபிக்கப்பட்ட வறையறுக்கப்பட்ட நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்தி (தனியார்) கம்பனிக்குச் சொந்தமான செத்சிரிபாய ஐஐ ஆம் கட்டத்தின் கட்டிடத்தின் 2 ஆம் மாடியில் யு மற்றும் டீ முனையங்களில் சுமார் 2500 சதுர அடிகள் கொண்ட கட்டட

வசதிகளுக்காக ரூ.2,654,142 மாதாந்த வாடகை அடிப்படையில் 2020 ஜூன் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையான காலத்துக்காக ரூ.18,578,994 மற்றும் மீளாய்வு ஆண்டின் ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலத்துக்காக ரூ.28,064,849 என மொத்தம் ரூ.46,663,843 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 2020 ஜூன் முதல் டிசம்பர் வரையான காலத்துக்கு வாடகை செலுத்துவதற்காக உரிய ஆண்டு ஒதுக்கீடுகள் பெற்றுக் கொள்ளப்படவில்லை என்பதுடன் குறித்த நிலுவை வாடகையினை மீளாய்வு ஆண்டில் செலுத்துவதற்காக 1508(ஏனைய) ஆம் இலக்க செலவு விடயத்துக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளுக்கு மாற்றப்பட்டிருந்தது. கட்டடங்களை வாடகைக்குப் பெற்றுக் கொள்வதற்காக 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் கோவையின் நி.ஒ.835(2)(இ) ஏற்பாடுகளின் பிரகாரம் வாடகைப் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்காக அரச பிரதான மதிப்பீட்டாளரிடம் வாடகை மதிப்பீட்டினைப் பெற்றுக் கொள்ளல், வாடகைக் கட்டடங்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளல், நிதி ஒழுங்கு விதிகளின் 853(3) ஏற்பாடுகள் பிரகாரம் வாடகை ஒப்பந்தங்களை மேற்கொள்ளல் மற்றும் வாடகை ஒப்பந்தங்களை மேற்கொண்டு அதன் ஒரு பிரதியினை கணக்காய்வாளருக்கு சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் கொடுப்பனவுகளை மேற்கொண்ட கட்டட வாடகைக் கட்டணங்களில் ரூ.15,220,140 சேவைக் கட்டணம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அச் சேவைக் கட்டணம் தொடர்பாக கவனம் செலுத்தி நியாயமான மற்றும் குறைந்த பட்ச கட்டட வாடகையினை தீர்மானித்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை.

4. பேண்தகு அபிவிருத்தி

4.1 பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை இனம் காணல்

2019 ஒக்டோபர் 03 ஆம் திகதிய ீளூ.்.ளூீ.்.ளுடீ.்.ஊ.்.22.்.2019 ஆம் இலக்க சனாதிபதியின் செயலாளர் சுற்றறிக்கையின் இணைப்பு 2 பிரகாரம் திணைக்களத்தின் தொலைநோக்கு, பணி மற்றும் இலக்குகளுடன் பேண்தகு அபிவிருத்தி உபாயவழிமுறைகள் உரியவாறு இணைந்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் அங்கவினமுற்ற நபர்களுக்கு தொழிற் பயிற்சி சந்தர்ப்பங்களை வழங்குதல் மற்றும் அனைத்து கல்வித் தரங்களுக்கும் நுழைவதற்கான வாய்ப்பினை உறுதி செய்தல், 2030 ஆம் ஆண்டளவில் அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கான பயனுள்ள மற்றும் பொருத்தமான தொழில் வாய்ப்புக்களை வழங்குதல், 2030 ஆம் ஆண்டளவில் அங்கவீனமுற்ற சமூகத்தினரின் சமூகப் பொருளாதார மற்றும் அரசியல், இடைத்தொடர்பு, வலுவூட்டல் மற்றும் மேம்பாடு போன்ற 03 பேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அதன் கீழ் 11 பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் இனம் காணப்பட்டன.

4.2 பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதன் முன்னேற்றம்

(அ) அங்கவீனமுற்ற நபர்களுக்கு தொழிற் பயிற்சி சந்தர்ப்பங்களை வழங்குதல் மற்றும் அனைத்து கல்வி மட்டங்களிலும் நுழைவதற்கான சந்தர்ப்பத்தை உறுதி செய்தல் மற்றும் அந்த நோக்கங்களின் கீழ் திட்டமிடப்பட்ட 05 பணிகளின் தொழிற் பயிற்சி பாடநெறிகளை நவீனமயப்படுத்தல் மற்றும் ஏஞ மட்ட சான்றிதழ்களை வழங்கும் இலக்கினை அடையாமை காரணமாக அதில் முன்னேற்றம் எட்டப்படவில்லை. அங்கவீனமுற்ற நபர்களுக்காக தொழிற் பயிற்சி வழங்குதல் மற்றும் ஆற்றல்களை அபிவிருத்தி செய்தல், புதிய தொழிற் பயிற்சி நிலையங்களை நிர்மாணித்தல், ஆரம்ப சிறுவர் பராயத்தில் உள்ள அங்கவீனமுற்ற சிறுவர்களின் அங்கவீன நிலைமைகளைக் குறைப்பதற்கு தலையீட்டை மேற்கொள்ளலின் கீழான இலக்குகளை அடைந்து கொள்ளும் செயலாற்றுகை முன்னேற்றம் 60 சதவீத சராசரியினைக் கொண்டிருந்தது.

(ஆ) 2030 ஆம் ஆண்டளவில் அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்காக பயனுள்ள மற்றும் பொருத்தமான தொழில் வாய்ப்புக்களை வழங்கும் அபிவிருத்தி இலக்குகுளை அடைந்து கொள்வதற்காக அங்கவீனமுற்ற நபர்களுக்கான சுயதொழில் அல்லது நிறுவனமயப்படுத்தப்பட்ட தொழில்களில் ஈடுபடுத்துவதற்கான பயிற்சி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளை இலக்கினை நிறைவு செய்வதற்கான பணிகள் நடைமுறைப்படுத்தாமை காரணமாக அதில் எந்தவொரு முன்னேற்றமும் காணப்படவில்லை.

5. நல்லாட்சி

5.1 உள்ளகக் கணக்காய்வு

பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் 03 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய வறையறுக்கபட்ட பதவியணியினர் மூலம் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டது. புத்தாக்க பிரவேசத்தின் கீழ் துரித, செயற்திறன் மற்றும் பயனுள்ள கொள்கைத் தயாரிப்பு மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளை அடைந்து கொள்வதன் ஊடாக இலக்கு நோக்கிய சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் வலுவூட்டலை அடைந்து கொண்டுள்ளதனை உறுதி செய்வதற்கு மற்றும் அதற்கான நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் பின்பற்றப்பட்டுள்ள முறை, நடைமுறைகள் மற்றும் கொள்கை ஆகியவற்றின் செவ்வைத் தன்மையினை உறுதி செய்வதல் தொடர்பாக போதியளவு உள்ளகக் கணக்காய்வு பரிசோதனைகள் 2021 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

6. மனித வள முகாமைத்துவம்

6.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உண்மையான பதவியணியினர்

திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் சேவை வகுதிகளின் கீழ் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 இல் உண்மையான மற்றும் வெற்றிடம் நிலவும் பதவியணியினர் தொடர்பான விபரம் பின்வருமாறு.

சேவை வகுதி	அங்கீகரிக்கப்பட்ட	உண்மையான	வெற்றிடம்
சிரேஷ்ட	9	8	1
மூன்றாம் நிலை	491	259	232
இரண்டாம் நிலை	170	115	55
ஆரம்ப நிலை	116	100	16
மொத்தம்	**786**	**482**	**304**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதில் நேரடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மூன்றாம் நிலை சேவை வகுதியின் 05 நிலையப் பொறுப்பதிகாரிப் பதவிகள், இரண்டாம் நிலை வகுதியின் மொழி பெயர்ப்பாளர், பௌதீக சிகிச்சையாளர், பேச்சு சிகிச்சையாளர், வேலை முகாமையாளர், தொழில் ஆலோசகர், சமிக்ஞை மொழிபெயர்பாளர், முன்பள்ளி ஆசிரியர், வீட்டுக் காப்பாளர் போன்ற 50 பதவிகள் மற்றும் ஆரம்ப நிலை சேவை வகுதியின் சமையற்காரர், சிறுவர் அபிவிருத்தி உதவியாளர், சமையல் உதவியாளர், உபசரிப்பாளர் போன்ற 06 பதவிகளென மொத்தம் 61 வெற்றிடங்கள் நிலவியது. கடந்த 05 ஆண்டு காலத்திற்குள் அந்த வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக உரியவாறு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு போதுமான அளவு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

வெற்றிடம் நிலவிய 05 நிலையப் பொறுப்பதிகாரிப் பதவிகளைப் பூர்த்தி செய்வதற்காக 2020 ஆம் ஆண்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் ஆட்சேர்ப்பு பணிகளை நடைமுறைப்படுத்தும் போது இடம்பெற்ற நீண்ட கால தாமதங்கள் காரணமாக இதுவரை ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள முடியாது போயுள்ளது.

(ஆ) மூன்றாம் நிலை வகுதியின் 225 சமூக சேவை உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்கள் நிலவியதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் 47 சதவீதமாக அமைந்தது. உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறுவதன் காரணமாக நீண்ட காலமாக திரண்டு வந்த வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளல் தொடர்பில் திணைக்களம் கவனம் செலுத்தவில்லை என்பதுடன் வெற்றிடம் நிலவிய பதவிகளில் கடமைகளை மேற்கொள்வதற்காக முறைசாராத ரீதியில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக கடமையில் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் அல்லாத அபிவிருத்தி உத்தியொகத்தர் (சமூக சேவைகள்) பதவிகளுக்காக கடந்த காலங்களில் ஆட்சேர்க்கப்பட்ட 200 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சமூக சேவை உத்தியோகத்தர் பதவிகளில் கடமை மேற்கொள்ளும் நிலைமையின் கீழ் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் விடய கடமைகளுக்காக மேலும் 137 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்து அப் பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாததன் காரணமாக சமூக சேவைகள் விடய கடமைகளுக்காகவே மீண்டும் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட 480 சமூக சேவைகள் உத்தியொகத்தர்கள் எண்ணிக்கைக்கு மேலதிகமாக 112 ஊழியர் மிகை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் ஏனைய அரச கொள்கைகள் மற்றும் தீர்மானங்களின் பிரகாரம் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டி இருப்பினும் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) அரச கொள்கைகள் மற்றும் தீர்மானங்களின் பிரகாரம் ஆட்சேர்க்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பயனுள்ள விதத்தில் கடமையில் ஈடுபடுத்துதல் தொடர்பில் கவனம் செலுத்தி அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு மேற்படாதவாறு சமூக சேவைகள் உத்தியோகத்தர் விடயத்துக்கான பணிகளை மேற்கொள்வதற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை முறைசார்ந்த ரீதியாக இணைப்புச் செய்தல் மீது திணைக்களம் உரியவாறு கவனம் செலுத்தவில்லை. எவ்வாறாயினும் சமூக சேவைகள் உத்தியோகத்தர் விடயத்துக்கான பணிகளை சமூக சேவை உத்தியோகத்தர்கள் நிறைவேற்றுதலானது பதவி மற்றும் சேவைப் பிரமாணக் குறிப்பு ஆகியவற்றுக்கு இடையில் பிரச்சினைக்குரிய நிலைமை உருவாவதாக அவதானிக்கப்படுகிறது.

(உ) இரண்டாம் நிலை சேவை வகுதியின் கீழ் 09 தொழில் ஆலோசகர் பதவிகள் மற்றும் ஆரம்ப நிலைச் சேவை வகுதியின் கீழ் 09 புனர்வாழ்வு உதவியாளர் பதவிகளுக்காக முறைசாத ரீதியில் ஒப்பந்த அடிப்படையில் குறுகிய காலத்துக்கு ஆட்சேர்பதற்கு அனுமதி பெறப்பட்டது. 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ள போதும் சேவையின் தேவையின் நிமித்தம் அப் பதவிகளை நிரந்தர பதவியணியினரின் கீழ் அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், 2021 டிசம்பர் 31 இல் 07 தொழில் ஆலோசகர் பதவிகள் மற்றும் 05 புனர்வாழ்வு உத்தியோகத்தர் பதவிகளுக்கான வெற்றிடம் நிலவியது.

ஆகவே இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை, ஆரம்ப நிலை சேவை வகுதிகளில் நிலவும் பதவி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பில் பாதகமான தாக்கம் ஏற்பட்டிருந்தது.

கே.சீ.பி.சேனாரத்ன
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர்
கணக்காய்வாளருக்குப் பதிலாக.

அத்தியாயம் 04
நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு)

விசேடமான குறிகாட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மைநிலை வெளியீடு		
	90% - 100%	90% - 100%	90% - 100%
01. அங்கவீனமுற்ற நபர்களுக்கான நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கலந்துகொண்ட அங்கவீனமுற்ற நபர்கள் எண்ணிக்கை			√
02. விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் கீழ் நன்மைகளைப் பெற்ற நபர்கள் எண்ணிக்கை		√	
03. தொழிற் பயிற்சி பெறும் அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகள் மற்றும் தன்னார்வ நிறுவனங்களில் சேவை பெறுநர்களுக்கா நாளாந்த கொடுப்பனவு வழங்கப்பட்ட எண்ணிக்கை			√
04. சமுதாய மட்டத்திலான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தின் (சீ.பீ.ஆர்) கீழ் புனர்வாழ்வு பெற்ற /நன்மை பெற்ற அங்கவீனமுற்ற நபர்கள் எண்ணிக்கை	√		
05. கிளிநொச்சி தொழிற் பயிற்சி நிலையத்தை நிர்மாணித்தல்			√
06. மட்டக்களப்பு தொழிற் பயிற்சி நிலையத்தை நிர்மாணித்தல்	√		
07. புவக்பிட்டி மூளை வளர்ச்சி குன்றிய நபர்களுக்கான பாதுகாப்பு நிலையத்தை நிர்மாணித்தல்			√
08. உத்தியோகத்தர்களின் திறன் விருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட பயிற்சி எண்ணிக்கை	√		

அத்தியாயம் 05

நிலையான அபிவிருத்தி இலக்குகளினை (SDG) நிறைவேற்றுவதன் செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDG)

அடையாளம் காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகள்	இலக்குகள்	சாதனைக் குறிகாட்டிகள்	சதவீதம்		
			0 – 49%	50 – 74%	75 – 100%
4.5 அஙங்கவீனமுற்ற நபர்களுக்கு தொழிற் பயிற்சி பெறுவதற்கு சந்தர்ப்பம் வழங்குதல் மற்றும் கல்வியின் கசல மட்டங்களுக்கும் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பத்தை உறுதிசெய்தல்	16-35 வயதிற்கிடைப்பட்ட அங்கவீனமுற்ற 665 நபர்களுக்கு தொழிற் பயிற்சி வழங்குதல் மற்றும் திறன்களை விருத்தி செய்தல்	தொழிற் பயிற்சியினை நிறைவு செய்துள்ள அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளின் எண்ணிக்கை - 344		√	
	தொழிற் பயிற்சி பாடநெறி நவீனமயப்படுத்தல் மற்றும் NVQ மட்ட சான்றிதழ் வழங்குதல் - 30	NVQ மட்டம் பெற்ற பாடநெறி எண்ணிக்கை - 07	√		
	தொழிற் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்த பயிலுநர்களுக்கு உபகரணத் தொகுதிகளை வழங்குதல் 191	உபகரணத் தொகுதிகளை வழங்கிய பயிலுநர் எண்ணிக்கை - 190			√
	புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 02 புதிய தொழிற் பயிற்சி நிறுவனங்களை திறந்து வைத்தல்	திறந்து வைக்கப்பட்ட புதிய தொழிற் பயிற்சி நிறுவனங்கள் எண்ணிக்கை - 01		√	
	முன்பிள்ளைப் பருவத்தில் உள்ள அங்கவீனமுற்ற 150 பிள்ளைகளின் அங்கவீன நிலைமையை குறைப்பதற்காக தலையிடல்	அங்கவீன நிலைமையை குறைப்பதற்காக தலையிட்ட அங்கவீனமுற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை		√	
8.5 2030 ஆண்டளவில் அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளடங்கலாக அனைத்து ஆண், பெண் மற்றும் சிறந்த தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொடுத்தல்	தொழில் வாய்ப்பினை விரும்புகின்ற அங்கவீனமுற்ற நபர்களுக்காக சுய தொழில் வாய்ப்பு அல்லது நிறுவனத் தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான தொழிற் பயிற்சியினை ஒருங்கிணைத்தல்	தொழில் பெற்ற மற்றும் சுய தொழில் அனுப்பி சேவை பெற்றவர்கள் -257		√	

10.2 **2030 இல் வயது, பால்நிலை, அங்கவீனம், இனக்குழு, மதம் அல்லது வேறு நிலைமைகள் பற்றிக் கவனம் செலுத்தாது அனைவரதும் சமூக பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக பலப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல்**	பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களை இழந்த மூளை வளர்ச்சி குன்றிய 75 பேருக்கு விடுதிசார் பாதுகாப்பினை வழங்குதல்.	பாதுகாப்பு வழங்கப்பட்ட அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை - 76			√
	அங்கவீனமுற்ற நபர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட புதிய பாதுகாப்பு நிலையத்தை திறந்து வைத்தல்	நிர்மாணிக்கப்பட்ட புதிய பாதுகாப்பு நிலையம் -01			√
	போதைப் பொருளுக்கு அடிமையான 170 பேருக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகமயப்படுத்தல்	புனர்வாழ்வளிக்கப்பட்ட போதைக்கு அடிமையானவர்கள் எண்ணிக்கை - 139			√
	468 அங்கவீனமுற்ற நபர்களுக்கான வசதிகளை வழங்குதல்	வசதிகள் வழங்கப்பட்ட விழிப்புலனற்ற நபர்கள் எண்ணிக்கை -424			√
	சமுதாயஞ் சார் புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கவீனமுற்ற சமுகத்தைஅ பலப்படுத்தல் நேரடி உதவி - 133 விசேட கருத்திட்டம் - 55	gலப்படுத்தப்பட்ட எண்ணிக்கை நேரடி உதவி - 142 விசேட கருத்திட்டம் - 48			√

5.2 நிலையான அபிவிருத்தி இலக்குகளினைப் பூர்த்தி செய்வதிலுள்ள சாதனைகள் மற்றும் சவாவல்கள்

சமூக சேவைகள் திணைக்களத்தினூடாக தனது ஒதுக்கீடுகளுக்கு உட்பட்டு 03 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் கீழ் வருடாந்தம் கருத்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்படுகிறது. அவ்வாறு 2021 இல் திட்டமிடப்பட்ட பல நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முடிந்த போதும் சில நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வெற்றியை அடைந்து கொள்வதில் தடைகள் ஏற்பட்டது.

Covid 19 தாற்றுநோய் நிலைமை காரணமாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் கீழ் திணைக்களத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களை குறிப்பிடத்தக்க ஒரு காலம் மூடுவதற்கு நேரிட்டமை மற்றும் குறைந்த அளவு ஊழியர்களின் கீழ் கடமை மேற்கொள்வதற்கு நேரிடல் காரணமாக இலக்கு நோக்கிய வெற்றி மட்டத்தை அடைந்து கொள்ள முடியாது போனாலும் குறிப்பிடத்தக்க அறவு வெற்றியினை அடைந்து கொள்ள முடிந்தது.

அத்தியாயம் 06
மனித வளத் தோற்றுவாய்

6.1 ஆளணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	தற்போதுள்ள ஆளணி	வெற்றிடம்/ (மேலதிகம்) **
சிரேஸ்ட நிலை	09	08	01
முன்றாம் நிலை	491	259	*46
இரண்டாம் நிலை	576	462	*68
ஆரம்ப நிலை	125	105	20

* மூன்றாம் நிலை மட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட 480 சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டபோதிலும் MN 4 சம்பளத் தொகுதியின் சமூக அபிவிருத்தி உதவியாளர் பதவிகளினை வகிப்பவர்கள், சமூக சேவைகள் உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர், வகிப்பதற்கு பிரத்தியேகமான முறையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் இரத்துச் செய்யப்பட்டதன் பின்னரே அப்பதவியின் வெற்றிடங்களினைப் பூர்த்தி செய்யமுடியும்.

* அதேபோல மூன்றாம் நிலை மட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட MN 4 சம்பளத் தொகுதியின் சமூக அபிவிருத்தி உதவியாளர் பதவிகள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளினை வகிப்பதற்கு பிரத்தியேகமான வகையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதால், அப்பதவிகளில் ஏற்படும் வெற்றிடங்களினைப் பூர்த்தி செய்வதற்கு இயலுமை இல்லை. ஆததால் மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை தொடர்பில் உண்மையில் நிலவும் ஆளணி வெற்றிடங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளது

சமூக சேவைகள் திணைக்களத்தின் பதவியணி 2021-12-31

பதவி	சேவை	தரம்	சம்பள நிலை அ.நி.சு. 03/2016	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	தற்போதுள்ள ஆளணி	வெற்றிடங்கள்
பணிப்பாளர்	இ.நி.சே.	I	SL 1	1	1	0
மேலதிகப் பணிப்பாளர்	இ.நி.சே.	I	SL 1	1	1	0
பிரதான கணக்காளர்	இ.க.சே.	I	SL 1	1	1	0
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்	இ.க.சே.	I	SL 1	1	1	0
கணக்காளர்	இ.க.சே.	II/ III	SL 1	1	1	0
பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர்	இ.நி.சே.	II/ III	SL 1	3	2	1
சமூக நலன்புரி அத்தியட்சகர்	திணைக்களம்சார்	I /II/ III	SL 1	1	1	0
நிர்வாக உத்தியோகத்தர்	அ.மு.சே.உ. (விசேடம்)	உயர்தரம்	MN 7	1	0	1

நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்	திணைக்களம்சார்	special	MN 7	10	4	5
சமூக சேவைகள் உத்தியோகத்தர்	திணைக்களம்சார்	I /II	MN 5 MN 4	480	255	40
சமூக அபிவிருத்தி உதவியாளர் *	தொடர்புடைய சேவை	I /II/ III	MN 4	200	1	
அபிவிருத்தி உத்தியோகத்தர்**#	அ.உ. சேவை	I /II/ III		184	200	
விழிப்புலனற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்	திணைக்களம்சார்		MN 4		137	
பயிலுனர் மொழிபெயர்ப்பாளர்	திணைக்களம்சார்		MN 4	13	7	6
பிசியோதெரபிஸ்ட்	தொடர்புடைய சேவை		MN 4	1	0	1
தொழில்வாண்மை சிகிச்சையாளர்	குறைநிரப்பு மருத்துவ சேவை	I /II/ III	MT 6	1	0	1
பேச்சு சிகிச்சையாளர்	குறைநிரப்பு மருத்துவ சேவை	I /II/ III	MT 6	1	0	1
பணி முகாமையாளர்	திணைக்களம்சார்	I /II/ III	MT 6	1	0	1
வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர்	திணைக்களம்சார்	I /II/ III	MT 3	5	0	5
வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர்	திணைக்களம்சார்	I /II/ III	MT 1	65	48	17
வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர்	ஒப்பந்தம்சார்			9	2	7
தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்	இ.த.தொ. தொ.உ.சே..	I /II/ III	MT 1	1	1	0
முகாமைத்துவ சேவை உதவியாளர்	அ.மு.சே.உ.	I /II/ III	MN 2	48	43	5
சைகை மொழிபெயர்ப்பாளர்	திணைக்களம்சார்	I /II/ III	MN 2	26	6	20
முன்பள்ளி ஆசிரியர்	திணைக்களம்சார்	I /II/ III	MN 1	3	3	0
விடுதிக் காப்பாளர்	திணைக்களம்சார்	I /II/ III	MN 1	18	14	4
சாரதி	சாரதி சேவை	I /II/ III	PL 3	13	11	2
சமையற்காரர்	திணைக்களம்சார்	I /II/ III/special	PL 2	9	5	4
சிறுவர் அபிவிருத்தி உதவியாளர்	திணைக்களம்சார்	I /II/ III/special	PL 1	5	5	0
சமையல் உதவியாளர்	திணைக்களம்சார்	I /II/ III/special	PL 1	15	13	2
பராமரிப்பாளர்	திணைக்களம்சார்	I /II/ III/special	PL 1	32	32	0
அலுவலகப் பணியாளர்	அ.ப.சே.	I /II/ III/special	PL 1	42	34	8
புனர்வாழ்வு உதவியாளர்	ஒப்பந்தம்சார்		PL 1	9	5	4
மொத்தம்				**1201**	**834**	**135**

* வெற்றிடங்களினை நிரப்பாததன் கீழ்

** வகிப்பதற்கு பிரத்தியேகமான முறையின் பின்னர் இரத்துச் செய்வதன் கீழ்

*** அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை யாப்புக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு வருகிறது

6.2 நிறுவனத்தின் செயலாற்றுகை மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கஞ் செலுத்தியுள்ள முறைமை

சமூக சேவைகள் திணைக்களத்துடன் தொடர்பிலான அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் மிகையொன்று இல்லை என்பதுடன், தற்போதுள்ள பதவியணியில் பற்றாக்குறையே நிலவுகின்றது. எனினும், பொது நிர்வாக அமைச்சினால் சமூக சேவைகள் திணைக்களத்திற்கு மூன்று அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைப்புச் செய்யப்படல் காரணமாக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளில் மிகை காணப்படுகிறது. ஆயினும் அந்த நியமனங்களைப் பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் துசிய முதியோர் செயலகத்தில் கடமை புரிதல் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் மிகை காணப்படினும்அவர்களால் ஆற்றப்படும் கடமைப் பொறுப்பில் பயனுள்ளவாறு மனித வளம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

கொவிட் தொற்றுநோய் காரணமாக அரச செலவினங்கள் மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால் பதவியணியில் நிலவும் பல வெற்றிடங்களை நிரப்புவுதற்கு முடியவில்லை. ஆகவே தற்போதுள்ள தஸ்ரீமனித வளத்தை சேவையின் தேவைப்பாட்டுக்கு அமைவாக நியாயமான முறையில் பரவ்ச் செய்து திணைக்களத்தின் பணிகளை பயனுள்ளவாறு மற்றும் செயற்திறனுடன் நிறைவேற்றுவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றுகை மட்டத்தை அடைந்து கொள்வதற்கு வழிநடாத்தப்பட்டது.

6.3 மனித வள அபிவிருத்தி

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி வழங்கப் பட்ட பயிலுனர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டத்தின் காலவரையறை	மொத்த முதலீடு (ரூபா.)	நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாடு/வெளிநாடு)	வெளியீடு/பெற்றுக் கொண்ட அறிவு
நிதி ஒழுங்கு விதிகள் தொடர்பான அறிவை இற்றைப்படுத்தும் பயிற்சி (நிகழ்நிலை)	36	01 நாள்	25,987.50	உள்நாடு	நிதி ஒழுங்கு விதிகள் தொடர்பான அறிவு இற்றைப்படுத்தப்படல்
தாபன விதிக் கோவை மற்றும் நடைமுறை விதிகள் தொடர்பான அறிவை இற்றைப்படுத்தும் பயிற்சி (நிகழ்நிலை)	24	01 நாள்	22,725.00	உள்நாடு	தாபன விதிக் கோவை தொடர்பான அறிவு இற்றைப்படுத்தப்படல்
உற்பத்தி திறன் எண்ணக்கருவை நடைமுறைப்படுத்தல் தொடர்பான பயிற்சி	40	01 நாள்	10,013.50	உள்நாடு	நிறுவனத்தில் உற்பத்தி திறன் எண்ணக்கருவை நடைமுறைப்படுத்தல் தொடர்பான அறிவு
அரச ஒழுக்காற்று நடைமுறை விதிகள் (நிகழ்நிலை)	1	03 நாள்	5,000.00	உள்நாடு	அரச ஒழுக்காற்று நடைமுறை விதிகள் பற்றிய அறிவு
களஞ்சிய முகாமைத்துவம், இருப்புக் கட்டுப்பாடு, இருப்புக் கணிப்பீடு மற்றும் சொத்து முகாமைத்துவம் (நிகழ்நிலை)	41	01 நாள்	37,786.12	உள்நாடு	களஞ்சிய முகாமைத்துவம், இருப்புக் கட்டுப்பாடு, இருப்புக் கணிப்பீடு மற்றும் சொத்து முகாமைத்துவம் தொடர்பான அறிவு

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி வழங்கப்பட்ட பயிலுனர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டத்தின் காலவரையறை	மொத்த முதலீடு (ரூபா.)	நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாடு/வெளிநாடு)	வெளியீடு/பெற்றுக் கொண்ட அறிவு
சமூக நலன்புரி கொள்கை மற்றும் நிர்வாகம் (பௌதீகமாக 21 உத்தியோகத்தர்கள் மற்றும் நிகழ்நிலை முறையில் 169)	190	01 நாள்	14,330.50	உள்நாடு	சமூக நலன்புரி கொள்கை பற்றிய அறிவு
"அலுவலக உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களின் கடமைப் பொறுப்பு மற்றும் மனோபாவ அபிவிருத்தி" தொடர்பான பயிற்சி (நிகழ்நிலை)	27	01 நாள்	31,387.50	உள்நாடு	மனோபாவ அபிவிருத்தி
கருத்திட்ட அறிக்கை தயாரித்தல் (சிங்கள மொழி மூலம்) (நிகழ்நிலை)	57	01 நாள்	29,700.00	உள்நாடு	கருத்திட்ட அறிக்கை தயாரித்தல் பற்றிய அறிவு - சிங்கள மொழி மூலம்
அரசாங்க பெறுகைச் செயன்முறை தொடர்பான பயிற்சி (நிகழ்நிலை)	62	06 நாள்	31,050.00	உள்நாடு	அரசாங்க பெறுகைச் செயன்முறை தொடர்பான அறிவு
கருத்திட்ட அறிக்கை தயாரித்தல் (தமிழ் மொழி மூலம்) (நிகழ்நிலை)	47	01 நாள்	28,350.00	உள்நாடு	கருத்திட்ட அறிக்கை தயாரித்தல் பற்றிய அறிவு - தமிழ் மொழி மூலம்
வணிகத் திட்டமிடல் (சிங்கள மொழி மூலம்) - செயலமர்வு - 01 (நிகழ்நிலை)	60	01 நாள்	29,700.00	உள்நாடு	வணிகத் திட்டமிடல் பற்றிய அறிவு - சிங்கள மொழி மூலம்
Master of Public Management (MPM) Programme 2020-2022 – திருமதி என்.ஜி.பி.ஜீ.சமரவிக்ரம (பிரதி பணிப்பாளர் (நிர்வாகம்)	1	02 ஆண்டு	343,500.00	உள்நாடு	அரச முகாமைத்துவம் தொடர்பான அறிவு
வணிகத் திட்டமிடல் (தமிழ் மொழி மூலம்) (நிகழ்நிலை)	47	01 நாள்	28,350.00	உள்நாடு	வணிகத் திட்டமிடல் பற்றிய அறிவு - சிங்கள / தமிழ் மொழி மூலம்
வணிகத் திட்டமிடல் (சிங்கள மொழி மூலம்)- செயலமர்வு -02 (நிகழ்நிலை)	60	01 நாள்	29,7000.00	உள்நாடு	
Formal Letter Writing Skills (நிகழ்நிலை)	7	03 நாள்	35,000.00	உள்நாடு	ஆங்கில மொழியில் கடிதம் எழுதுதல் பற்றிய அறிவு
அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் தயாரித்தல் தொடர்பான பயிற்சி (நிகழ்நிலை)	10	01 நாள்	50,000.00	உள்நாடு	அரச சம்பளம் தயாரிதடதல் பற்றிய அறிவு
Ms-Acess (Online)	1	01 நாள்	2,000.00	உள்நாடு	கணணி அறிவு
Advanced Ms-Excel Skills (Online)	3	02 நாள்	10,500.00	உள்நாடு	கணணி அறிவு

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி வழங்கப்பட்ட பயிலுனர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டத்தின் காலவரையறை	மொத்த முதலீடு (ரூபா.)	நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாடு/வெளிநாடு)	வெளியீடு/பெற்றுக் கொண்ட அறிவு
அரச காணி கையகப்படுத்தல் (நிகழ்நிலை)	20	01 நாள்	28,845.00	உள்நாடு	அரச காணி கையகப்படுத்தல் முறை பற்றிய அறிவு
ஆன்மீக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	60	04 மணி	18,480.00	உள்நாடு	உத்தியோகத்தர்களின் ஆன்மீக அபிவிருத்தி
முற்பண பீ கணக்கு (நிகழ்நிலை)	1	01 நாள்	3,750.00	உள்நாடு	கணக்கு நடவடிக்கைகள் பற்றிய அறிவு
சமூக விஞ்ஞான பட்டப்பின் கற்கை - திருமதி இரேஷா உதயங்கனி - அபிவிருத்தி உத்தியோகத்தர் (இரண்டாம் கட்டம்)	1	01 ஆண்டு	25,000.00	உள்நாடு	சமூக விஞ்ஞானம் பற்றிய அறிவு
சமூக விஞ்ஞான பட்டப்பின் கற்கை திருமதி ரசிகா வெல்கம - அபிவிருத்தி உத்தியோகத்தர் (இரண்டாம் கட்டம்)	1	01 ஆண்டு	25,000.00	உள்நாடு	சமூக விஞ்ஞானம் பற்றிய அறிவு
ஆலோசனை தொடர்பான டிப்ளோமா பாடநெறி – திரு எஸ்.டப்.எம்.எம்.சேமசிங்க (அபிவிருத்தி உத்தியோகத்தர் - மஹகும்புக்கடவல பி.செ) - (இரண்டாம் கட்டம்)	1	02 ஆண்டு	25,000.00	உள்நாடு	ஆலோசனை தொடர்பான அறிவு
கணணி பயிற்சி (நிகழ்நிலை) - (வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு)	60	03 நாள்	77,737.50	உள்நாடு	கணணி அறிவு
ஆராய்ச்சி முறை பற்றிய பயிற்சி (நிகழ்நிலை)	60	01 நாள்	36,450.00	உள்நாடு	ஆராய்ச்சிப் பத்திரம் தயாரித்தல் பற்றிய அறிவு
சேவை ஆரம்பித்தல் பயிற்சி - தொ.ஆலோசகர், விடுதி காப்பாளர், முன்பள்ளி ஆசிரியர் (நிகழ்நிலை)	12	03 மாதம்	36,600.00	உள்நாடு	தொழிற் பயிற்சி நிறுவனங்களின் பணிகள் மற்றும் கற்றல் முறை பற்றிய அறிவு
கணணி பயிற்சி (நிகழ்நிலை) – தொழிற் பயிற்சி நிறுவன உத்தியோகத்தர்களுக்கு	60	03 நாள்	77,737.50	உள்நாடு	கணணி அறிவு
ஆரம்ப முதலுதவி பயிற்சி - புவக்பிட்டிய நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு	26	01 நாள்	25,500.00	உள்நாடு	ஆரம்ப முதலுதவி எவ்வாறு வழங்குதல் என்பது பற்றிய அறிவு
தாபன ரீதியான பயிற்சிக்கான பதவியணியின் பங்களிப்பினை மேம்படுத்தும் நாளாந்த செயலமர்வு	15	02 நாள்	93000.00	உள்நாடு	தலைமைத்துவ திறமைகளை அபிவிருத்தி செய்தல்

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்சி வழங்கப்பட்ட பயிலுனர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டத்தின் காலவரையறை	மொத்த முதலீடு (ரூபா.)	நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாடு/வெளிநாடு)	வெளியீடு/பெற்றுக் கொண்ட அறிவு
சமிக்ஞை மொழிப் பயிற்சி - மாத்தளை மாவட்டம்	15	05 நாள்	அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் நிதி ஒத்துழைப்பின் கீழ்	உள்நாடு	மிக்ஞை மொழி தொடர்பான பயிற்சி
சமிக்ஞை மொழிப் பயிற்சி - அநுராதபுரம் மாவட்டம்	17	06 மாதம்		உள்நாடு	மிக்ஞை மொழி தொடர்பான பயிற்சி
Online Training Programme on Cyber Security	166	06 மணி	இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் (ICTA) நிதி ஒத்துழைப்பு	உள்நாடு	இணையப் பாதுகாப்பு பற்றிய அறிவு பெறல்
Online Training on Child Disabilities	235	09 மணி	MJF Charitable Foundation நிறுவனத்தின் நிதி ஒத்துழைப்பு	உள்நாடு	அங்கவீனமுற்ற பிள்ளைகளை இனம் காணல் மற்றும் அப் பிள்ளைகளின் அங்கவீன நிலைமையை தவிர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை, சிறுவர் அபிவிருத்தி தொடர்பான அறிவு
Jica Knowledge Co-creation Programme capacity Develpoment of Leaders with disabilities for (UNCRPD) Japan (Online)	01	24 நாள்		வெளிநாடு	அங்கவீனமுற்ற நெபர்களின் தலைமைத்துவ திறன்களை விருத்தி செய்தல் தொடர்பான அறிவு
Online Training on Empowering Persons with disabilities and special needs (Singapore)	01	05 நாள்		வெளிநாடு	விசேட தேவையுடைய மற்றும் அங்கவீனமுற்ற சமூகத்தை பலப்படுத்துவதற்கான அறிவு
JICA ECCP Online Programme Intellectural and Development disabilities in Cmmunity Activities	02	08 நாள்		வெளிநாடு	அறிவாற்றல் மூலம் அங்கவீனமுற்ற நபர்கள் அபிவிருத்தி செய்யும் விதம் பற்றிய அறிவு

6.3.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் பங்களிப்பு

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் 800 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் இலங்கை முழுவதும் மாவட்டம், பிரதேசம் மற்றும் நிறுவன ரீதியில் பிரதேச மட்டம் முதல் தேசிய மட்டம் வரை தனது கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றார்கள்.

இந்த உத்தியோகத்தர்களைக் கொண்டு மிகவும் உன்னதமான ஒரு சேவையினை மக்களுக்கு வழங்குவதாயின் அவர்களிடம் உள்ள அறிவு, திறன் மனப்பாங்கு என்பவற்றை இற்றைப்படுத்தல் கட்டாயம் இடம்பெற வேண்டும் என்பதுடன் அதற்காக அடிக்கடி பயிற்சி வழங்குதல் தேவைப்படுகிறது. இதன் மூலம் திணைக்கள செயலாற்றுகையினை மேம்படுத்த முடியும்.

2021 ஆம் ஆண்டினுள் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளின் கீழ் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டபோதிலும் அவ்வருடத்தில் நாட்டில் நிலவிய கொவிட் -19 தொற்றுநோய் சூழ்நிலையினை எதிர்கொண்டு அவ்வருடத்தில் அதிகளவிலான நாட்கள் வீட்டிலேயேயிருந்து கடமையினை நிறைவேற்றுவதற்கு நேரிட்டுள்ளதாலும் மற்றும் சுகாதார வழிகாட்டுதலன் கீழ் உத்தியோகத்தர்களினை ஒன்றுகூட்டி நிகழ்ச்சித் திட்டங்களினை முன்னெடுப்பதற்கு முடியமாமற் போனமையினாலும் வருட ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்த பல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அக்காலப்பகுதியினுள் இடம்பெறுவதற்கு முடியாமற் போயுள்ளது. தடைகள் இருந்தபோதிலும் திணைக்கள உத்தியோகத்தர்ளின் திறன் விருத்தியினை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு வீடுகளிலிருந்து கடமையினை நிறைவேற்றிய உத்தியோகத்தர்களினையும் தொடர்புபடுத்தி அதிகளவிலான உத்தியோகத்தர்களின் பங்குகொள்ளலுடன், திணைக்களத்திற்கும் ஒரு புதிய அனுபவத்தினைச் சேர்த்து ஒன்லைன் ஊடாக பல்வேறு பயிற்சி வாய்ப்புக்களினை வழங்குதல் இடம்பெற்றுள்ளது.

அத்தியாயம் 07
இணக்க அறிக்கை

இலக்கம்	பிரயோகிக்கப்பட வேண்டிய தேவை	இணக்க நிலவரம் (இணக்கமானது/இணங்காமை	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமாக விளக்குதல்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான முடிவு நடைமுறைகள்
1	பின்வரும் நிதிக் கூற்றுக்கள்/கணகுக்கள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன			
1.1	வருடாந்த நிதிக் கூற்றுக்கள்	இணக்கமானது		
1.2	அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு	இணக்கமானது		
1.3	வர்த்தக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வணிக முற்பணக் கணக்கு)	ஏற்புடையதல்ல		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு			
1.5	விசேட முற்பணக் கணக்கு			
1.6	பிற			
2	புத்தகங்கள் மற்றும் ஏடுகளினைப் பராமரித்தல்) நி.பி(445 .			
2.1	பொது நிர்வாக சுற்றுநிரூபம் 267/2018 இன் பிரகாரம் நிலையான சொத்து பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்.	இணக்கமற்றது	நிதிக் கூற்று சுற்ற றிக்கை மூலம் கட்டாயமாக்கப் படவில்லை	
2.2	ஆளுக்குரிய வேதனாதி ஏடு/ஆளுக்குரிய வேதனாதி அட்டைகளினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்.	இணக்கமானது		
2.3	கணக்காய்வு விசாரணை ஏட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்.	இணக்கமானது		
2.4	உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் ஏட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்.	இணக்கமானது		
2.5	சகல மாதாந்த கணக்குப் பொழிப்புக்களினை (CIGAS) தயாரித்து குறிப்பிட்ட தினத்தில் பொதுத் திறைசேரிக்கு முன்வைத்தல்.	இணக்கமானது		
2.6	காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்.	இணக்கமானது		
2.7	பொருட் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்.	இணக்கமானது		
2.8	இருப்புப் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்.	இணக்கமானது		
2.9	இழப்பு நட்டம் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல் .	இணக்கமானது		

இலக்கம்	பிரயோகிக்கப்பட வேண்டிய தேவை	இணக்க நிலவரம் (இணக்கமானது/இணங்காமை	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமாக விளக்குதல்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான முடிவு நடைமுறைகள்
2.10	பொறுப்புக்களின் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்.	இணக்கமானது		
2.11	அடிக்கட்டைப் புத்தகங்களின் (GA-N20) பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்.	இணக்கமானது		
03	நிதி முகாமை தொடர்பிலான செயற்பாடுகள் (நி.பி.135)			
3.1	நிதி அதிகார நிறுவனத்தினுள் அதிகாரங்கள் பகிரப்படுதல்.	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை தொடர்பில் நிறுவனத்தினுள் விழிப்புணர்வூட்டப்பட்டிருத்தல்.	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் இரண்டு உத்தியோகத்தர்கள் அல்லது அதற்கு அதிகமான எண்ணிக்கையினைக் கொண்ட உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கக்கூடியவாறு அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருத்தல்.	இணக்கமானது		
3.4	2014.05.11 ஆந் திகதிய 171/2004 என்ற இலக்க பொதுக் கணகுக்கள் சுற்றுநிரூபத்தின் பிரகாரம் ,அரசின் ஊதிய மென்பொருள் பொதியினைப் பாவிக்கும்போது கணக்காளர்களின் முகாமையின் கீழ் நடவடிக்கைகளினை எடுத்தல்	இணக்கமானது		
4	வருடாந்த திட்டங்களினைத் தயாரித்தல்			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல்.	இணக்கமானது		
4.2	வருடாந்தக் கொள்முதல் திட்டத்தினைத் தயாரித்தல்			
4.3	வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல்.	இணக்கமானது		
4.4	வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரித்து தேசியப் பாதீட்டுத் திணைக்களத்திற்கு (NBD) குறிப்பிட்ட தினத்தில் முன்வைத்தல்.	இணக்கமானது		
4.5	வருடாந்த காசு பாய்ச்சல் கூற்றினை குறிப்பிட்ட தினத்திற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு முன்வைத்தல்.	இணக்கமானது		
5	கணக்காய்வு விசாரணைகள்			
5.1	கணக்காய்வாளர் அதிபதியினால் விதிக்கப்பட்ட தினத்தில் சகல கணக்காய்வு விசாரணைகளுக்கும் மறுமொழிகளினை வழங்கியிருத்தல்.	இணக்கமானது		

இலக்கம்	பிரயோகிக்கப்பட வேண்டிய தேவை	இணக்க நிலவரம் (இணக்கமானது/இணங்காமை	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமாக விளக்குதல்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான முடிவு நடைமுறைகள்
6	உள்ளகக் கணக்காய்வு			
6.1	நி.பி.134(2) DMA/1-2019 இன் பிரகாரம் வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்துரையாடியதன் பின்னர் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல்.	இணக்கமானது		
6.2	சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாத காலப்பகுதியினுள் விடையளித்திருத்தல்.	இணக்கமற்றது	தகவல் பெறும் பணிகளுக்கு காலம் கழிதல்	எழுத்துமூல, வாய்மொழி மூல ஆலோசனை வழங்குதல்
6.3	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவின் பிரகாரம் சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளினை முகாமைத்துவம் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு முன்வைத்திருத்தல் .	இணக்கமானது		
6.4	நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம் சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளினை கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்திருத்தல்.	இணக்கமானது		
7	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு			
7.1	DMA சுற்றுநிரூபம் 1-2019 இன் பிரகாரம் ஆகக் குறைந்த வகையில் 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களாவது உரிய வருடத்தினுள் முன்னெடுத்திருத்தல்.	இணக்கமானது	முகாமைத்துவ, கணக்காய்வு திணைக்களத்தின் இல. DMA/AMC/N/2021/2 மற்றும் 2021.08.06 திகதிய கடிதம் பிரகாரம் 04 குழுக் கூட்டங்கள் நடத்தும் தேவைப்பாடு விடுவிக்கப்பட்டுள்ளது	
8	ஆதன முகாமைத்துவம்			
8.1	01/2017 என்ற இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றிநிரூபத்தின் 07 வது அத்தியாயத்தின் பிரகாரம் சொத்துக்களினைக் கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பிலான தகவல்களினை கொம்றோலர் ஜனரால் அலுவலகத்திற்கு முன்வைத்திருத்தல்.	இணக்கமானது		
8.2	மேற்குறிப்பிட்ட சுற்றுநிரூபத்தின் 13 வது அத்தியாயத்தின் பிரகாரம் அச் சுற்றுநிரூபத்தின் ஏற்பாடுகளினை அமுலாக்குவதை ஒருங்கிணைப்பதற்கு பொருத்தமான இணைப்பு உத்தியோகத்தர் ஒருவரினை நியமித்து அவ் உத்தியோகத்தர் தொடர்பிலான தகவல்கள் கொம்றோலர் ஜனரால் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருத்தல்.	இணக்கமானது		

இலக்கம்	பிரயோகிக்கப்பட வேண்டிய தேவை	இணக்க நிலவரம் (இணக்கமானது/இணங்காமை	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமாக விளக்குதல்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான முடிவு நடைமுறைகள்
8.3	அரச நிதிச் சுற்றுநிரூப இலக்கம் 05/2016 இன் பிரகாரம் ,பொருட் கணக்கெடுப்பு ஆய்வுகளினை முன்னெடுத்து உரிய அறிக்கைகளினை குறிப்பிட்ட தினத்தன்று கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்திருத்தல்.	இணக்கமானது		
8.4	வருடாந்த பொருட் கணக்கெடுப்பு ஆய்வில் வெளிக் கொணரப்பட்ட மேலதிகம் , பற்றாக்குறை மற்றும் பிற பரிந்துரைகளினை , சுற்றுநிரூபத்தில் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் முன்னெடுக்கப்பட்டிருத்தல்.	இணக்கமானது		
8.5	முதிர்வடைந்த பொருட்களினை அகற்றுதல் நி.பி .772 இன் பிரகாரம் முன்னெடுத்திருத்தல்.	இணக்கமானது		
9	வாகன முகாமைத்துவம்			
9.1	குழாம் வாகனங்கள் தொடர்பில் தினசரி ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்தப் பொழிப்பு அறிக்கைகளினைத் தயாரித்து குறிப்பிட்ட தினத்தில் கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்தல்.	இணக்கமானது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்களினை கழிப்பனவு செய்யப்பட்டு 06 மாதங்களுக்குள் அகற்றுதல்.	இணக்கமானது		
9.3	வாகன லொக் புத்தகங்களினைப் பேணும்போது அவற்றினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்தல்.	இணக்கமானது		
9.4	சகல வாகன விபத்துக்கள் தொடர்பிலும் நி.பி. 103,104,109 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் .	இணக்கமானது		
9.5	2016.12.29 ஆந் திகதிய 2016/30 என்ற இலக்க பொது நிர்வாக சுற்றுநிரூபத்தின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீளவும் பரீட்சித்தல்.	இணக்கமானது		
9.6	குத்தகைக் காலத்திற்குப் பிறகு, குத்தகை வாகன லொக் புத்தகங்களின் முழு உரிமையினையும் ஒப்படைத்திருத்தல்.	இணக்கமானது		
10	வங்கிக் கணக்கினை முகாமை செய்தல்.			
10.1	குறிப்பிட்ட தினத்தன்று வங்கி இணக்கக் கூற்றுக்களினைத் தயாரித்து உறுதிப்படுத்தி அவற்றினைக் கணக்காய்வுக்கு முன்வைத்திருத்தல் .	இணக்கமானது		
10.2	மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முன்னரான ஆண்டுகளிலிருந்து முன் கொண்டுவரப்பட்ட செயலற்ற வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்.	இணக்கமானது		

இலக்கம்	பிரயோகிக்கப்பட வேண்டிய தேவை	இணக்க நிலவரம் (இணக்கமானது/இணங்காமை	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமாக விளக்குதல்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான முடிவு நடைமுறைகள்
10.3	வங்கி இணக்கக் கூற்றுக்களில் வெளிக்கொணரப்பட்ட மற்றும் இணக்கஞ் செய்யவேண்டியிருந்த மீதிகள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அம் மீதிகளினை ஒரு மாதக் காலப்பகுதியினுள் தீர்த்தல்.	இணக்கமானது		
11	ஒதுக்கீட்டுப் பயன்பாடு			
11.1	செய்யப்பட்ட ஏற்பாடுகளினை அவற்றின் வரையறையினை மீறாத வகையில் செலவுகளினை ஈடுசெய்தல்.	இணக்கமானது		
11.2	நி.பி. 94(1) இன் பிரகாரம் செய்யப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து பயன்படுத்தப்பட்ட பின்னர் ஆண்டு இறுதியின் மீதி ஒதுக்கீடுகளின் வரையறையினைத் தாண்டாத வகையில் பொறுப்புக்களுக்கு வருதல்.	இணக்கமற்றது	சில போது கட்டுப்படுத்த முடியாது போதல்	
12	அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள்			
12.1	கட்டுப்பாடுகளுக்கு இணங்குதல்	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் மீதிகள் தொடர்பில் காலப் பகுப்பாய்வொன்றினை முன்னெடுத்திருத்தல்.	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையிலுள்ள கடன் மீதியினைத் தீர்த்திருத்தல்.	இணக்கமானது		
13	பொது வைப்புக் கணக்கு			
13.1	தாமதமான வைப்புத் தொடர்பில் நி.பி .571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருத்தல் .	இணக்கமானது		
13.2	பொது வைப்புத் தொடர்பிலான வைப்புக் கணக்கினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்திருத்தல்.	இணக்கமானது		
14	கட்டுநிதிக் கணக்கு			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியின் காசுப் புத்தகத்தின் மீதியினை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்புதல்	இணக்கமானது		
14.2	நி.பி .371 இன் பிரகாரம் தற்செயலான இடைக்கால கட்டுநிதியினை அத்தகைய பணி நிறைவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படுதல்.	இணக்கமானது		
14.3	நி.பி .371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வரையறையினை மீறாத தற்காலிக இடைக்கால கட்டுநிதி வழங்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
14.4	கட்டுநிதிக் கணக்கு மீதியினை , திறைசேரியின் புத்தகங்களுடன் மாதாந்தம் .ஒப்புரவு செய்தல்	இணக்கமானது		

இலக்கம்	பிரயோகிக்கப்பட வேண்டிய தேவை	இணக்க நிலவரம் (இணக்கமானது/இணங்காமை	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமாக விளக்குதல்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான முடிவு நடைமுறைகள்
15	வருமானக் கணக்கு			
15.1	உரிய விதிமுறைகளுக்கிணங்க திரட்டப்பட்ட வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்துதல் இடம்பெற்றிருத்தல்.	ஏற்புடையதல்ல		
15.2	திரட்டப்பட்டிருந்த வருமானத்தினை வைப்புக் கணக்குக்கு வரவிடாது நேரடியாக வருமானத்திற்கு வரவிட்டிருத்தல்.	ஏற்புடையதல்ல		
15.3	நி.பி .176 இன் பிரகாரம் நிலுவை வருமான அறிக்கைகளினை கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்திருத்தல் .	ஏற்புடையதல்ல		
16	மனித வள முகாமைத்துவம்			
16.1	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி வரையறையினுள் பதவியணியினை முன்னெடுத்தல்.	இணக்கமற்றது	அரச நிர்வாக அமைச்சினால் புதிதாக நியமனம் பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களை சமூக சேவை திணைக்களத்துக்கு இணைப்புச் செய்தலின் கீழ்	பதவியணிக்கு மேலதிகமாக கடமை புரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பெயர்பட்டியல் மற்றும் நி.ஒ.71 விண்ணப்பங்களை முகாமைத்துவ சேவை திணைக்களத்துக்கு அனுப்பி பதவியணியில் மிகையாக உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளை அங்கீகரிப்பதற்கு தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
16.2	பதவியணியின் சகல அங்கத்தவர்களுக்கு கடமைப் பட்டியல்கள் எழுத்துமூலம் வழங்கப்பட்டிருத்தல்.	இணக்கமானது		
16.3	20.09.2017 ஆந் திகதிய MSD சுற்றுநிரூப இலக்கம் 04/2017 இன் பிரகாரம் சகல அறிக்கைகளினை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைத்திருத்தல்.	இணக்கமானது		
17	பொதுமக்களுக்குத் தகவல்களினை வழங்குதல்.			
17.1	தகவல்கள் அறிந்துகொள்ளும் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல்களினை வழங்கும் ஆவணமொன்று நாளதுவரைப்படுத்தப்பட்டு முன்னெடுத்தல்.	இணக்கமானது		

இலக்கம்	பிரயோகிக்கப்பட வேண்டிய தேவை	இணக்க நிலவரம் (இணக்கமானது/இணங்காமை	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமாக விளக்குதல்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான முடிவு நடைமுறைகள்
17.2	நிறுவனம் தொடர்பிலான தகவல்கள் அதன் இணையத் தளத்தினூடாக வழங்கப்படுதல் , இணையத்தளத்தினூடாக அல்லது மாற்று வழிகளினூடாக நிறுவனம் தொடர்பில் பொதுமக்களின் புகார்கள்/குற்றச்சாட்டுக்களினை வெளிப்படுத்துவதற்கு வசதிகள் வழங்கப்பட்டிருத்தல்.	இணக்கமானது		
17.3	தகவல்களினை அறிந்துகொள்ளும் சட்டத்தின் 08 வது மற்றும் 10 வது பிரிவின் பிரகாரம் வருடமொன்றுக்கு இரு தடைவை அல்லது வருடமொன்றுக்கு ஒரு தடைவை அறிக்கைகள் முன்வைக்கப்பட்டிருத்தல்.	இணக்கமானது		
18	பிரஜைகள் பட்டயத்தினை அமுலாக்குதல்			
18.1	05/2008 மற்றும் 05/2018 (1) என்ற இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றுநிரூபத்தின் பிரகாரம் பிரஜைகள்/ பயனாளிகள் பட்டயம் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருத்தல்.	இணக்கமானது		
18.2	அச்சுற்றுநிரூபத்தின் .2.3 பந்தியின் பிரகாரம் பிரஜைகள்/பயனாளிகள் பட்டயத்தினைத் தயாரித்தல் மற்றும் அமுலாக்கும் செயற்பாடுகளினை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு தொடர்பில் நிறுவனங்களினூடாக மூலோபாயமொன்று தயாரிக்கப்பட்டிருத்தல்.	இணக்கமானது		
19	மனித வளத் திட்டத்தினைத் தயாரித்தல்			
19.1	2018.01.24 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றுநிரூப இலக்கம் 02/2018 இணைப்பு 02 படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருத்தல்.	இணக்கமானது		
19.2	பதவியணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணிநேரப் பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்குறிப்பிட்ட மனித வளத் திட்டத்தினுள் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் .	இணக்கமானது		
19.3	மேற்குறிப்பிட்ட சுற்றுநிரூபத்தின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு அனைத்துப் பதவியணிக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டிருத்தல் .	இணக்கமற்றது	உரியவாறு நடைமுறைப்படுத்துவதற்கு முடியாது போனது	2022 இல் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது
19.4	மேற்குறிப்பிட்ட சுற்றுநிரூபத்தின் 6.5 வது பந்தியின் பிரகாரம் மனித வளத் திட்டத்தினைத் தயாரித்தல் , திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை மேம்படுத்துதல் ,திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல் தொடர்பில் பொறுப்புக்களினை ஒப்படைத்து மூத்த உத்தியோகத்தர் ஒருவரினை நியமித்தல்.	இணக்கமானது		
20	கணகாய்வுப் பந்திகளுக்குப் பதிலளித்தல்			
2.01	கடந்த ஆண்டு தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியினால் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வுப் பந்திகளினூடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சீர் செய்யப்பட்டிருத்தல்.	இணக்கமானது		